விலை ரூபா 20 பக்கங்கள் 28

**ஏவுகணை பரிசோதனை; தயாராகும் வடகொரியா**

உலக நாடுகள் எதிர்ப்பு



பக். 14-15

# உதயன்

30°c - 23°c

தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 74 வள்ளுவர் ஆண்டு 2047 தை 25, திங்கட்கிழமை 08.02.2016

முச்சந்தி முரளி



எல்லோரும் இந்த ஆண்டுக்குள் தீர்வு என்றார்கள் பார்ப்போம்

# எங்கள் சொந்த நிலத்தையும் உறவுகளையும் விடுவியுங்கள்

## வலி.வடக்கு மக்களும் காணாமற்போனோரின் உறவுகளும் மனித உரிமை ஆணையாளரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 8

எங்களின் சொந்த நிலங்களுக்கு எங்களை விடுவியுங்கள் என்று வலி.வடக்கு மக்களும், எங்கள் உறவுகள் எங்கே என்று காணாமற் போனோரின் உறவினர்களும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன் காணாமற் போனோரின் உறவுகள் வடக்கு முதலமைச்சர் அலுவலகத்தின் முன்பாக, தங்களின் உறவுகளின் படங்களைத் தாங்கி நின்றிருந்தபோது, வாகனத்திலிருந்து இறங்கிய ஹுசேன், அவர்களுக்கு வணக்கம் செலுத்தி அவர்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

அதேபோன்று வலி.வடக்கு மக்கள் தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தி னுள் சென்று மக்களுடன் மக்களாகக் கலந்துரையாடல் நடத்தினார். பக். 25



## கைது வரிசையில் அடுத்தது பசில், நாமல்

கொழும்பு, பெப்.8

அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில், பசில் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜ பக்ச ஆகியோர் அடுத்ததாகக் கைதுசெய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே லீடர் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

நிதிமோசடிக் குற்றச்சாட்டில், யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டு விளக்க மறி பக். 24

# அடுத்த தடவை உங்களை சொந்த வீட்டில் சந்திப்பேன்

## நலன்புரி முகாம் மக்களிடம் ஐ.நா. ஆணையாளர் உறுதி

யாழ்ப்பாணம், பெப். 8

அடுத்த தடவை உங்களைச் சந்திக்கும்போது, உங்களின் சொந்த மண்ணிலேயே சந்திப்பேன் என்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள வலி.வடக்கு மக்களிடம் உறுதியளித்தார்.

அத்துடன் காணாமற்போனோர் விவகாரத்துக்கும் விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும் என்றும் அவர், பாதிக்கப்பட்ட மக்களிடம் நம்பிக்கை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. மனித உரிமைகள்ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் வைத்து, வலி.வடக்கு பக். 23

## சிறைக்குள் கைபேசி பயன்படுத்தும் யோசித

கொழும்பு, பெப்.8

வெலிக்கடைச் சிறைச் சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோசித ராஜபக்சவிடம் கைத்தொலைபேசி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பக். 24

# பாதிக்கப்பட்ட தமிழரிடம் நேரில் பேசவே வந்தேன்

## வடக்கு மாகாண முதலமைச்சரிடம் தெரிவித்தார் ஆணையாளர் ஹுசேன்

யாழ்ப்பாணம், பெப்.8

கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானம் நடைமுறைப் படுத்தப்படுவது தொடர்பில் ஆராய்வதற்கும், பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திப்பதற்குமே, தான் இங்கு வருகை தந்ததாக, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் தெரிவித்ததாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

நேற்று வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

சுமார் ஒரு மணி நேரம் வரையில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே பக். 23

## பொறுப்புக் கூறல் தொடர்பில் ஐ.நா.வின் நிலைப்பாடு நாளை

கொழும்பு, பெப்.8

விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள போர்க்குற்ற விசாரணை தொடர்பில் ஐ. நாவின் அதிகாரபூர்வ நிலைப்பாட்டை நாளை ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் வெளியிடுவார்.

இவ்வாறு கொழும்பிலுள்ள ஐ.நா. அதிகாரியொரு பக். 06

## மக்கள் கருத்தறியும் அமர்வு இரு நாள் கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், பெப். 8

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் மக்கள் கருத்தறியும் அமர்வு, கிளிநொச்சி மாவட்டத்தில் இன்றும் நாளையும் இடம் பெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் காலை 9.30 மணி தொடக்கம் இந்த அமர்வு நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் இதில் கலந்து கொண்டு தமது பிரச்சினைகளை – ஆலோசனைகளை முன்வைக்க முடியும் பக். 06

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் தொடர்பில்லை பக். 12-13



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சென்ற போது... (மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)

# ஐ.நா. தீர்மான நடைமுறைக்கு அரசு ஆலோசனைச் செயலணி

## யாழ்.சட்டத்தரணி உள்ளிட்ட 11 பேர் நியமனம் ஐ.நா. நிபுணரும் இணைந்து பணியாற்றுவார்

கொழும்பு, பெப்.8

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, 11 பேர் அடங்கிய ஆலோசனைச் செயலணி ஒன்றை அரசு நியமித்துள்ளது.

அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ள உண்மை, நீதி, இழப்புகள் மீள நடக்காது என்பதை உத்தரவாதப்படுத்துவது தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளரான, பப்லோ டி கிரெய்ப்புடன் இணைந்து இந்தக் குழு பணிகளை மேற்கொள்ளவுள்ளது. இவ்வாறு பக். 23

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேற்று வடக்கு வந்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசேன்





நல்லூர் ஆலயத்தில்...






காணாமற்போனவர்களின் உறவுகளுடன்







சபாபதிப்பிள்ளை முகாமில்...





முதலமைச்சர் அலுவலகத்தில்











ஆளுநர் அலுவலகத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டயர் வெடித்ததினால் விபத்துக்குள்ளானது கார்



யாழ்ப்பாணம் பெப். 8

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த காரின் டயர் ஒன்று வெடித்ததில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் மதில் சுவரை உடைத்து உட்புகுந்து விபத்திற்கு உள்ளானது.

நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிபயணித்துக்கொண்டிருந்த கார் ஒன்றின் டயர் திடீரென வெடித்தது. இதனால் நிலை தடுமாறிய கார், அருகில் இருந்த வலி .கிழக்குப் பிரதேச சபையின் மதிலின் சுவரினை உடைத்து உட்புகுந்தது.

இவ்வாறு விபத்துக்குள்ளான காரில், குறித்த சமயம் நால்வர் பயணித்தனர். இதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். குறித்த விபத்து தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-101)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வடக்குக் கடலின் சுற்றாடலுக்கு ஆபத்து

## *அமைச்சர் அமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.8

வடக்கு மாகாணக் கடலில் இந்திய மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடியினால், உள்நாட்டு மீன் வளம் அழிக்கப்படுவது மட்டுமன்றி சுற்றாடலுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் பின் நிற்கப்போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்துக்கு சென்றிருந்த அமைச்சர் மகிந்த அமரவீர, மட்டக்களப்பு தருமபுரத்தில் கடல்வாழ் மீன்குஞ்சுகள் இனப்பெருக்க பண்ணைக்கான வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அமைச்சர் மகிந்த அமரவீர கூறியுள்ளதாவது:-

வடக்கு மாகாணக் கடலில் இந்திய மீனவர்களின் சட்ட விரோத மீன்பிடியினால், உள்நாட்டு மீன் வளம் அழிக்கப்படுவது மட்டுமன்றி சுற்றாடலுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறலை நிறுத்த இந்திய மத்திய அரசு தலையீடு செய்ய வேண்டும் அல்லது ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பேச வருமாறு இந்திய மத்திய அரசு அழைப்பும் விடுத்துள்ளது.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் மீனவர்களின் ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளில் பின் நிற்கப் போவதில்லை.

இலங்கை அரசினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் மீன்பிடி வள்ளங்களும் உபகரணங்களும் எந்தக் காரணம் கொண்டும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

இலங்கையிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை நீக்கம் பற்றிய நல்ல செய்தியை எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக எதிர்பார்க்க முடியும் என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர நம்பிக்கையும் வெளியிட்டார்.

இந்த நிகழ்வில் இராஜங்க அமைச்சர் எம். எல் ஏ . எம். ஹிஸ்புல்லாஹ், மாகாண அமைச்சர் கே. துரைராஜசிங்கம் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(வ)

# ஞான வைரவர் அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,பெப்.8

வண்ணை நல்லதண்ணீர்க் கிணற்றடி ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் பூசை அபிசேக ஆராதனைகளைத் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு வைரவப் பெருமானுக்கு நடைபெறும் பூசைகளையடுத்து உள்வீதி எழுந்தருளலும் இடம்பெறும்.

15ஆம் நாளான 22 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பெருமானுக்கு சங்காபிசேகம் நடைபெறுவதுடன், பிற்பகல் 4.30 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி உள்வீதி உலா வருதலும் இடம்பெறும்.

திருவிழாக்காலங்களில் தினமும் மாலை 6 மணிக்கு காரை எம்.பி. அருளானந்தனின் தெய்வீகப் பேரூரையும் சிறப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

# முரண்பட்ட கருத்துக்கள் வெளியிடுவது இயல்பே

## *இலங்கை அரசு குறித்து ஹுசேன் தெரிவிப்பு*

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கை அரசினால் வெளியிடப்படும் முரண்பட்ட கருத்துக்கள் இயல்பான விடயம் தான் என யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன்.

இந்த நிலையில் குறித்த தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவது குறித்து கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கும், அது தொடர்பிலான உதவிகளை வழங்குவதற்குமே தாம் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா.தீர்மானத்தின் பரிந்துரைகள் தொடர்பில் இலங்கை அரசு முரண்பட்ட தகவல்களை வெளியிட்டு வருகின்றது. குறிப்பாக, வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புத் தொடர்பில் அரச தரப்பினர் வேறுபட்ட தகவல்களை வெளியிடுகின்றனர் என ஊடகவியலாளர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் வைத்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேனிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நிலையில் அது தொடர்பில் முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவது இயல்பான விடயம் தான்.

எனவே தான் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள காலப்பகுதிக்கு முன்பாக, நான் இங்கு வருகை தந்துள்ளேன். குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல்களை ஆரம்பிப்பதற்கான உதவிகளை நாம் வழங்கவுள்ளோம்.-என்றார்.

(வ-5)

**வீடு தேவை**
அரச உத்தியோகத்தர் குடும்பமொன்றுக்கு வவுனியா நகரை அண்மித்த சூழலில் வீடு வாடகைக்கு தேவைப்படுகிறது . தொடர்பு - 0776692132

**விற்பனைக்கு**
TVS victor மோட்டார்சைக்கிள் ரயர் வேக்ஸ். மோட்டார் சைக்கிள் சுத்திகரிப்பு நிலையம் என்பவற்றிற்குரிய பொருள்கள் விற்பனைக்கு. தொடர்பு - 0771746101

**ஆள் தேவை**
யாழ்நகரிற்கு அண்மித்த கடையொன்றிற்கு கணக்கில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை
தொடர்பு - 077 159 5826

**வேலை வாய்ப்பு**
கணினி ரைப்செற்றிங் செய்யக் கூடியவர் தேவை.
071 847 4325

**வேலை வாய்ப்பு**
- வேலை நேரம் 9Am - 3Pm
- சம்பளம் 600/=
- 40 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும்
077 217 4741

# நாளை ஜீ.ஜீ.யின் சிரார்த்த தினம்

யாழ்ப்பாணம், பெப்.8

சட்டமேதையும், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான, அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் முப்பத்தொன்பதாவது சிரார்த்த தினம் நாளை செவ்வாய்க்கிழமை ஆகும்.

அதனையொட்டி, குருநகரில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

இந்தத் தகவலை கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி விழாக் குழுவினர் சார்பில் அறிவித்துள்ளார்.


(அ)

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
07.02.2016 | 1939 | ஊதா
மிதுனம்
02 19 45 54
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,370,740/-

Galaxy Star
வெற்றி வாரம் 032
திகதி 07.02.2016
10 02 14 16 31
அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4,043, 220/-

**ஆங்கிலம்**
O/L, A/Lஎழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
2 வது சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 13.02.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
13-02-2016 இற்கு முன்னர் விண்ணப்பப்படிவங்களை ஒப்படைத்தல் வேண்டும்.
SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# மும்மொழி வித்தகருடைய அகவை வாழ்த்து



ஆங்கிலம், இலத்தீன், பிரெஞ், ஆகியவற்றைச் சீரிய முறையில் கற்பிக்கின்ற ஆசிரியர்

**திரு. க.சி.சிவசுப்பிரமணியம்**

அவர்களின் பிறந்தநாளை பேருவகையோடு மாணவ, மாணவிகளாகிய நாங்கள் கொண்டாடி மகிழ்கின்றோம். அவர் பல்லாண்டுகள் வாழ்ந்து அவருடைய தூய பணியைத் தொடர எல்லாம் வல்ல இறையருளைப் போற்றித் துதிக்கின்றோம்.

வாழ்த்துவோர்: மாணவ, மாணவிகள்.

# 30 ஆவது ஆண்டு திருமணநாள் வாழ்த்து



இன்று (08.02.2016) திங்கட்கிழமை 30 ஆவது ஆண்டு திருமண நாளைக்கொண்டாடும் எமது பெற்றோர்கள்

**திரு திருமதி யோகேஸ்வரன் ரஜனி**

தம்பதிகளுக்கு எமது இதயம் கனிந்த திருமண நல்வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:-
விதுஷன் - மகன், கேசினி, சோபிகா - மகள்மார்,
விக்னேஸ்வரன் - மருமகன், பிரகாஷ், அபிநயா - பேரப்பிள்ளைகள்.
லவ்லேன், உடுவில்.
தொ.பே. 077 869 0193, 077 895 7349

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் நிறுவனத்தின் கொழும்பில் உள்ள இறக்குமதி செய்துவரும் சகோதரத்துவ நிறுவனத்துக்கு ஆண் முகாமை யாளர் தேவை. இவர் 25-40 வயதுக்கு இடைப் பட்டவராகவும் A/L கணக்கியல் வர்த்தக கல்வித் தகைமைகள் உடையவராகவும் இருத்தல் வேண் டும். தங்குமிட வசதிகள் செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம். விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல:5093
மே.பா: உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(68720)(10.17.19)

## காரைநகர் பிரதேசசபை பகிரங்க அறிவித்தல்

### உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனை

காரைநகர் பிரதேசசபையினால் பிடிக்கப்பட்ட உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 10.02.2016 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு காரைநகர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பராமரிப்பு நிலையத்தில் ஏலத்தில் விற்கப்படும். குறித்த தினத்தில் ஏலத்தில் விற்கப்படுகின்ற மாடுகளைப் பிரதேசசபை எல்லைக்கு வெளியிலிருந்து கொள்வனவு செய்ய வருபவர்கள் பிரதேசத் திலிருந்து வெளியே கொண்டு செல்வதற்கு ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளன.

**நிபந்தனைகள்**

ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் தேசிய அடையாள அட்டையையும், நிழல்பிரதியையும் சமர்ப்பித்து ரூபா.100.00 செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா.500.00 10.02.2016 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும். சித்தி யடைந்த ஏலதாரர் அன்றைய தினம் ஒப்புக்கொண்ட ஏலத்தின் முழுத் தொகையினையும் செலுத்தி மாட்டினைக் கொண்டு செல்லல் வேண்டும்.

செயலாளர்,
காரைநகர் பிரதேசசபை.

(சி/28992)(11,18)

## ஆபாசப்படம் பார்த்த இருவர் யாழில் கைது

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்.குருநகரில், அலைபேசியில் ஆபாசப்படம் பார்த்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரும் குருநகர் தொடர்மாடிக்குடி யிருப்புப் பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 22 வயது டையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநகர்ப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் கைபேசியில் ஏதோ பார்ப்பதனை அறிந்த பொலிஸார் அவர்களின் அருகில் சென்று விசாரணை செய்ததில், இருவரும் ஆபாசப்படம் பார்த்தமை தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவருக்கும் எதிராக யாழ்.நீதிவான் நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட வுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ந-4,107)

## அறிவித்தல்

**அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மீதான பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்**

எமது நாடான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவு களைப் பொதுமக்களிடமிருந்து எழுத்து மூலமாகவும் வாய்மொழி மூலமாகவும் இதற்கென நியமிக்கப்பட்ட அரசிய லமைப்புச் சீர்திருத்தக்குழுவின் முன் சுதந்திரமாகச் சமர்ப் பிக்க முடியும் என்பதைப் பொதுமக்கள், புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

| | |
|---|---|
| சமர்ப்பிக்கும் நாள் | :- 12.02.2016, 13.02.2016 |
| நேரம் | :- காலை 9.30 - மாலை 4.30 மணிவரை |
| இடம் | :- மாவட்ட செயலகம், முல்லைத்தீவு |

**மேலதிக விவரங்களைக் கீழ்வரும் முறைகளூடாகப் பெற்றுக் கொள்ள முடியும்.**

| | |
|---|---|
| தொலைபேசி | :- 011 243 7676 |
| தொலைநகல் | :- 011 232 8780 |
| மின்னஞ்சல் | :- constitutionalreforms@gmail.com |
| வலைத்தளம் | :- www.yourconstitution.lk |

திருமதி றூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு.

(சி/29024)(11.18.19)

## சிறுப்பிட்டியில் கைதான இளைஞனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ்.பல்கலைகழக மாணவர் மருத்துவ கழகம் என்று கூறிப் பண மோசடியில் ஈடுபட்டு வந்த நபரை 14 நாள்கள் விளக் கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் ரீ.கருணாகரன் உத்தரவிட்டுள்ளார்.

அரச அதிகாரிகளின் போலி இறப்பர் முத்திரை மற்றும் கையெழுத்துடன் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் ஊடாக, வட்டக்கச்சிப் பகுதியைச் சேர்ந்த மாண வன் ஒருவருக்கு இரண்டு சிறுநீரகங் களும் பாதிக்கப்பட்டுள்ளன எனக் கூறிப் பணம் சேகரிப்பு நடவடிக்கையில் கைத டியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி சிறுப்பிட்டிப் பகுதி யில் இவ்வாறு பணம் சேகரித்த இளை ஞனின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட இளைஞர்கள் கையும் மெய்யு மாக மடக்கிப்பிடித்து அச்சுவேலி பொலி ஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். அத்து டன் ஒரு தொகுதி பணமும் இவரிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டிருந்தது. (ந-107)

## Institution of Professional Development for Teachers

### இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் தர தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வும் சுய கற்றல் கையேடு வெளியீடும் - 2016

காலம் - 14.02.2016 ஞாயிறு காலை 8.30 மணி 3.30 மணி
இடம் - யாழ்/ வைத்தீஸ்வராக் கல்லூரி

தொடர் - 01

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும்
மே மாதம் நடைபெறவுள்ள போட்டிப்பரீட்சையில் எழுத்து மூல பரீட்சை

- ஒப்பீட்டுக்கல்வி
- கல்விமுகாமைத்துவம் (விடய ஆய்வு),
- பொது அறிவும் நுண்ணறிவும்
- கிரகித்தல் ஆகிய வினாத்தாள்களுக்கான பயிற்சிப் பயிலமர்வு, நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களின் சேவை.

- பேராசிரியர் மா. சின்னத்தம்பி
- பேராசிரியர் க. தேவராஜா
- கலாநிதி த. கலாமணி
- கலாநிதி பா. தனபாலன்
- கலாநிதி செ. சேதுராஜா
- கலாநிதி நி. நல்லையா
- திரு.க.இ. கமலநாதன்
- திரு. பா.மகாலிங்கசிவம்
- திரு J.J. பேனாட்
- திரு. ப.சசிகுமார்

விசேட வழிகாட்டல்கள் சுயகற்றல் குறிப்புக்கள், முன்னைய பரீட்சை வினாத்தாள், மாதிரி வினாத்தாள் பயில்வுகள், கலந்தாய்வுகள், சமர்ப்பிப்புக் கள், பரீட்சைகள் என நவீன கல்விப்பிரயோகங்கள்....

"பங்குபற்றுபவர்கள் முன்கூட்டியே தொலைபேசியில் பதிவுகளை மேற்கொள்ளவும்"

- விரைவில் மன்னார், வவுனியாவில் ஆரம்பமாகவுள்ளது

பதிவுகளுக்கு:
திரு.S. ராச்மோகன்
கிங்ஸ் கல்லூரி, மன்னார்
தொ.பே.077 503 8842

கலாநிதி பா. தனபாலன் (பணிப்பாளர்)
ஆசிரிய வாண்மைவிருத்தி நிறுவகம்
தலைமைச்செயலகம், துவாரகை வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.
தொ.பே.077 068 1958

பயிற்சி - முயற்சி - ஈடுபாடு - சுயகற்றல் - வெற்றி

அன்றைய தினம் விநியோகிக்கப்படும் நூல்கள்:
கலாநிதி பா. தனபாலனின் - கல்வியியலில் விடய ஆய்வு,
- ஒப்பீட்டுக் கல்விப் பிரயோகங்கள், பாடசாலை திட்டமிடலும் முகாமைத்துவம், ஆசிரிய வாண்மைத் தேர்ச்சிகள், உட்படுத்தல் கல்வி

(சி.29041) (13..1718)



## இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில் இராசகோபுர திருப்பணி மதிப்பீடு கோரல்

இவ் ஆலயத்தில் இராச கோபுரம் நவ தளத்தில் அமைய அம்பிகை திருவுளம் கொண்டுள்ளார். அம்பிகை மீது அளவு கடந்த அன்பு கொண்ட புலம் பெயர்ந்து வாழும் அம்மன் அடியார்கள் உள்ளத்தில் இராசகோபுரம் அமைய அடித்தளம் இட்டுள்ளார். அவர்கள் எண்ணக்கருவை பூர்த்தியாக்க அறங்காவலர் சபை வினைத்திறன் மிக்க ஸ்தபதிகள் (சிற்ப கலை வல்லுனர்களிடமிருந்து) வரை படத்தையும், மதிப்பீட்டையும் மிக விரைவில் கையளிக்க கோருவதோடு - (வியாழவரிவரை கருங் கல்லால் ஆன கட்டட அமைப்பு மதிப்பீடு உள்ளடக்கப்பட வேண்டும் என அறங்காவலர்சபை விரும்புகின்றது)

தொடர்பு: அறங்காவலர் சபை,
இரணைமடு கனகாம்பிகை
அம்பாள் பெருங்கோயில், கிளிநொச்சி

தொலைபேசி இல:

| | |
|---|---|
| தலைவர் | : 077 806 5315 |
| உப.தலைவர் | : 077 869 1045 |
| செயலாளர் | : 077 496 9053 |
| பொருளாளர் | : 077 968 0031 |

(68752)
(13.14.18.17)

## யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரிக்கான புதிய அனுமதி

யாழ்ப்பாண பல்கலைக்கழகக் கல்லூரியின் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு தகுதியுடைய மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உணவுத் தொழில்நுட்பவியல் Food Technology
2. கட்டடசேவைகள் தொழில்நுட்பவியல்Building Services Technology
3. குடிசார் பொறியியல் கட்டுமான தொழில்நுட்பவியல் Construction Technology
4. பொறியியல் சார் உற்பத்தித் தொழில்நுட்பவியல்Production Technology(Mechanical & Manufacturing Technology)
5. விவசாய இயந்திரவிய தொழில்நுட்பவியல் Farm Machinery Technology (Agricultural Machinery Technology)
6. இயந்திர மின்னணுவியல் ( Mechatronic Technology)
7. விருந்தோம்பல் மற்றும் உபசரணைமுகாமைத்துவம் Hospitality Management ( Hospitality&Tourism Management )
8. அழகுக் கலையியல் Cosmetology ( Beauty Culture)

**வேண்டப்படும் தகைமை:** க.பொ.த உயர்தரத்தில் எத்துறையிலாவது 3 பாடங் களில் சித்தி அல்லதுதேசியதொழில் தகைமைமட்டம் 4 இல் சித்திபெற்றிருக்கவேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டங்களில் உள்ள முன்னணி புத்தகசாலைகளிலோ அல்லது எமது www.ucj.lk என்னும் இணையத்தளத்திலோ அல்லது இல. 29,பிறவுண் வீதி, கொக்குவில் இல் உள்ள எமது கல்லூரியிலோ பெற்றுக் கொள்ளலாம்.

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும் என்பதால் உங்கள் பதிவுகளை உடனடி யாக மேற்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

விண்ணப்ப முடிவுதிகதி :- 12.02.2016
மேலதிக தகவல்களுக்கு
முகவரி: இல. 29,பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்
தொலைபேசி இல : 021-221-7791 / 0212217792
இணையத்தளமுகவரி : www.ucj.lk
மின்னஞ்சல் :intoucjaffna@slnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டை வீசி எறிந்து சந்திர ஒளி பரப்பிய நிகழ்வு

சாவகச்சேரி. பெப். 8

தை அமாவாசைத் திதியை பௌர்ணமி திதியெனக் கூறிய அபிராமிப் பட்டரின் இறை நம்பிக்கையை மெய்ப்பிக்கும் வகையில் அம்பாள் தனது காதுத் தோட்டைக் கழற்றி அமாவாசை தினத்தன்று சந்திரன் ஒளியை வரவழைத்தது போன்ற உற்சவம் இன்று திங்கட்கிழமை முழங்காவில் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்காக இந்த உற்சவத்தை உலக சைவத் திருச் சபையினர் மேற்கொள்ளவுள்ளனர்.

நூறு இழையிலான உறி தயாரித்து அதில் அபிராமிப் பட்டரின் உருவப் படத்தை வைத்து கீழே தீமூட்டி அவரால் பாடப் பெற்ற பாடல்கள் பாடப்படும். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒவ்வொரு இழையாக அறுத்து இறுதி இழையின் போது அந்தப் பகுதியை நோக்கி ஒளி வரக் கூடிய வகையில் உற்சவம் மேற்கொள்ளப்படவுள்ளது.

உற்சவத்தில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான விசேட பொது அறிவுப் போட்டி நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ற-9)

# மாணவிக்குக் காய்ச்சல் என்பது எமக்குத் தெரிந்திருக்கவில்லை

## வடமராட்சி மாணவி உயிரிழந்தமை தொடர்பில் பாடசாலை அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

பாடசாலை மாணவி விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி உயிரிழந்த சம்பவத்தில், அந்த மாணவி சுகவீனமுற்றிருப்பது தொடர்பில் தாம் அறிந்திருக்கவில்லை என்று அந்தப் பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார். இறப்புக் காரணமாக அந்தப் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நிகழ்வு நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார்.

அம்பன் அ.த.க.பாடசாலையில் பயி லும் யோகலிங்கம் அனோஜா என்ற மாண வியே நேற்றுமுன்தினம் உயிரிழந்திருந்தார்.

காய்ச்சல் மற்றும் சளியால் பீடிக்கப்பட்டிருந்த அந்த மாணவி கடந்த வெள்ளிக்கிழமை அணி நடைப் பயிற்சியில் பங்குபற்றிப் பின்னர் ஓட்டப் போட்டியிலும் பங்குபற்றிய நிலையில் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தினால் நேற்று ஏனைய பாடசாலைகளில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்ப நிகழ்வின் போது அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

நேற்றைய உதயனில் மாணவி பற்றிய செய்தியில் குறித்த பாடசாலையில் அஞ்சலி நிகழ்வின் பின்னர் விளையாட்டுப் போட்டி நடைபெற்றதாகச் செய்தி வெளியாகியிருந்தது.

> “அம்பன் அ.த.க. பாடசாலையில் பயிலும் மாணவி காய்ச்சல் மற்றும் சளியால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் விளையாட்டு நிகழ்வின்போது மயங்கி விழுந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்திருந்தார்.”

ஆனால் மாணவி கல்வி கற்கும் அம்பன் அ.த.க.பாடசாலையில் நேற்று முன்தினம் விளையாட்டுப் போட்டி நடைபெறவில்லை. அது பிற்போடப்பட்டுள்ளது என்று அந்தப் பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

பாடசாலை மாணவி சுகவீனமுற்று இருப்பது தொடர்பாகத் தாம் அறிந்திருக்கவில்லை என்றும் சுகவீனமுற்ற மாணவர்களைத் தாம் கட்டாயப்படுத்தி விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்ற வைப்பதில்லை எனவும் அதிபர் தெரிவித்தார். (ற-4,422)

தேவை

3 பேர்களைக் கொண்ட குடும்பம் ஒன்று வசிப்பதற்கான வீடு வாடகைக்குத் தேவை. (மாத வாடகை 4000/= இற்கு உட்பட்டதாகவும் பலாலி வீதியை அண்மித்ததாகவும் இருப்பது விரும்பத்தக்கது. (66533)(2.18.20)

077 803 8567



- பல் மூக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்பும் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

## யாழ். கலாலயா பயிற்சியகத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு...







கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதி யாழ். கலாலயா பயிற்சியகத்தின் கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம். Facial பயிற்சிகளை நிறைவு செய்த 2015 C பிரிவு மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில். அனைத்துப் பயிற்சிகளிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற இரு மாணவிகள் பயிற்சியக இயக்குநர் மா.சுதர்சன் அவர்களிடம் இருந்து பரிசில்களைப் பெற்றுக் கொள்கின்றனர். அருகில் பயிற்றுவிப்பாளர்களும் பரீட்சை மேற்பார்வையாளர்களும் காணப்படுகின்றனர். அத்துடன் பயிற்சிகளில் சித்தியடைந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட ஏனைய மாணவிகளையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கு பதிவாளர் அலுவலகத்தில் கடந்த வருடம் 2 ஆயிரத்து 300 பதிவுகள்

அச்சுவேலி, பெப்.8

வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் செயற்படும் பிரதேச பதிவாளர் அலுவலகத்தால் கடந்த வருடம் 2 ஆயிரத்து 300 பதிவுகள் வரையில் மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்கு பிரதேச பதிவாளர் அலுவலகத்தின் கடந்த வருட செயற்பாட்டு பெறுபேற்று அறிக்கையின் பிரகாரம் 551 திருமணப்பதிவுகளும், 47 பிறப்புப் பதிவுகளும், 146 காலம் கடந்த பிறப்புப் பதிவுகளும், 319 இறப்புக்களும், 24 காலங் கடந்த இறப்புக்களும் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

பெயர் மாற்றம் தொடர்பான பதிவுகள் 216 செய்யப்பட் டுள்ளன. அதில் 40 பதிவுகள் சம்பந்தப்பட்ட நபர் சார்ந்ததாகவும், தாயின் பெயர் மாற்றம் 88, தந்தையின் பெயர் மாற்றம் 88 செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

தேடுதலுக்காக ஆயிரத்து 495 விண்ணப்பங்களும் உரிய திருத்தமான தகவல்களுடன் 985 ஏ படிவங்களும் சமர்ப்பிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச செயலக பிரிவுப் பதிவாளர் அலுவல கத்துக்கு பொறுப்பான மேலதிக மாவட்ட பதிவாளர் நீ.பிரபாகரன் சான்றிதழ் பிரதி வழங்கல் தொடர்பாக தெரிவிக்கையில்; வடக்கு மாகாணத்தில் உள்ள எந்தப் பிரதேசம் சார்ந்த பதிவுகள் தொடர்பான சான்றிதழ் பிரதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும். சரியான தகவல்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களுக்கான சான்றிதழ் பிரதிகள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு குறிப்பிட்ட சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளலாம்- என்றார். (ஐ-11)

# அரியாலை கிழக்கில் தொடரும் சட்ட விரோத மணல் அகழ்வுகள்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.8

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. மணல் அகழ்வு கூடுதலாக இரவு நேரங்களிலேயே இடம்பெற்று வருகின்றது. பொலிஸாரின் நடவடிக்கை இந்த விடயத்தில் போதுமானதாக இல்லாததனால் உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உழவு இயந்திரங்கள் மற்றும் லான்ட்மாஸ்ரர் போன்றவற்றைப் பயன்படுத்தி இந்த மணல் அகழ்வில் சிலர் ஈடுபட்டும் வருகின்றனர். இந்த சட்டவிரோத மணல் அகழ்வால் இந்தப் பிரதேசம் தாழ்ந்து செல்வதோடு கடல் நீரும் குடியிருப்புப் பகுதிக்குள் புகும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இரவு நேரங்களில் இடம்பெற்று வரும் இந்த சட்டவிரோத மணல் உழவு இயந்திரங்கள் மூலம் கொழும்புத்துறை குறுக்கு வீதிகள் ஊடாக எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் மக்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-17)

# தொடர்ச்சிகள்...

## பொறுப்புக்கூறல்

வர் நேற்றுஉதயனிடம்தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

இலங்கை அரசினால் ஆரம்பிக்கப்படவுள்ள போர்க்குற்றம் தொடர்பான பொறுப்புக் கூறல் செயன்முறை குறித்து ஐ. நா மனித உரிமைகள் சபையின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை நாளை பிற்பகல் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் இடம்பெறும் ஊடகவியலாளர் மாநாட்டின் போது, ஆணையாளர் ஹுசேன் வெளியிடுவார்.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய அமைச்சர்கள் ஐ.நா. தீர்மானம் நடைமுறைப் படுத்துவது தொடர்பில் வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள், வழக்குத்தொடுநர்களின் பங்களிப்புக் குறித்து முரண்பட்ட கருத்துகளை வெளியிட்டு வந்த நிலையிலேயே ஐ.நா. ஆணையாளர், ஐ.நா.வின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவுள்ளார் - என்றார்.

இதேவேளை, ஐ.நா.வுடனான இலங்கை அரசின், உறவுகள் மீளவும் சிறந்த நிலையில் வலுப்பட்டிருக்கும் போது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடன், இலங்கை அரச பிரதிநிதிகளும் பங்குகொள்ளும் கூட்டு ஊடகவியலாளர் மாநாடு நடைபெறுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்துள்ள வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஸினி கொலன்னே அத்தகைய கூட்டு ஊடகவியலாளர் மாநாட்டுக்கு வாய்ப்பில்லை எனத் தெரிவித்துள்ளார்.

2007 ஒக்டோபர் மாதத்தில் அப்போதைய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் லூயி ஆர்பர் அம்மையார் பயணம் மேற்கொண்ட போது, அவரின் வருகையை முற்றுமுழுதாக தனது கட்டுப்பாட்டிற்குள் அப்போதைய அரசு வைத்திருந்ததுடன், பயண நிறைவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கையின் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த மகிந்த சமரசிங்கவும் பங்கேற்று ஐ.நா. ஆணையாளரால் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் இலங்கை அரசின் மறுப்புகளை வெளியிட்டிருந்தார்.

எனினும், 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை மேற்கொண்ட பயணத்தின் போது, துணிச்சலான முறையில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, அங்குள்ள மக்களைச் சந்தித்து உண்மைகளைக் கேட்டறிந்ததுடன், தம்முடன் சந்தித்தவர்கள் அச்சுறுத்தப்பட்டமையையும் 2013 ஓகஸ்ட் 31ஆம் திகதி கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போது காட்டமாகச் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-சி)

## மக்கள்

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு மக்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக நியமிக்கப்பட்ட குழு இதுவரையில் கொழும்பிலும், கண்டியிலும், வவுனியாவிலும் தனது அமர்வுகளை நடத்தியுள்ளது.

இந்த அமர்வுகளின் போது, தமிழ் மக்களின்பங்களிப்புமிகவும் குறைவாக இருந்ததாக, இந்தக் கருத்தறியும் குழுவின் உறுப்பினர்கள் பல தடவைகள் சுட்டிக் காட்டியுள்ளனர். அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடுவது தமிழ் மக்களின் எதிர்காலத்துக்குப் பாதிப்பானது என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், இன்று இடம்பெறும் அமர்வில், மக்கள் தங்களது பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் இடர்களையும் கூட முன் வைக்க முடியும். அதே போன்று புதிய அரசமைப்புக்குரிய ஆலோசனைகளையும் தெரிவிக்க முடியும். (த-வ-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் ஞானசோதி சிவலிங்கம் (பென்ரர்)



மண்மகிழ 10.02.1937

கண் நெகிழ 08.02.2015

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர் அனைவரும் போற்ற
வாழ்ந்துகாட்டிய அன்னையே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில்
சுடர்விட்டுக் கொண்டிருக்கும் குலவிளக்கே அம்மா!
நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப் பிரியாது.

சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.

குடும்பத்தினர்.

(68728 03.18)

## ஆண்டுகள் நான்கில் நீங்காத நினைவலைகள்



அமரர்
நடராசா காசிவேந்தன்
(M.A.B.Com.Dip.in.Pds, Dip.in.mgf)
(முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் - சமுர்த்தி மகாசங்கம், உடுவில்)

தாயின் மடியில் 25.06.1967

இறைவன் அடியில் 22.01.2012

திதி : தை அமாவாசை (08.02.2016)

அன்புக்கு ஓர் உதாரணமாய் அறிவுடைய ஆசானாய்
அமைதியின் சொரூபமாய் ஆலமரத்தின் ஆணிவேராய்
இணுவிலின் மைந்தனாய்
இல்லத்தின் வேந்தனாய் விளங்கிய உத்தமரே
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
ஆறாது ஐயா எம் துயரம்

கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு.

(c29033) (14,18)

குடும்பத்தினர்.

## மூன்றாம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 25 . 11 . 1941



மறைவு 08 . 11 . 2015

திருமதி இராஜலட்சுமி சிவராஜா

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி எமை விட்டு சென்றதேனோ !
கருணை நிறைந்த உங்கள் முகம்காண
கவலையுடன் தேடுகின்றோம்
இறையடி தொண்டு செய்தால் தானோ
இறைவன் தங்களை தன்னோடு கொண்டு சென்றான்
துயர் உற்ற வேளையில் எம் துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர் பகிரவோ எம்மோடு தாயே!
நீங்கள் இல்லை.. மாதங்கள் மூன்று ஆனதம்மா உங்கள்
அரவணைப்பை நாங்கள் இழந்து
அம்மா உங்கள் நீங்காத நினைவலைகளுடன்
இறைவனைக் கேட்கின்றோம்
கருணை நிறைந்த கடவுளே மீண்டும்
... எம் அன்னையின்
... நீடும் வரத்தைத் தந்திடுவாய்

ஆறுகால் மடம்,
பழையவீதி,
ஆனைக்கோட்டை.

(68756(02.17.18)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 சதவீத பெண்களுக்கு வருடாந்தம் புற்றுநோய்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

சாவகச்சேரி,பெப்.8

வடக்கு மாகாணம் உட்பட இலங்கையில் வருடாந்தம் 25 வீதமான பெண்கள் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். அவற்றில் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படுகின்றது.

மார்பகப் புற்று நோயால் வருடாந்தம் ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து 200 பேரும், கர்ப்பப்பை வாயில் புற்றுநோயால் 800 பேர் வரையும் இறக்கின்றனர் - இவ்வாறு தெரிவித்தார் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பீ.ஜீ.மகிபால.

**மார்பகப் புற்று நோயால் வருடாந்தம் ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து 200 பேரும், கர்ப்பப்பை வாயில் புற்றுநோயால் 800 பேர் வரையும் இறக்கின்றனர்.**

புற்றுநோயைக் கண்டு பிடிக்க ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களிலும் சுகவனிதையர் சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்தச் சிகிச்சைப் பிரிவில் வருடத்தில் ஒருநாள் பரிசோதனைகளை மேற்கொண்டு ஆரம்பத்தில் இனங் காணப்பட் டால் இந்த நோயைக் குணப்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 35 வயது பெண்களுக்கான சுகவனிதையர் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்றவர்களை மாவட்ட சனத்தொகை ரீதியில் ஒப்பிடும்போது யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களிலேயே மிகக் குறைந்த அளவிலான பெண்கள் பரிசோதனைகளை மேற் கொண்டுள்ளனர்.

அம்பாறை, கேகாலை மாவட்டங்களில் அதிக அளவு பெண்கள் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் மாவட்ட ரீதியிலான பட்டியலுடன் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் நடத்தப்படும் சுகவனிதையர் சிகிச்சை நிலையங்களில் குறைந்த அளவுப் பெண்கள் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் 35 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் எண்ணிக்கை மாவட்ட சனத்தொகையில் 12 வீதமாகும். சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சுகவாரிதையர் சிகிச்சைப் பிரிவும், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பெண்கள் நல்வாழ்வு சிகிச்சைப் பிரிவும் இயங்கி வருகின்றது. (ற-ஐ-9)

**யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களிலேயே மிகக் குறைந்த அளவிலான பெண்கள் பரிசோதனைகளை மேற் கொள்கின்றனர். ஆரம்பத்தில் கண்டு பிடிக்கப்பட்டால் புற்று நோயைக் குணமாக்க முடியும்.**

## கால் நடைகளை கட்டி வளர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.8

நீர்வேலிப் பிரதேசத்தில் வளர்ப்புக் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனம் மக்களைக் கேட்டுள்ளது.

மக்கள் தமது வளர்ப்பு கால்நடைகளை மேய்ச்சலுக்காக அவிழ்த்து விடுவதாலும் மற்றும் தரவை நிலங்களில் அவற்றை விடுவதாலும் பயிர்களை மேய்ந்து செல்கின்றன.

அதனைவிட வயல்களில் தற்போது முழுமையாக நெல் அறுவடை நிறைவடையாத நிலையில் கால்நடைகள் நெற் பயிர்களையும் அழிக்கின்றன.

இதன் காரணமாக மக்கள் தமது வளர்ப்பு கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். (ற-ஐ-17)

## பொருண்மிய மேம்பாட்டு உசவாளர் நிறுவனம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.8

ஐடியா பொருண்மிய மேம்பாட்டு உசவாளர் நிறுவனத்தின் ஆரம்ப நிகழ்வு கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளையும், முதலீட்டு உதவிகளையும் பெற்றுக் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு ஐடியா பொருண்மிய மேம்பாட்டு உசவாளர் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று தவிசாளர் அ. அஸ்மின் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அஸ்மின் அய்யூப்பும், சந்திரலிங்கம் சுகிர்தனும், கௌரவ விருந்தினராக வடமாகாண மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனும் மற்றும் யாழ். வணிகர்கழகத் தலைவர் இ. ஜெயசேகரனும், சிறு தொழில் முயற்சியாளர்களும் கலந்து கொண்டனர் (ற-ஐ)

## சமுத்திரத் தீர்த்தம்

யாழ்ப்பாணம்,பெப்.8

புலோலி மத்தி ஆத்தியடிப் பிள்ளையார் ஆலய மஹோதய புண்ணியகால சமுத்திரத் தீர்த் தம் இன்று திங்கட்கிழமை நடை பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள் னர்.

அதிகாலை 3.30 மணிக்கு அபிஷேகப் பூசை, வசந்தமண் டபப் பூசையுடன் தொடர்ந்து 5 மணிக்கு ஆலயத்திலிருந்து சுவாமி கல்லூரிவீதிவழியாக சுப்பர்மடம் சமுத்திரத்துக்கு எழுந்தருளி தீர்த்தமாடிய பின் விசேட பூசை இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

* * *

திருகோணமலை ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய மஹோா தய புண்ணியகால சமுத்திர தீர்த்தம் இன்று திங்கட்கிழமை நடைபெறும் ஆலய பிரதமகுரு ஆதீனகர்த்தா சோ. இர விச் சந்திரக்குருக்கள் தெரிவித்துள் ளார்.

இந்த தீர்த்தோற்சவத்துக்கு அம்பாள் ஆலயத்திலிருந்து முற்றவெளியூடாக சமுத்திர தீர்த்தக்கரைக்கு புறப் பட்டு சூரிய உதயத்தில் மஹோதய புண்ணிய தீர்த்தோற்சவம் இடம் பெற்று விசேட தீபாரதனை, விசேட பூசைகள், அர்ச்சனைகள் என்பன நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

# யாழ். உருளைக்கிழங்கின் விலையில் பெரும் சரிவு

## விவசாயிகள் கவலை

அச்சுவேலி,பெப்.8

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு கிலோ 70 ரூபாவுக்குக் குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு கிலோ 50-60 ரூபா வரையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

அதனால் உற்பத்தி செலவைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விதை உருளைக்கிழங்கு 50 கிலோ 12 ஆயிரத்து 300 ரூபாவுக்கு குறையாத விலையில், கிலோ ஒன்று 260 ரூபாவுக்கு கொள்வனவு செய்து, நடுகை செய்தனர்.

இதனால் உற்பத்திச் செலவைக் கூட ஈடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர்களை பெரும் பொருளாதார இழப்புக்கு உள்ளாகியுள்ளது என்று கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு அறுவடை செய்யப்படும் காலப் பகுதியில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுவது தடை செய்யப்படும். இறக்குமதி வரி குறைக்கப்படமாட்டாது. அதன் மூலம் உள்ளூர் உற்பத்தி கிழங்கின் சந்தை விலை குறையாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என அதிகாரிகள் மற்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட் டிருந்த போதிலும், அது தொடர்பான ஏற்பாடுகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த கால போகத்தின் முற்பகுதியில் நடுகை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு மழை வெள்ளம் மற்றும் காலநிலை முரணால் எதிர் பார்த்த விளைச்சலைக் கொடுக்கவில்லை, சராசரி அளவிலும் குறைவாகவே விளைச்சல் உள்ளது எனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும் உருளைக்கிழங்கு தம்புள்ள மத்திய சந்தை மற்றும் கொழும்பு புறக்கோட்டைச் சந்தை ஆகியவற்றில் குறைந்த விலைகளிலேயே விற்பனை செய்யப்படுகிறது. (ற-ஐ-11)

# புதிய தொழில்நுட்பத்துடன் நீரியல் வளர்ப்புத் திட்டங்கள்

## வடமாகாணத்தில் மேற்கொள்ள சீன நிறுவனம் ஆர்வம்

யாழ்ப்பாணம்,பெப்.8

வடமாகாணத்தில் புதிய தொழில்நுட்ப உதவியுடன் நீரியல் வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ள சீன நிறுவனம், பொருத்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக, அது பற்றிய விவரங்களை அறியத்தருமாறு கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களங்கள் ஊடாக மீனவர்களைக் கோரியுள்ளது.

மீனவரின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடனும் கடலுணவுகளை அவற்றின் வளர்ச்சி வரை பாதுகாக்கும் வகையிலும், வடமாகாணத்தில் முதலீடு செய்ய முன்வந்துள்ள சீனநிறுவனம், தொழில்நுட்ப உதவியுடன் நீரியல் வளர்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு கடற்றொழில் அமைச்சின் அனுமதி கோரியிருந்தது.

அதையடுத்து இந்த விடயம் குறித்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ள கடற்றொழில் அமைச்சு, இந்தவிடயம் குறித்து இந்த மாதம் 26 ஆம் திகதிக்கு முன்பு தொழிலாளர்களின் அபிப்பிராயங்களை அறியத் தருமாறு கோரியிருந்தது.

கடற்றொழில் அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கம், யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர், கடற்றொழில் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் ஆகியோர்களிடம் இது பற்றிய திட்டங்களை அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளது. (ற-ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்ஸை கட்டுப்படுத்தாவிடில் மீண்டும் ஒரு உலகப் போர் மூளும்

## வடக்கு வந்த அல் ஹுசேனிடம் சுட்டிக்காட்டினார் அமைச்சர் டெனீஸ்வரன்

யாழ்ப்பாணம், பெப். 8

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அதனை உடனடியாகச் செய்யாவிட்டால், மீண்டும் ஒரு உலகப் போர் மூளும் அபாயம் உள்ளது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.



வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்துப் பேசிய போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

"இன்று உலக நாடுகள் பலவற்றில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். குறிப்பாக ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் அத்துமீறிய நடவடிக்கைகள் அனைத்தும் உடன் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இல்லையேல் இவை மீண்டும் ஓர் உலகப் போருக்குக் கொண்டு சென்றுவிடும் அபாயம் இருக்கின்றது" என்று டெனீஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை மனித உரிமைகள் உலகில் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், ஒவ்வொரு நாட்டிலும் சட்டவாட்சி கட்டாயம் கடைப்பிடிக் கப்பட வேண்டும் என்பதையும் அத்தோடு மனித உரிமைகள் பட்டயம் மற்றும் அதற்கான பின்னேடுகள் வலுவாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதையும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளார்.

அதற்குப் பதிலளித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும், மனித உரிமைகளை நிலைநாட்டுவது தொடர்பாகவும் நான் அதி தீவிர கவனம் செலுத்தி வருகின்றேன் என்று தெரிவித்துள்ளார். (ற-5,21,101,106)



மன்னார் மாவட்டம் மடு வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட தேவன் பிட்டி மகா வித்தியாலயம் மற்றும் குஞ்சுக்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளுக்கும் வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் பாண்ட் வாத்தியத் தொகுதிகளைக் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கியுள்ளார். அந்த நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், மடு பிரதேச செயலர் எப்.சி.சத்தியசோதி, மடு வலய கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-ஜ-56)

# சுண்டிக்குளம் கடல் நீரேரியில் இறால் பிடிப்பதற்கு அனுமதி

## எதிர்வரும் 12 ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம்.பெப்.8

ஆனையிறவு, சுண்டிக்குளம் கடல் நீரேரியில் இந்த மாதம் 12 ஆம் திகதியிலிருந்து இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களங்களின் அதிகாரிகள், கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான காப்புறுதியையும் இறால் பிடிப்பதற்கான அனுமதியையும் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறும், அனுமதியின்றி இறால் பிடிப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனர்.

சுண்டிக்குளம் கடல்நீரேரியில் வருடா வருடம் பிடிக்கப்படும் இறால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் மீனவர்கள் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்று வருகிறார்கள்.

இதனால் குறிப்பிட்ட அளவுக்கு இறால் வளர்ச்சியடையும் வரை இறால் பிடிப்பதற்குத் திணைக்களத்தால் தடை விதிக் கப்பட்டுள்ளது. வருமானத்தைக் கருத்திற் கொண்டு சில மீனவர்கள் இறால் வளர்ச்சியடைய முன்புகளவாகப் பிடிப்பதால் இந்த விடயம் குறித்துத் திணைக்களம் கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது.

இந்தக் கடல்நீரேரியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 க்கு மேற்பட்ட மீனவர்கள் ஆறு மாதங்கள் வரை இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் ஆனையிறவு, சுண்டிக்குளம் கடல் நீரேரியில் உற்பத்தியான இறால் குறிப்பிட்ட அளவுக்கு வளர்ந்துள்ளதால் இந்த மாதம் 12 ஆம் திகதியிலிருந்து இறால் பிடிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள திணைக்களங்கள், இறால் பிடிப்பதற்கான அனுமதியை பிரதேச கடற்றொழில் பரிசோதகர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும், தவறும் பட்சத்தில் 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்படுமென்றும் அறிவித்துள்ளனர். (ஜ-115)

# சாரதியின் தூக்கத்தால் கூலர் வாகனம் விபத்து

## இருவர் காயம்

மன்னார், பெப்.8



மன்னார்-மதவாச்சி பிரதான வீதியில் பன்னவெட்டுவான் பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து மன்னார் நகருக்கு மீன் கொள்வனவு செய்வதற்காக சிறிய ரக கூலர் வாகனத்தில் வருகை தந்த போதே குறித்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று முருங்கன் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பில் இருந்து மன்னாருக்கு கூலர் ரக வாகனத்தில் மீன் கொள்வனவு செய்ய வந்து கொண்டிருந்த போது, காலை 7 மணியளவில் பன்னவெட்டுவான் பகுதியில் வைத்து சாரதிக்கு ஏற்பட்ட திடீர் தூக்கத்தின் காரணமாக குறித்த வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பல தடவைகள் புரண்டு வீதிக்கு அருகில் உள்ள குளக்கட்டுடன் மோதியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் போது குறித்த வாகனத்தில் பயணித்த சாரதி மற்றும் உதவியாளர் ஆகிய இருவரும் கடும் காயங்களுக்கு உள்ளான நிலையில் முருங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஜ-56)

# காந்தி நிலையத்தில் இயற்கை மருத்துவம்

கிளிநொச்சி,பெப்.8

கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு இயற்கை மருத்துவசங்கம், மதுரை காந்தி நிலையம் ஆகியவை இணைந்து மகாத்மா காந்தியின் நினைவாக இந்தப் பயிற்சிகளை வழங்குகின்றனர்.

சங்கத்தின் இணைச் செயலாளர் தேவதாஸ் காந்தி, உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் இந்தப் பயிற்சிகளை வழங்குகின்றார்.

இந்தப் பயிற்சிகளில் பங்குபற்ற விரும்புவோர் உருத்திரபுரம் காந்தி நிலைய சிறுவர் இல்லத்தில் பதிவை மேற்கொள்ளலாம் என இலங்கை காந்தி சேவா நிலையத்தின் செயலாளர் மா.லீலா வினோதன் அறிவித்துள்ளார். (ற-ஜ-9)

# சுயதொழில் உற்பத்தி வாய்ப்புக்களை பனை அபிவிருத்திச் சபை ஏற்படுத்தும்

## சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.8

பனம் கைப்பணிப் பயிற்சியை நிறைவுசெய்யும்பயனாளிகளின் வாழ்வாதாரம் கருதி அவர்களின் சுயதொழில் உற்பத்திக்குரிய வாய்ப்புக்களை பனை அபிவிருத்திச் சபை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று சபையின் தலைவர் மாரிமுத்து கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபை மன்னாரில் மூன்று பனம் கைப்பணி பயிற்சி நிலையங்களைக் கடந்த வெள்ளிக்கிழமை திறந்தது.

இந்த மூன்று பனம் கைப்பணிப் பயிற்சி நிலையங்களில் பனம் கைப்பணிப் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது சபையின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது-

புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் பனை அபிவிருத்திச் சபை உள்ளது.

அமைச்சின் உதவியுடன் இந்தக் கிராமத்தில் பனம் கைப்பணியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்தப் பயிற்சியை நிறைவு செய்யும் பயனாளிகள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த கைப்பணி ஊக்குவிக்கப்படும். அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பனம் கைப்பணிப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

இந்த ஆறு மாதங்கள் பயிற்சியை அவர்கள் திறமையாக மேற்கொள்ள வேண்டும். அவர்களுக்கான உற்பத்திக்குரிய மூலப் பொருள்கள் வழங்கப்படும். அதனைவிட பயிற்சி முடிவில் உபகரணங்கள் மற்றும் பொருள்களை சபை வழங்கும்.

இந்தப் பயிற்சியைத் திறமையாக மேற்கொள்ளும் பயிற்சியாளர்களை சபையின் சுவடுகள் அமைப்பில் இணைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த மாவட்டத்தில் பனம் உற்பத்தியை மேலும் அதிகரிக்கவும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். - என்றார்.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்க முகாமையாளர் கே.கோபாலகிருஷ்ணன், சபையின் சுவடுகள் அமைப்பின் தலைவி பவானி தங்கத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-ஜ-17)

# குருதிக் கொடை

சாவகச்சேரி, பெப்.8

சாவகச்சேரி நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவினரின் ஏற்பாட்டில் குருதிக் கொடை நிகழ்வு நாளை மறுதினம் புதன் கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் நடைபெறவுள்ளது.

நீதிமன்றப் பணிப்பின் பேரில் சமூகப் பணியில் ஈடுபடுவோர் உட்பட பல குருதிக் கொடையாளிகள் அதில் குருதி வழங்கவுள்ளனர் எனவும் குருதிக் கொடை வழங்க விரும்புவோர் அன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலைக்கு வருகை தருமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஞ்சிய இறுதிக் கழிவகற்றல் திட்டம் 2018 இல் யாழ்ப்பாணத்தில் அறிமுகம்

யாழ்ப்பாணம், பெப். 8
சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எஞ்சிய இறுதிக் கழிவகற்றல் திட்டம் (றெசியூடல் வேஸ்ட் டிஸ்போசல் பசிலிற்றி) யாழ்ப்பாணத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் யாழ்.மாவட்டத்தில் இருந்து வரும் திண்மக் கழிவகற்றல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண முடியும். கீரிமலையில் சுண்ணக்கல் அகழ்வின் மூலமாக உருவாக்கப்பட்ட பெரும் குழி இந்தத் திட்டமுன்னெடுப்பின் ஊடாக நிரவப்படவுள்ளது என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.சத்தியகுமார் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், விசேட கருத்திட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சேரும் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் பெரும் நெருக்கடி நிலைமை காணப்படுகின்றது. அதைத் தீர்க்கும் வகையில் எஞ்சிய இறுதிக் கழிவகற்றல் திட்டம் கொண்டு வரப்படவுள்ளது. இந்தத் திட்டத்தில் யாழ்.மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி மன்றங்களாலும் சேகரிக்கப்படும் கழிவுகளில், இறுதிக் கழிவுகள் (ஒன்றுமே செய்ய முடியாத கழிவுகள்) ஒன்று சேர்க்கப்பட்டு கீரிமலையில் அமைக்கப்படும் இறுதிக் கழிவகற்றல் திட்டக் காணியில் கொட்டப்பட்டு நிரவப்படும்.



படம் 1 பாதுகாப்பு அரண் எவ்வாறு அமையவுள்ளது என்பதை விளக்கும் குறுக்கு வெட்டுப் படம்.

### தரம் பிரித்தல்

உள்ளூராட்சி மன்றங்களினால் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படும். அவை பின்னர் சேதனக் கழிவுகள் (உக்கக் கூடிய கழிவு), அசேதனக் கழிவு (உக்காத கழிவுகள்) என்று தரம்பிரிக்கப்படும். உக்குகின்ற அதாவது சேதனக் கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டுப் பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி மன்றங்கள் முன்னெடுக்க வேண்டும்.

தற்போது யாழ்.மாநகர சபை, சுன்னாகம் பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேசசபை என்பவற்றுடன் கூட்டுப்பசளை தயாரிப்பதற்கான கட்டடம் மற்றும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இவ்வாறு தயாரிக்கப்படும் கூட்டுப் பசளையை விவசாயிகளுக்கு விற்பனை செய்ய முடியும். கூட்டுப் பசளை தயாரித்த பின்னரும் எஞ்சும் இறுதிக் கழிவுகள் வேறாக்கப்படும்.



படம் 2 இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் போது பாதுகாப்பு அரண் எப்படி இருக்கும்.

### மீள்சுழற்சி

உக்காத கழிவுகளில் பிளாஸ்ரிக் - பொலித் தீன் என்பன வேறாக்கப்படும். கண்ணாடித் துண்டுகள் - கட தாசிகள் - இலத் திரனியல் கழிவுகள் (கணினி உதிரி பாகங்கள், தொலைபேசி உதிரிபாகங்கள் போன்றவை) என்பனவேறாக்கப்படும். இதில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் என்பவற்றை மீள் சுழற்சி செய்யப் படும். இவ்வாறு மீள்சுழற்சி செய்வதற்கான இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டு, யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. காக்கைதீவில் 8 மில்லியன் ரூபா செலவில் இதற்கான நிலையம் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது. இந்த மாத இறுதியில் இருந்து அந்த நிலையம் செயற்பட ஆரம்பிக்கும். ஒரு மணி நேரத்தில் 300 கிலோக் கிராம் பிளாஸ்டிக்கும், ஒரு மணி நேரத்தில் 200 கிலோ கிராம் பொலித் தீனும் மீள் சுழற்சி செய் யப்பட்டு விற்பனை செய்யப்படும். கண்ணாடித் துண்டுகள் – கடதாசிகள்– இலத்திரனியல் கழிவுகள் என்பன அவற்றைச் சேகரிக்கும் முகவர்களுக்கு விற்பனை செய்யப்படும். மீள்சுழற்சியின் பின்னரும் எஞ்சும் இறுதிக் கழிவு வேறாக்கப்படும்.

### 50 தொன் கழிவு

சேதனக் கழிவுகளிலிருந்து கூட்டுப் பசளை தயாரித்த பின்னர் எஞ்சும் இறுதிக் கழிவு, அசேதனக் கழிவுகளிலிருந்து மீள்சுழற்சியின் பின்னரும் எஞ்சும் இறுதிக் கழிவு என்பன ஒன்றாக இணைக்கப்படும். ஒருநாளைக்குஇவ்வாறான கழிவு 50 தொன் சேரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்படும் கழிவுகளே, கீரிமலையில் அமையவுள்ளஇத்தில் கொட்டி நிரப்பப்படவுள்ளது.

### சுகாதார நிலம் நிரப்புத் திட்டம்

கீரிமலையில், சிமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான காணியில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. சுண்ணக்கல் அகழ்வால் பெரும் கிடங்குகளாக உள்ளப் பகுதியில் தற்போது, இந்தத் திட்டத்துக்கான அலுவலகம் அமைக்கப்பட்டு, சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எஞ்சிய இறுதிக் கழிவகற்றல் திட்டம் செயற்படுத்தப்படும். இலங்கையில் ஏற்கனவே இந்தத் திட்டம் நடை முறையில் இருக்கின்றது. கம்பஹா மாவட்டத்தின் தொம்பே என்ற பிரதேசத்தில் வெற்றிகரமாக இந்தத் திட்டம் 2012 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகின்றது.

### பாதுகாப்பு அரண்கள்

சுற்றுச் சூழலுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையிலேயே இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும். கீரிமலையில் 15 ஹெக்ரேயர் காணி இந்தத் திட்டத்துக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஒரே தடவையில் 15 ஹெக்ரேயர் காணியும் நிரவப்படாது. ஒவ்வொரு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு அந்த ஒவ்வொரு துண்டும் நிரவப்பட்டு இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும்.

இறுதிக் கழிவுகளைக் கொட்டி அதனை இறுக்கும்போது அதிலிருந்து கசியும் நீர், நிலத்தடி நீருடன் கலக்காது இருக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். (படம் 1) இந்தக் குறுக்கு வெட்டுப் படத்தில் மேலே உள்ள குழாய் மூலம், கசியும் நீர் சேகரிக்கப்படும். அந்த நீர் மீள் சுழற்சிக்கு உள்ளாக்கப்படும். அதனை பின்னர், இந்தக் கழிவுகளை இறுகச்செய்வதற்கு தெளிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

மிக இறுக்கமான களிமண் போன்ற பதார்த்தத்தை உடைய பெண்டோனைட் மண் அடுக்கு 30 சென்ரீ மீற்றருக்குப் போடப்படும். இதனால் ஒருபோதும் கழிவுகளை இறுக்கும் போது கசியும் நீர் நிலத்தடி நீருடன் கலக்காமல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### நிலத்தடி நீரும் கலக்காது

மழை காலங்களில் நிலத்தடி நீரின் மட்டம் உயர்வடையும். இதன் போது நிலத்தடி நீர், இந்தக் கழிவுகளுடன் கலக்காது இருக்க (படம் 1) குறுக்குவெட்டுப் படத்தில் இரண்டாவதாக உள்ள குழாய் பயன்படுத்தப்படும். நீர் மட்டம் உயர்வடைந்தால், இந்தக் குழாய் ஊடாக வெளியேற்றப்பட்டு அருகில் சேமிக்கப்பட்டு, இந்தத் திட்ட எல்லைப் பிரதேசத்தில் உள்ள மரங்களுக்கு ஊற்றுவதற்குப் பயன்படுத்தப்படும்.


படம் 3
கம்பஹா மாவட்டம் தொம்பேவில் தற்போது செயற்படுத்தப்படும் நிலை.

### 2018 ஆரம்பம்

இந்தத் திட்டத்துக்காக 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கொரிய அரசால் வழங்கப்படவுள்ளது. அத்துடன் ஒரு மில்லியன் ரூபாவும் வழங்கப்படவுள்ளது. கீரிமலையில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ள காணியை நில அளவை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்தை முன்னெடுப்பதற்கான பாதுகாப்பு அரண்கள் அமைத்து சகல நடவடிக்கைகளும் பூர்தியான பின்னர் 2018 ஆம் ஆண்டு முதல் இறுதிக் கழிவுகள் கொட்டப்பட ஆரம்பிக்கும்.

20 ஆண்டுகளிலேயே, 15 ஹெக்ரேயர் நிலப் பரப்பும் நிரவி முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் நிரவப்பட்ட நிலப் பிரதேசத்தை விளையாட்டுமைதானமாகவோ, பூங்காவாகவோ பயன்படுத்த முடியும். இவ்வாறான திட்டமே, சர்வதேச நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட கழிவகற்றல் திட்டமாக உள்ளது. (ற-5)

## சமய தீட்சை பெறலாம்

சாவகச்சேரி,பெப்.8
உலக சைவத் திருச்சபை நாடளாவிய ரீதியில் இந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த வகையில் ஆலயங்கள் மற்றும் பாடசாலைகளில் சைவ சமய தீட்சைபெற விரும்புவோர் "உலக சைவ திருச்சபை" பெருங்குளம் சங்கத்தானை வீதி, சாவகச்சேரி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-9)

## டெங்கு தொற்றைக் கட்டுப்படுத்த இந்த மாதம் விசேட நடவடிக்கை

சாவகச்சேரி,பெப்.8
கடந்த மாதம் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளதை அடுத்து இந்த மாதம் 11, 12, 13 ஆகிய திகதிகளில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுநடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பீ.ஜீ.மகிபாய அறிவித்துள்ளார். டெங்கு தொற்று இனங் காணப்பட்ட மாவட்டங்களில், டெங்கு தொற்று அதிகமாகக் காணப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில், டெங்கு தொற்று அதிகமாகவுள்ள பொதுச் சுகா தார பரிசோதகர் பிரிவுகளில், விசேட டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர் அறிவித் துள்ளார்.

அதன்படி கடந்த வருடமும் கடந்த மாதமும் அதிகளவு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் மேற்கொள்ளபடவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும், 12 ஆம் திகதி [illegible] பிரிவிலும், 13 ஆம் திகதி வரணிப் பிரிவிலும் விசேட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினருடன் பொலிஸார் படையினர், பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் மற்றும் தொண்டர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். 2015 ஆம் ஆண்டு தென்மராட் சிப் பிரதேசத்தில் 242 பேரும், கடந்த ஜனவரி மாதத்தில் 80 பேரும், பெப்ரவரி மாதத்தில் கடந்த 4 ஆம் திகதி வரை 7 பேரும், டெங்குத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். கடந்த ஜனவரி மாதத்தில் 51 பேரும், பெப்ரவரி மாதத்தில் 12 பேரும் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜித சேனாரத்னவின் குடும்பம் என்னை பழிவாங்கத் துடிக்கிறது

## மகிந்த ராஜபக்ச ஆவேசம்

கொழும்பு, பெப்.8

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் குடும்பம் தன்னைப் பழிவாங்க முயற்சிக்கின்றது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆவேசமாக தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வர் யோசித தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் நுகேகொடை இல்லத்தில் ஏராளமான ஆதரவாளர்கள் நாளாந்தம் திரண்டு வந்து ஆறுதல் கூறத் தொடங்கியுள்ளனர்.

அவ்வாறு ஆறுதல் கூற வந்தவர்களிடம் அமைச்சர் ராஜித சேனாரத்ன குடும்பத்தினருக்கு எதிராக மகிந்த பொரிந்து தள்ளியுள்ளார். ராஜித குடும்பமே என்னைப் பழிவாங்க முயற்சி செய்கின்றது. அவ்வாறு பழிவாங்கினால் நான் பயந்துவிடுவேன் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள். அத்துடன் நான் அவர்களின் காலடியில் சரணடைவேன் என்றும் அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.



ஆனால், நான் ஒருபோதும் இறங்கி வரமாட்டேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்கு சாவு மணியடிக்க அமைச்சர் ராஜித சேனாரத்னவின் புதல்வர் சதுர சேனாரத்ன முன்னின்று செயற்பட்ட விவகாரம் மகிந்த ராஜபக்சவுக்குள் இன்னும் தணியாத கோபமாக உள்ளதையே இது குறிப்பிடுகின்றது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது பொது வேட்பாளரின் ஊடகப் பேச்சாளராகவும், ராஜபக்சவினருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் முன்வைத்து கடுமையான விமர்சனங்களை முன் வைத்தும் அமைச்சர் ராஜித பெரும் பங்களிப்பொன்றை வழங்கியிருந்தார். இதன் காரணமாகவே பொது மக்களின் கருத்துக்கள் ராஜபக்சவினருக்கு எதிராக திரும்பியது.

அது தொடர்பான பழிவாங்கும் உணர்வு மகிந்தவின் மனதில் இருந்து கொண்டிருப்பதையே யோசிதவின் கைதுடன் ராஜித குடும்பத்தினரை அவர் தொடர்புபடுத்தி விமர்சித்திருப்பதிலிருந்து தெரிகின்றது என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## சுதந்திரக் கட்சி பிளவுக்கு மைத்திரியே பொறுப்பு

குற்றஞ்சாட்டுகின்றது கூட்டு எதிர்க்கட்சி



கொழும்பு, பெப். 8

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே பொறுப்பேற்க வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்ஸா இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

சுதந்திரக் கட்சியில் மேலும் பிளவு ஏற்படுமாக இருந்தால் அதற்கான பொறுப்பை ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவான உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியில் இருந்து பிரிந்து செல்வதற்கு எத்தனிக்கின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவும் இவ்வாறான கருத்தை அண்மையில் முன்வைத்திருந்தார். (ற)

## தேர்தல் ஆணையாளர் மீது வழக்குத் தொடர முடியாது

கொழும்பு, பெப்.8

தேர்தல்கள் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளரோ, தேர்தல்கள் திணைக்களமோ அதிகாரத்தில் இல்லை என்றும் இவ்வாறிருக்கையில் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக எவ்வாறு வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என தேர்தல்கள் தொடர்பான சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் உறுப்புரிமை வழக்கினால், தேர்தல்கள் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப் போவதாக வார இறுதி சிங்கள பத்திரிகையில் கூட்டு எதிர்க் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே குறித்த அதிகாரி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் தொடர்பில் வழக்குத் தொடர்வதாக இருந்தால், தேர்தல்கள் ஆணைக்குழுவின் பெயரிலேயே தொடர முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## போரை முடித்த பெருமை பொன்சேகாவையே சாரும்

### அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகின்றார்

கொழும்பு, பெப்.8

30 ஆண்டுகள் நாட்டில் நீடித்து வந்த போரை முடிவுக்கு கொண்டு வந்த பெருமை பீல்ட் மார்ஷல் சரத் பொனசேகாவை சாரும் என்று கூறியுள்ளார் உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக சரத் பொன்சேகா நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்டி ஹாரிஸ்பத்துவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எம்.கே.டி.எஸ். குணவர்த்தனவின் மறைவினால் ஏற்பட்ட தேசியப் பட்டியல் ஆசன வெற்றிடத்துக்கு சரத் பொன்சேகா அனேகமாக நியமிக்கப்படலாம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர் சரத் பொன்சேகாவேயாகும். அவரை சிறையில் அடைத்து பெரும் பாதிப்பை கடந்த அரசு மேற்கொண்டது.



எனவே அவருக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்குவது மிகவும் பொருத்தமானது.- என்று கூறியுள்ளார்.

எதிர்வரும் 9ஆம் திகதி சரத்பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## எதனோல் இறக்குமதி குறித்து மீண்டும் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, பெப்.8

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திய சட்டவிரோத எத்தனோல் மதுசார இறக்குமதி தொடர்பான விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த அரசின் காலத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எதனோல் மதுசாரம் தொடர்பாக சாட்சியங்களை பெற மதுவரி திணைக்கள அதிகாரிகள் மற்றும் 24 அரச நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் 22 பேர் கடந்த 2 ஆம் திகதி நிதி மோசடி விசாரணைப் பிரிவு அழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணைகளின் பின்னர், இந்த அதிகாரிகள் குற்றவாளிகளா? அல்லது அரசின் சாட்சியாளர்களா? என்பது குறித்து நிதி மோசடி விசாரணைப் பிரிவு இறுதி முடிவை எடுக்க உள்ளது.

அழைக்கப்பட்ட அதிகாரிகளில், தேசிய லொத்தர் சபையின் முன்னாள் உயர் அதிகாரி, கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், வடமத்திய மாகாணத்தில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் கப்டன் மற்றும் மீட்டியாகொட பொருளாதார மத்திய நிலையத்தின் அதிகாரியும் அடங்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சட்டவிரோதமாக எதனோல் மதுசாரத்தை இறக்கு மதி செய்ததாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ, நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்ணாண்டோ, லக்ஸ்மன் வசந்த பெரேரா ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அருந்திக்க பெர்னாண்டோ தற்போதைய அரசில் பிரதியமைச்சர் பதவியை வகித்து வருவதுடன் லக்ஷ்மன் வசந்த பெரேரா இராஜாங்க அமைச்சராக பதவி வகித்து வருகிறார். (ற)

## கூட்டு எதிர்க் கட்சியினர் இடையேயும் முரண்பாடு

கொழும்பு, பெப்.8

கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள பங்காளிக் கட்சிகளிடையேயும், மகிந்த சார்பு குழுவுக்கிடையிலும் இணக்கப்பாடின்மை ஏற்பட்டுள்ளது என்று அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த கால நிகழ்வுகள் அனைத்தும் இதற்கு ஆதாரமாக காணப்படுகின்றன என்றும் அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

அண்மையில் முன்னெடுத்த கறுப்புக் கொடி நிகழ்வின் போதும், ஆர்ப்பாட்டங்கள், தேங்காய் உடைத்தல், தேசிய தின நிகழ்வுகளை புறக்கணித்தல் உட்பட கூட்டு எதிர்க்கட்சியால் முன்னெடுக்கப்பட்ட பல நிகழ்வுகளிலும் கட்சிக்குள் முரண்பாடுகள் காணப்பட்டுள்ளது என்று அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.


உதய கம்மன்பில கறுப்புக்கொடி தினமொன்றை பிரகடனப்படுத்தும் போது, விமல் வீரவன்ச அதற்கு எதிராக செயற்பட்டுள்ளார். இவர் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக தெரிவித்திருந்தார்.

சுதந்திர தின அரச விழாவை புறக்கணிப்பதாக மகிந்த சார்புக் குழு அறிவித்திருந்த போதிலும், அக்குழுவிலுள்ள சில முக்கிய உறுப்பினர்கள் சுதந்திர தின நிகழ்வின் முன்வரிசையில் இடம்பிடித்திருந்ததை காணமுடிந்தது.

அதேபோன்று, நிதி மோசடி தொடர்பிலான பொலிஸ் விசாரணைப் பிரிவை நீக்குவதற்கு வேண்டி நேற்று மேற்கொள்ளப்பட்ட தேங்காய் உடைக்கும் நடவடிக்கையிலும் கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள குறிப்பிடத்தக்க உறுப்பினர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை. இதில், உதய கம்மன்பில, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. அத்துடன், இந்தக் குழுவிலுள்ள டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண போன்றவர்களும் ராஜபக்ச ஆதரவு குழுவிலிருந்து வெளியேற தீர்மானித்துள்ளமை அவர்களின் அறிவிப்புக்களிலிருந்து தெரியவந்துள்ளது என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கி - இலங்கை இணைந்த விமான சேவை குறித்துப் பேச்சு



கொழும்பு, பெப்.8
துருக்கி மற்றும் இலங்கை விமான சேவைகளை இணைத்து சேவையொன்றை வழங்குவது தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் துருக்கி எயார்லைன்ஸ் பிரதி தவிசாளர் டாக்டர் டேமல் கொடிலுடன் பேச்சு நடத்தியுள்ளார்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பிரதிதியாக அமைச்சர் கடந்த வியாழக்கிழமை துருக்கிக்குப் பயணம் செய்துள்ளார். இந்தப் பயணத்தின் போதே மேற்கண்ட விடயம் தொடர்பில் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.
அமைச்சரின் யோசனையை வரவேற்ற துருக்கி எயார் லைன்ஸ் பிரதித் தவிசாளர் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கான குழுவொன்றை அமைப்பதோடு, இலங்கை விமான சேவையின் அதிகாரிகளை துருக்கி நாட்டுக்கு அழைப்பதாகவும் தெரிவித்தார்.
துருக்கி நாட்டுக்கு சேவையை வழங்கும் பயண முகவர் நிலையங்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் டாக்டர் கொடில் உடன்பட்டுள்ளார்.
அதேவேளை, மத்தல சர்வதேச விமான நிலையத்தை, துருக்கி விமான சேவையின் விமானங்களை பராமரிக்கும் மையமாக செயற்படுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.
இலங்கை தேயிலைக்கான துருக்கி சந்தையை விருத்தி செய்வது மற்றும் வர்த்தக மேம்பாடுகள் குறித்தும் இந்த பயணத்தின் போது பேச்சு நடத்தப்பட்டுள்ளது. (ற)

# துண்டு விழும் தொகையை குறைக்குமாறு அறிவுறுத்து

### சர்வதேச நாணய நிதியம் விடுத்தது

கொழும்பு, பெப்.8
இலங்கை அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகையை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க இலங்கை அரசு கவனம் செலுத்த வேண்டும் எனவும் நிதியம் கூறியுள்ளது.
கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 5.2 அதிகரிப்பை காட்டிய அந்நிய செலாவணி கையிருப்பு, இம்முறை கடந்த கால நிலைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

> கடந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் 5.2 அதிகரிப்பை காட்டிய அந்நிய செலாவணி கையிருப்பு, இம்முறை கடந்த கால நிலைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுத்தால், இந்த வருடம் வரவு- செலவுத் திட்டத்தின் எதிர்பார்த்த இலக்கை அடைவது இலகுவானதாக இருக்கும்.
உலகரீதியாக ஏற்படும் பொருளாதார நிலைமைகள் குறித்து இலங்கை அதிக அவதானத்துடன் இருக்க வேண்டும். முதலீடுகளுக்கு உற்கழலை மேலும் உருவாக்குவதன் மூலம் இலங்கை இந்த சிக்கலான நிலைமையில் இருந்து மீளக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்று சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது. (ற)


## முன்னாள் அமைச்சர்கள் பலர் வீடுகளைக் கையளிக்கவில்லை

### ஊழல் எதிர்ப்பு முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்.8
முன்னாள் அமைச்சர்கள் பலர் தமக்கு கடந்த அரசில் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை இன்னும் திருப்பி கொடுக்கவில்லை என ஊழல் எதிர்ப்பு முன்னணி தெரிவித்துள்ளது.
அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக பதவி வகித்த காலத்தில் வழங்கப்பட்ட வீடுகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதுவரை அரசிடம் மீளக் கையளிக்கவில்லை. அமைச்சர் பதவிகளில் இருந்து விலகி 13 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அவர்கள் அந்த வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.
அதேவேளை 100 நாள் வேலைத் திட்டம் நடைமுறையில் இருந்த போது 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவை பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு அரச வாகனங்கள் வழங்கப்பட்டதுடன் அவற்றையும் அவர்கள் இன்னும் திருப்பி கொடுக்கப்படவில்லை.
இது அரச நிதி மற்றும் நிர்வாக சட்ட திட்டங்களை மீறும் செயல் எனவும், இவர்களுக்கு எதிராக பொதுச் சொத்துக்களை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் ஊழல் எதிர்ப்பு முன்னணி கூறியுள்ளது. (ற)

## பாண் துண்டு தொண்டையில் சிக்கியதில் தாய் ஒருவர் சாவு

கொழும்பு, பெப்.8
அநுராதபுரம் மற்றும் மிகிந்தலைப் பகுதிக்கு சுற்றுலா வந்த தாயொருவர் சாப்பிடும்போது பாண் துண்டொன்று தொண்டைக்குள் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று மிகிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.
மிகிந்தலை திருகோணமலை பிரதான வீதியின் மகனந்தராவ குளத்தினருகே இருந்த கடையொன்றில் காலை உணவாக பாணும் சம்பலும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது பாண் துண்டொன்று தொண்டைக்குள் சிக்கியதால் அவதியுற்றுள்ளார்.
இதனை அறிந்து கொண்ட இவரது கணவர் உடன் பாதிக்கப்பட்ட தனது மனைவியை மிகிந்தலை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற போதும் பாதிக்கப்பட்ட இளம் தாயை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர்.
இவ்வாறு பாண் துண்டு தொண்டைக்குள் சிக்கி மரணமடைந்தவர் புத்தளம் முன்னே குளம் பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தாயான ஏ. தம்மிக்கா குலரத்ன (வயது-41) என்பவராவார்.
உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின் மரணமடைந்த பெண்ணின் சடலத்தை குடும்பத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மிகிந்தலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



## ஐக்கிய தேசிய முன்னணி யானை சின்னத்தில் போட்டி

கொழும்பு, பெப்.8
ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி எனும் பெயரில், இன்னுமுள்ள பல அரசியல் கட்சிகளுடன் கூட்டிணைந்து யானைச் சின்னத்தில் களமிறங்க தீர்மானித்துள்ளது.
அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி எனும் பெயரில் கட்சியின் யாப்பை அமைப்பதற்கும், இதுவரை கட்சியுடன் கூட்டிணையாத ஏனைய அரசியல் கட்சிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு கூட்டணி அமைப்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அக்கட்சியின் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாஷிம் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை- ஐக்கிய தேசிய முன்னணியை ஒரு அரசியல் கட்சியாக பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ற)

## இலத்திரனியல் அடையாள அட்டை ஏப்ரலில் நடைமுறையாகும்

கொழும்பு, பெப்.8
புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை அடுத்த மாதம் அல்லது ஏப்ரல் மாதத்தில் நடைமுறைக்கு வரும் என்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நவின்ன தெரிவித்துள்ளார்.
குறித்த அடையாள அட்டையில் அச்சிடப்படும் புகைப்படத்தின் அளவு உள்ளிட்ட விவரங்களை நிர்ணயிக்கும் சுற்றுநிருபம் எதிர் வரும் வாரம் நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
அதேவேளை, புதிய தேசிய அடையாள அட்டைக்கான புகைப்படங்களை விநியோகிக்கும் நிறுவனம் தம்மை அரசில் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற)

## 60 சாவுத் தண்டனைக் கைதிகளின் தண்டனையை மாற்றப் பரிந்துரை

### விரைவில் ஜனாதிபதியிடம்

கொழும்பு, பெப்.8
60 சாவுத் தண்டனை கைதிகளுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றப்படுவதற்கான பரிந்துரை விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.
சாவுத் தண்டனை கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவே மேற்படி பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது.
இதற்கமைய இவ்வாறு சாவுத் தண்டனைக் கைதிகளுக்கான தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட உள்ளது. சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள 34 கைதிகளின் தண்டனை இவ்வாறு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட உள்ளது.

> சாவுத் தண்டனை கைதிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவே மேற்படி பரிந்துரைகளை முன்வைக்கவுள்ளது. இதற்கமைய இவ்வாறு சாவுத் தண்டனைக் கைதிகளுக்கான தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட உள்ளது.

சாவுத்தண்டனை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்த ஜனாதிபதி, ஆயுள் தண்டனையாக மாற்றும் யோசனையை முன் மொழிந்துள்ளார்.
மேலும் 60 சாவுத் தண்டனைக் கைதிகள் தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட போதிலும் அது நிறைவேற்றப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தேங்காய் உடைத்துத் தெய்வத்தை திசை திருப்பும் முயற்சி பலிக்குமா...?

தெய்வம் நின்று கேட்கும் என்பார்கள். அதாவது தவறு செய்கிற மனிதனுக்கு அவன் திருந்தும் வகையில், அவன் தவறை உணரும் வரை அவகாசம் கொடுத்து-அவன் திருந்தாதவிடத்து தெய்வம் தண்டிக்கும் என்பது இதன் கருத்தாகும்.

ஆனால், பொதுவாழ்வில் ஊழல்கள் புரிந்தும், இலஞ்சம் வாங்கியும், பிறருக்கு இலஞ்சம் வழங்கியும் பழக்கப்பட்டுப் போனவர்கள் அந்தத் தெய்வத்துக்கே இலஞ்சம் கொடுக்க முனைவதை என்னவென்று சொல்வது?

ஆட்சியிலிருந்தபோது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மக்கள் சொத்துக்களைச் சூறையாடியவர்கள் மற்றும் கொலை, கொள்ளை நிர்வாக சீர்கேடுகளைப் புரிந்தவர்கள் மீது இன்றைய சிறிசேன-ரணில் அரசு படிப்படியாக இப்போதுதான் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியிருக்கிறது. அந்தவகையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஒரு புதல்வர் கைதாகி காவலில் இருக்கிறார். அந்த வரிசையில் மகிந்தாவின் மனைவி, இன்னொரு புதல்வர் மற்றும் சகோதரர்களும் இருப்பதாகத் தகவல்கள் வந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலைமையிலேயே, தென்னிலங்கையில் இருந்து ஒரு விசித்திரமான செய்தி வந்திருக்கிறது. சிறிசேன-ரணில் இணைப்பாட்சிக்கு எதிராக தெய்வங்களின் சீற்றத்தைத் திருப்பி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைக் காப்பாற்றவும் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் செயற்பாட்டுக்கு ஒரு முடிவு கட்டவும் என கூட்டு எதிர்க்கட்சியினர் ஒரு தேவாலயத்தில் ஒரு லட்சம் தேங்காய்களை உடைத்து பூசை வழிபாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

தெற்கில் சரித்திரப்புகழ் வாய்ந்த சீனிகம தேவாலயத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கூட்டு எதிர்த்தரப்பின் தலைவர் தினேஷ் குணவர்த்தனவுடன் வேறுபல முக்கிய புள்ளிகளும் கலந்து கொண்டனர்.

ஆருடக்காரர்களை நம்பியும், கைகள் விரல்களில் மந்திர சக்தியுடனான ஆபரணங்களை அணிந்து கொண்டும், தேவாலயங்களை எல்லாம் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும்கூட தரிசனம் செய்து கொண்டும் தேர்தலை நடத்திய ராஜபக்சவால், முழு நாட்டின் மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய்விட்டது. சிறுபான்மை மக்களையும் நியாயபூர்வமாக நடத்துவதற்கு அவரும் அப்போது அரசில் இருந்தவர்களும் முன்வந்திருந்தால், ஒருவேளை தெய்வங்களின் ஆசீர்வாதம் அவர்களுக்குக் கிடைத்திருக்கலாம்.

உண்மை, நீதி, நியாயம், தர்மம் என்பன இன்றைய உலகில் தெய்வாம்சங்களாக போற்றப்படுகின்றன. இவைகளைப் பின்பற்றிச் செயற்படும் மனிதர்கள் மக்களால் மகான்களாகப் போற்றப்படுவது ஒருபுறமிருக்க, அவ்வாறானவர்கள் நீதிமான்களாக இருப்பதால் மக்களும் அவர்களை வரவேற்றுத் தலைவர்களாக ஏற்றுக்கொள்கிறார்கள்.

அவர்கள் தெய்வங்களின் கோபத்தைத் தமக்கு விருப்பமில்லாதவர்கள் மீது திருப்பும்படி கோரி தேங்காய்களை உடைக்கவேண்டிய அவசியம் இல்லை. தெய்வம் நீதியின் பக்கம்தான் நிற்கும் என்பதால் அதற்குக் கோபத்தை வருவித்து எதிரிபக்கம் திருப்புதற்காக தேங்காய்களை உடைப்பதால் பயன் ஏற்படப்போவதில்லை.

எதுவானாலும் போர் முடிந்து பல வருடங்கள் ஆன நிலையில், பாதிக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டில் கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாமல், அவர்களிடமிருந்த ஒருசில உரிமைகளையும்கூட, பறித்தெடுத்துவிட கங்கணம் கட்டிக் கொண்டு செயற்பட்ட முன்னைய ஆட்சியாளர்கள், இன்று நல்லாட்சியாளரின் தார்மீக நடவடிக்கைகளைக் கண்டு எந்த அளவுக்கு அதிர்ந்து போயுள்ளார்கள் என்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றன.

முன்னைய ஆட்சியாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவில் இயங்கியவர்கள் அனைவரதும் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளும், கைதுகளும் ஆரம்பமாகியுள்ள நிலையில், போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, ஐ.நா.மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின் மீது ஏதோ ஒரு வகையிலான விசாரணைகளுக்கான ஏற்பாடுகளும் விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்த விசாரணை எவ்வாறு அமையும் என்பது மிக விரைவில் தெரியவரலாம். எனவே கூட்டு எதிர்க்கட்சியினர் மேலும் பல கோயில்களில் பல்லாயிரக்கணக்கான தேங்காய்களை உடைத்துத் தெய்வங்களை தம்பக்கம் இழுத்துக் கொள்ள முயற்சி செய்தாலும் ஆச்சரியமில்லை.

சிறுபான்மையினருக்கு அநீதிகளை இழைத்தவர்கள் அவற்றுக்கான பிராயச்சித்தத்தைச் செய்ய முற்பட வேண்டும். சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டும் அரசின் முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்காமல் இருந்தாலே பெரியகாரியம்.



# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் தொடர்பில்லை

## தெரிவிக்கின்றார் இலங்கைக்கான துருக்கி நாட்டுத் தூதுவர்

நேர்கண்டவர் அருண் ஆரோக்கியநாதர்

*(கடந்த 2ஆம் திகதிய தொடர்ச்சி)*

**துருக்கி மதச்சார்பற்ற அரசியல் யாப்பைக் கொண்டுள்ளது. தமது அரசியல் யாப்புக்களில் மதங்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் நாடுகள் பல இருக்கும்போது முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட உங்கள் நாடு உலகிற்கே சிறந்த முன்னுதாரணமாக விளங்குகின்றது. இலங்கையர்கள் தற்போது அரசியல்யாப்பு தயாரிப்பு வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டுள்ள நிலையில் அரசியல் யாப்பு என்பது மதச்சார்பற்றதாக அமைவது எந்தளவுக்கு முக்கியமானது எனக் கருதுகின்றீர்கள்?**

அது மிகவும் முக்கியமானது. 90 வருடங்களுக்கு முன்னர் குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டு நவீன துருக்கி கட்டியெழுப்பப் பட்டபோது நாகரிகமிக்க, மேற்குலக நாடாக மாறுவதற்கு அரசையும் மதத்தையும் வேறாக்க வேண்டும் என துருக்கியின் ஸ்தாபகத் தலைவர்கள் எண்ணினர். மக்களின் வாழ்க்கையில் மதங்கள் மிகவும் முக்கியமானவை என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடமில்லை அதனை நாம் மதிக்க வேண்டும். அதனை நன்கு கட்டிக்காக்கவேண்டும். ஆனால் நாம் மதங்களை அரசியலில் கலந்துவிட்டோமானால் நீங்கள் அந்த மதத்துக்கு மிகப்பெரிய தீங்கைச் செய்கின்றீர்கள். ஏனெனில் சிலதரப்பினர் தமது தனிப்பட்ட அரசியல் தேவைப்பாடுகளுக்காக மதத்தை அரசியலைப் பயன்படுத்துவர். தமது தனிப்பட்ட தேவைகளுக்காக மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துபவர் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை உண்மையான விசுவாசிகள் உண்மையான மதப்பற்றாளர்கள் கொண்டிருப்பதில்லை. இது தீர்க்கமானதொரு விடயம். [illegible] நலன்களுக்காக மதத்தை பயன்படுத்தக்கூடாது. அப்படிச் செய்யும்போது மதத்துக்கு தீங்கிழைக்கின்றீர்கள். மறுமுனையில், பன்மைத்துவம் கொண்ட ஜனநாயக சமூகம், விரும்பிய மதத்தை பின்பற்றுவதற்கான சுதந்திரம், கருத்து வெளியிடும் சுதந்திரம், சுயமாக சிந்திப்பதற்கான சுதந்திரம் ஆகியவற்றை நீங்கள் விரும்புமிடத்து ஒன்றையும் சார்ந்திராத அமைப்பு முறை அவசியமாகும். சார்பின்மை என்பது ஒருவர் தாம் விரும்பியதை விசுவாசிப்பதற்கோ அன்றேல் விசுவாசிக்காமல் இருப்பதற்கோ கொண்டிருக்கும் உரித்துடைமையைக் குறிக்கும். எந்த விதமான நம்பிக்கையையோ வழிமுறைகளையோ யார் மீதும் திணிக்காத நிலை சார்பின்மையில் உள்ள முக்கியவிடயமாகும். மதச்சார்பின்மை இந்த உத்தரவாதத்தை எமக்கு வழங்குகின்றது.

> "மக்களின் வாழ்க்கையில் மதங்கள் மிகவும் முக்கியமானவை என்பதில் எவ்வித சந்தேகத்துக்குமிடமில்லை. அதனை நாம் மதிக்கவேண்டும். அதனை நன்கு கட்டிக்காக்க வேண்டும். ஆனால் நாம் மதங்களை அரசியலில் கலந்துவிட்டோமானால் நீங்கள் அந்த மதத்துக்கு மிகப் பெரிய தீங்கைச் செய்கின்றீர்கள்"

### துருக்கியில் மதச்சார்பின்மைக் கொள்கை

மதச்சார்பின்மையை கொள்கையாகக் கொண்டிருப்பதனால் உங்கள் நாடு அடைந்துள்ள நன்மைகள் எவை?

துருக்கியை கடந்த 90 வருடங்களில் அதன் அமைப்பைக் கொண்ட அண்டை நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்குமிடத்து துருக்கி இன்றையநிலையில் உலகின் 17வது மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாகவும் நேட்டோ அமைப்பில் இரண்டாவது மிகப்பெரிய இராணுவ பலத்தைக் கொண்ட நாடாகவும் 10000 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட தனிநபர் வருமானத்தைக் கொண்டதாகவும் கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட ஜனநாயக நாடாகவும் திகழ்கின்றது. இதனை எப்படி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடைந்துகொள்ள முடிந்தது ? சார்பற்ற தன்மை கொண்ட ஜனநாயக ஆட்சி முறையால்தான் இது சாத்தியமானது. எமது நாட்டின் வரலாற்றில் ஏற்ற இறக்கங்கள் இருந்தன. இராணுவ ஆட்சியும் இடம்பெற்றதுண்டு. ஆனால் இறுதியாக நாம் ஜனநாயகத்தின் மீதே நம்பிக்கை வைத்தோம். சுதந்திரமான தேர்தல்கள் கருத்து வெளியிடும் சுதந்திரம் எந்தவகையான மத நம்பிக்கைகளையும் யார் மீதும் திணிக்காமை காரணமாக நாம் அதிகமதிகமாக சுதந்திரமாக சிந்திக்கும் மக்களாக மாறினோம். இது நாட்டில் சுபீட்சத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் கொண்டு வந்தன. எம்மைச் சுற்றி அமைந்துள்ள சிரியா, ஈராக் போன்ற நாடுகள் பெரிய பிரச்சினைகளில் சிக்குண்டு சின்னாபின்னமாகிவருகின்றன. அங்கெல்லாம் மதத்தின் ஒரு பிரிவைப் பின்பற்றுகின்றவர்கள் மற்றைய தரப்பினரை அடக்கி ஒடுக்கி வருகின்றனர். இதனால் பெரிய கசப்புணர்வுகள் பிரச்சினைகள் அங்கு குடிகொண்டிருக்கின்றன. அங்கெல்லாம் மதச்சார்பற்ற எதனையும் முன்னுரிமைப்படுத்தாத ஆட்சிமுறை இருந்திருப்பின் அவை கூட சுபீட்சமிக்க முன்னேறிய நாடாக இருந்திருக்கும். ஜனநாயகம் இன்மை, ஜனநாயக கற்கைகள் இன்மை, கருத்துவெளியிடும் சுதந்திரம் இன்மை, அனைத்து பிரஜைகளுக்கும் சம வாய்ப்புக்கள் இன்மையானது நாட்டுக்கு அழிவையே இறுதியில் கொண்டுவரும்.

**சிக்கல்கள் நிறைந்த மத்திய கிழக்கு**

உலகின் பதற்றகரமான சிக்கல்கள் மிக்க பிரதேசங்களிலொன்றான மத்திய கிழக்குக்கு அருகே கேந்திரஸ்தானத்தில் உங்களுடைய நாடு அமைந்திருக்கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ் .அமைப்புக்கு எதிரான மேற்குலகின் இராணுவ திட்டங்களில் துருக்கியின் வகிபாகம் பிரதானமானதாக உள்ளது. ஐஎஸ் ஐ.எஸ். அமைப்பினால் உலகுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலின் பரிமாணத்தை எப்படிப்பார்க்கின்றீர்கள்?

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மிகப்பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. நாம் அதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளோம். கடந்தாண்டு ஜுசனில் இடம்பெற்ற தேர்தலையடுத்து எமது தென்கிழக்கு பிராந்திய மாகாணத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் தலைநகர் அங்கராவில் இடம்பெற்ற சமாதான பேரணியொன்றில் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருந்தனர். இந்த இரு சம்பவங்களுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பே பொறுப்பாகும். இந்த அமைப்பினர் இஸ்லாமிய தேசத்தை முன்னிறுத்துபவர்கள் என்றெல்லாம் கூறப்படுகின்றது. எவரும் இதில் குழம்பிக்கொள்ளத் தேவையில்லை. இவர்களுக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் இடையே எவ்வித தொடர்பும் கிடையாது என்பது நிச்சயம். இவர்கள் கொடூரமான சிந்தனைகளைக் கொண்ட அசாதாரணமான வெறிபிடித்த கூட்டம். இஸ்லாம் மதத்துக்கும் இவர்களுக்கும் ஒற்றுமையேதும் கிடையாது. இஸ்லாம் சமாதானத்தின் மதம், இஸ்லாம் புரிந்துணர்வின் மதம், இஸ்லாம் சமத்துவத்தின் மதம். இவர்களின் பின்னணியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் எவரது கருவியாக இவர்கள் இருப்பினும் இவர்கள் தம்மை முஸ்லிம்களாக தம்மைக்காட்டிக்கொள்ள எத்தனித்தாலும் இவர்களை மிலேச்சத்தனம் கொண்ட கொலைகாரர்களாகவும் பயங்கரவாதிகளாகவுமே நோக்கமுடியும். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான சண்டையில் துருக்கி ஒரு முன்னோடியாக மேற்குலகினரின் நெருங்கிய பெரும் பங்காளனாக திகழ்கின்றது. ஐ.எஸ்.ஐ.எஸ். நிலைகளின் மீதான தாக்குதல்களின் போது துருக்கியிலுள்ள இராணு வத்தளங்கள் கூட்டு நாட்டுப்படையினரால் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான தாக்குதலில் ஈடுபட்டுள்ள அனைத்து நாடுகளிலும் நாமே அதிகமான பங்களிப்பை, வளங்களை வழங்கிவருகின்றோம். இது மிகப் பெரிய பிரச்சினை. இதனை கூட்டு வழிமுறை மூலமே தீர்க்க முடியும்.

> ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. நாம் அதனால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளோம். கடந்தாண்டு ஜுசனில் இடம்பெற்ற தேர்தலையடுத்து எமது தென் கிழக்கு பிராந்திய மாகாணத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டு வெடிப்பில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர்.

**ஐ.எஸ்.ஐ.எஸ்சில் இலங்கையர்களா?**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் 36 இலங்கையர்கள் இணைந்துள்ளதாக தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைக் காரணம் காண்பித்து இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்கு எதிரான சந்தேகங்கள் பொதுபலசேனா போன்ற கடும் போக்கு அமைப்புக்களால் கிளப்பப்படுவதுடன் முஸ்லிம்கள் தொடர்பாக தீவிர நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்ற கோஷங்கள் நாளுக்கு நாள் முன்வைக்கப்படுவதைக் காணமுடிகின்றது. இந்த நிலைமையை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?

36 பேர் தொடர்பான விபரங்களை நான் அறிந்திருக்கவில்லை. அவர்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பில் இணைந்தார்களா இல்லையா என்பது குறித்தும் எனக்குத்தெரியாது. ஆனால் சில தனிப்பட்டவர்களின் சில சட்டவிரோத நடவடிக்கைகளைக் காரணம் காண்பித்து இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகம் இலக்கு வைக்கப்படுமானால் அது மிகப் பெரிய தவறாகிவிடும். இந்த நாட்டின் அத்தியாவசியமான பிரிக்கமுடியாத பாகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்துவருகின்றது. அவர்களது மதம் முஸ்லிமாக இருக்கின்றபோதும் இலங்கையர் என்ற உணர்வில் அவர்கள் நூற்றாண்டு காலமாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மதத்தை முன்னிறுத்தியோ இனத்தை முன்னிறுத்தியோ அவர்கள் தம்மை வேறுபடுத்தவில்லை மாறாக இலங்கையின் ஒன்றிணைந்த அங்கமாகவே அவர்கள் தம்மை நோக்குகின்றனர். அது மிகவும் சிறந்த விடயமாகும். அவர்கள் ஏனைய மதத்தினருடன் இணைந்தே வாழ பல்மத பல்கலாசாரம் கொண்ட நாட்டில் விரும்புகின்றனர் அதுவே அழகானது. இது சில தனிப்பட்டவர்களின் சில தவறான நடவடிக்கைகளை காரணமாகக் கொண்டு முஸ்லிம் சமூகம் இலக்குவைக்கப்படவோ அன்றேல் அழிக்கப்படவோ கூடாது.

நாம் மதங்களை அரசியலில் கலந்து விட்டோமானால் நீங்கள் அந்த மதத்துக்கு மிகப்பெரிய தீங்கைச் செய்கின்றீர்கள். ஏனெனில் சிலதரப்பினர் தமது தனிப்பட்ட அரசியல்தேவைப்பாடுகளுக்காக மதத்தைப் பயன்படுத்துவர். தமது தனிப்பட்ட தேவைகளுக்காக மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துபவர் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை உண்மையான விசுவாசிகள், உண்மையான மதப்பற்றாளர்கள் கொண்டிருப்பதில்லை. இது தீர்க்கமானதொரு விடயம். உங்களது அரசியல் நலன்களுக்காக மதத்தை பயன்படுத்தக்கூடாது. அப்படிச் செய்யும் போது மதத்துக்கு தீங்கிழைக்கின்றீர்கள்.

**ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு இஸ்லாத்துடன் தொடர்பில்லை**

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் இடையே எவ்வித தொடர்பும் கிடையாது என்பது நிச்சயம். இவர்கள் கொடூரமான சிந்தனைகளைக் கொண்ட அசாதாரணமான வெறிபிடித்த கூட்டம்.

இஸ்லாம் மதத்துக்கும் இவர்களுக்கும் ஒற்றுமையேதும் கிடையாது. இஸ்லாம் சமாதானத்தின் மதம், இஸ்லாம் புரிந்துணர்வின் மதம், இஸ்லாம் சமத்துவத்தின் மதம். இவர்களின் பின்னணியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் எவரது கருவியாக இவர்கள் இருப்பினும் இவர்கள் தம்மை முஸ்லிம்களாக தம்மைக்காட்டிக் கொள்ள எத்தனித்தாலும் இவர்களை மிலேச்சத்தனம் கொண்ட கொலைகாரர்களாகவும் பயங்கரவாதிகளாகவுமே நோக்கமுடியும்.

# எல்நினோத்தாக்கமும் தமிழக மீனவர் எல்லை தாண்டுதலும்

எல்நினோ என்றால் ஸ்பானிய மொழியில் குழந்தை யேசுவைக் குறிக்கும். பெருநாட்டு மக்களால் பசுபிக் கடலில் மார்கழி மாதத்தில் கிறிஸ்மஸ் வாரத்தை ஒட்டி உருவாகும் வெப்பக்கடலலைகளுக்கு எல்நினோ என்ற பெயரை வைத்தனர். ஆனால் இன்று காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பருவமாற்றங்களைக் குறிக்க சடுதியான எல்நினோ என்ற பதம் பயன்படுத்தப்படுகின்றது.

காலநிலை மாற்றம் மத்திய கோட்டுப் பிரதேசத்தில் கடலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதனை இந்தோனேசியாவை அண்டிய பிரதேசத்தில் அவதானிக்கலாம். இதனால் கடல் வெப்பநிலையில் மாற்றம், காற்றுத்திசையின் வேகத்தில் மாற்றம், கடல் அலைகளில் மாற்றம், வளிமண்டல வெப்பநிலை, யில் மாற்றம் என ஏற்படுத்துகின்றன. எல்நினோ தாக்கத்தால் கடல் நீர்மட்டம் 15 சென்ரிமீற்றர் தொடக்கம் 40 சென்ரிமீற்றர் வரை உயரும்.

கடல் அலைகளில் செல்வாக்குச் செலுத்தும் கெல்வின் அலை, ரொஸ்பி அலை என்பன எல்நினோவால் பாதிக்கப்படுகின்றன. பாக்கு நீரிணையில் எல்நினோவால் பாதிக்கப்படும் தன்மை அதிகம் உள்ளது. இதனால் கடலில் பல மாறுபட்ட சுழிப்போட்டங்கள் ஏற்படுகின்றது.

ஆனால் இது தொடர்பான சமுத்திரவியல் கற்கைகளை இந்திய அரசோ அன்றேல் இலங்கை அரசோ மேற்கொள்ளவில்லை. உலக காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட பாதிப்பே பாக்கு நீரிணையில் ஏற்படும் எதிர்பாராத நீரோட்ட மாற்றங்களாகும். இதனால் தமிழக மீனவர்கள் மிகவும் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றன.

கடந்த ஒரு வருட காலமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் சுமார் 500க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் எல்லை தாண்டியமைக்காகக் கைது செய்யப்பட்டபோது மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதன்போதுஇராமேஸ்வரம், நாகர் கோயில், கடலூர், சென்னை, தூத்துக்குடி எனப்பல இடங்களில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருந்தனர். அவர்கள் கடலோட்டத்தால் தான் தாம் படகுகளைக் கட்டுப்படுத்த முடியாது போனமை பற்றிக் குறிப்பிட்டு இருந்தனர்.

உண்மையில் அவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கவில்லை. எல்நினோ தாக்கத்தால் ஏற்பட்ட கடல் அலைகளின் தாக்கமே படகுகளை திசை திருப்பி உள்ளது.

எனவே இவர்களை கைது செய்து சிறையில் அடைத்தல் என்பதோ கண்ட இடத்தில் சுடுதல் என்பதோ மனிதாபிமானமற்ற செயல் மட்டுமல்ல, பிரச்சினையை விஞ்ஞான ரீதியாக அணுகாத தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றது.

உலக காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா. பிரகடனத்துக்கு அமைவாகவே இந்தப் பிரச்சினை அணுகப்பட வேண்டும். இலங்கை இந்தியக் கடல் எல்லை தொடர்பான இந்திராகாந்தி அம்மையாரின் கச்சதீவு ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். காலநிலை மாற்றத்தால் கடலில் ஏற்பட்ட சுழிப்போட்ட மாறுதல்கள் இந்திய-இலங்கை கடல்களில் குறிப்பாக பாக்குநீரிணையில் ஏற்படுத்தும் தாக்கங்களை விஞ்ஞான ரீதியாக அணுகவேண்டும்.

மேலும், இதனால் பாதிக்கப்படும் அப்பாவி மீனவர்களுக்கு வழிகாட்டல் வேண்டும். காலநிலை மாற்றத்துக்கு ஏற்பட்ட புதிய கடல் எல்லைகள் உருவாக்கப்படல் வேண்டும். அல்லது பொதுக் கடற்பரப்பு உருவாக்கப்படல் வேண்டும். மாறாக மீனவர்களை கைது செய்தாலோ, படகுகளை பறிமுதல் செய்தாலோ தவறான நடவடிக்கையாகும். காலநிலை மாற்றத் தாக்கமே தமிழக மீனவப் படகுகள், திசைமாறி செல்வதற்குக் காரணம் என்ற உண்மையை தமிழக அரசும் உறுதியாக அறிந்து கொள்ள வேண்டும்.

மருத்துவர் சி.யமுனாநந்தா

# பாவனையாளர்களின் தலைவிதிக்கு எப்போதுதான் மாற்றம் கிடைக்கும்?

யாழ்.குடா நாட்டைப் பொறுத்த வரையில் மரக்கறி வகைகள், கடல் உணவுகள் ஆகியவற்றின் விலைகள் குறைவடையாத நிலையில் காணப்படுவதால் நுகர்வோர் பொருளாதாரக் கஷ்டங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடுமையாகப் பெய்த மழை காரணமாக மரக்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்து உச்சத்தைத் தொட்டன. சாமானியர்கள் இவற்றைத் திரும்பிக் கூடப் பார்க்க முடியாத நிலை காணப்பட்டது. தற்போது இவற்றின் விலைகள் அதிகம் குறைந்து விட்டதாகக் கூறுகின்றனர். ஆனால், சந்தைகளுக்குச் சென்றால் குறைந்த விலையில் இவை விற்கப்படுவதாகத் தெரியவில்லை. முன்னரை விடக் குறைந்த விலையில் இவை விற்கப்படுகின்றதே தவிர சாதாரண விலைக்கு விற்கப்படுவதாகத் தெரியவில்லை. பச்சமிளகாய் 240 ரூபாவுக்கும், கத்தரிக்காய் 140 ரூபாவுக்கும், பயிற்றங்காய் 200 ரூபாவுக்கும் விற்கப்படும் போது இவற்றை சாதாரணமான விலை எனக் கூற முடியுமா?

இதேவேளை கடல் உணவுகளும் உச்ச விலைகளில் விற்கப்படுகின்றன.

தி.புவனேந்திரன், தாவடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பூட்டான் இளவரசர்

# பிறப்பு

திம்பு,பெப்.8
பூட்டானின் முடிக்குரிய இளவரசர் பிறந்துள்ளதாக பூட்டான் அரச குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.
கடந்த வெள்ளிக்கிழமை கிமாலய பிரதேசத்துக்குரிய இளவரசர், தலைநகர் திம்பபுவில் லிங்கனா பிரதேசத்தில் பிறந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தையின் பிறப்பால் அரச குடும்பத்தினர் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது வரை குழந்தையின் பெயர் வெளியிடப்படவில்லை. அரசர் ஜிஜ்மி 750 ஆயிரம் பேரை அரசாண்டு வருகிறார். இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் கல்வி கற்றுள்ள இவர், கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து நாட்டை ஆட்சி செய்து வருகிறார். அத்துடன் ஜனநாயக மாற்றங்களுக்கும் வழிகோலியுள்ளார்.
2008 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் பூட்டானில் அரசியல் அமைப்பு கொண்டுவரப்பட்டதால், அரச ஆட்சி முடிவுக்கு வந்தது. நாட்டின் நலன், பொருளாதார வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு மன்னராலே, அரசியல் அமைப்பு கொண்டுவரப்பட்டது. (ஐ-ரி4)

# ஏவுகணை பரிசோ
# தயாராகும் வட

## உலக நாடுகள் எதிர்ப்பு

பியாங்யாங்,பெப்.8
செயற்கைக்கோள் ஏவுவதாகக் கூறி மீண்டும் அணு ஆயுத ஏவுகணைப் பரிசோதனைக்கு தயாராகி வரும் வடகொரியாவுக்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இது தொடர்பாக, விவாதிப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபை அவசரமாகக் கூடுகிறது.
ஆராய்ச்சிப் பணிகளுக்காக செயற்கைக் கோளை ஏவத் திட்டமிட்டுள்ளதால் தங்களது நாட்டின் கிழக்குக் கடற்பகுதியில் கப்பல்கள் செல்ல அனுமதிக்க வேண்டாம் என சர்வதேச கடல் அமைப்புக்கு வட கொரியா கடந்த வாரம் அறிவிப்பாணை வெளியிட்டது.
ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணு ஆயுத பரவல் தடை சட்டத்தை மீறிய வகையில் கடந்த மாதம் சக்திவாய்ந்த ஐதரசன் குண்டை வெடித்து வடகொரியா பரிசோதனை நடத்தியது.
அந்த நாட்டின் இந்த அத்துமீறலானது அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, இந்தியா உள்ளிட்ட உலகநாடுகள் கடும் எதிர்ப்பையும், அந்த நாட்டின மீது ஐ.நா.சபை புதிய பொருளாதார தடையை விதிக்க வேண்டும் என்ற வலி யுறுத்தலையும் சம்பாதித்துள்ள நிலையில் வடகொரியா ஜனாதிபதியின் இந்த அதிரடி அறிவிப்பு வெளியானது.
பூமியைக் கண்காணிக்கவும்- ஆய்வு செய்யவும் செயற்கைக்கோளை ஏவ நாங்கள் திட்டமிட்டுள்ளோம். எனவே, இன்று முதல் எங்கள்து நாட்டுக் கடற்பகுதியில் கப்பல்கள் செல்வதைத் தவிர்க்க வேண்டும் என சர்வதேச கடல் அமைப்பு உள்ளிட்ட ஐ.நா.வின் மூன்று அமைப்புகளுக்கு வட கொரியா கடிதம் எழுதியுள்ளது.
வடகொரியாவின் தற்போதைய ஜனாதிபதியின் தந்தையான மறைந்த முன்னாள் ஜனாதிபதி கிம் ஜாங்-கின் பிறந்த நாளான எதிர்வரும் 16 ஆம் திகதி இந்த செயற்கைக் கோள் ஏவப்படலாம் என சர்வதேச உளவு அமைப்புகள் மோப்பம் பிடித்துள்ள நிலையில் வடகொரியாவின் இந்த அத்து மீறலுக்கு அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன.
வடகொரியா மீது ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக நடவடிக்கை எடுத்து, கடுமையான பொருளாதார கட்டுப்பாடுகள் உள்ளிட்ட தடைகளை விதிக்க வேண்டும் என அமெரிக்க அரசின் வெளியுறவுத்துறை செயலாளர் ஜான் கிர்பி கேட்டுக் கொண்டார்.
செயற்கைக்கோளை ஏவும் போர்வையில் நீண்டதூரம் பாய்ந்து செல்லக்கூடிய நவீனரக ஏவுகணையைப் பரிசோதிக்க திட்டமிட்டுள்ள வட கொரியா உடனடியாக தனது முயற்சியை கைவிட வேண்டும். இல்லா விட்டால் தனது செய்லுக்கு பெரிய விலையை தர வேண்டியதாகி விடும் என தென்கொரியா ஜனாதிபதி மாளிகை எச்சரித்தது.
வடகொரியாவின் இந்தத் திட்டம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் கலந்து பேசி ஆலோ சித்து, எங்களது நாட்டின் பாதுகாப்புக்கு எதிராக அச்சுறுத்தி வரும் அந்த நாட்டின் திட்டத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுப்போம் என ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே குறிப்பிட்டார்.
ஆனால், இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவுகணைகளைப் பரிசோதிப்பதற்காக புவியியல் ஆய்வுக்கு செயற்கைக் கோள் அனுப்பப்போவதாக அறிவித்த வடகொரியா, தற்போது ரொக்கெட்டை ஏவுவதற்கான முன்னேற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.
அநேகமாக எந்நேரமும் சர்ச்சைக்குரிய இந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப் படலாம் என்ற அச்சம் தென்கொரியா உள்ளிட்ட நாடுகளை ஆட்கொள்ளத் தொடங்கியுள்ளது.
வடகொரியாவின் இந்தச் செயலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக, வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.
இதே கருத்தைப் பதிவு செய்துள்ள அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், வட கொரியாவின் ஏவுகணை மற்றும் அணு ஆயுத திட்டங்கள் நம்முடைய நட்பு நாடுகள் மற்றும் அவை அமைந்துள்ள பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது எனக் குறிப் பிட்டுள்ளார்.
இதற்கிடையே, தங்களது நாட்டுக் கடல் எல்லை வழியாக வரும் ஏவுகணைகளைச் சுட்டுத் தள்ளுவோம் என ஏற்கனவே ஜப்பான் எச்சரித்துள்ள நிலையில், வடகொரியாவின் இந்த முயற்சியின் விளைவாக, விரைவில் ஏவப்படவுள்ள ரொக்கெட்டை ஜப்பான் சுட்டு வீழ்த்தினால், அதன் பாதிப்பும், பின்விளை வும் மிகமோசமாக இருக்கும் எனக் கரு தப்படுகிறது.
இந்த நிலையில், தென்கொரியாவின் கோரிக்கைக்கு இணங்க, ஐக்கிய நாடுகள்





சபைய
கூடுகி
எதிர்ப்
ஜப்பா

# சிகா வைரஸால் மூன்று பேர் சாவு

## *முதல் முறையாக கொலம்பியாவில்*

பொகோடா,பெப்.8
சிகா வைரஸால் முதல் முறையாக கொலம்பியாவில் மூன்று பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.
பிரேஸில் நாட்டில் கடந்த ஆண்டு தாக்கத் தொடங்கிய சிகா வைரஸ், இப்போது தென் அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த 23 நாடுகளில் வேகமாக பரவி வருகிறது.
தடுப்பூசியும், சிகிச்சையும் இல்லாத இந்த நோய், கர்ப்பிணிகளை முதல் 3 மாத கர்ப்ப காலத்தில் தாக்கினால், பிறக்கக்கூடிய குழந்தையின் தலை மிகவும் சிறிதாக இருக்கும். மூளையில் பாதிப்பு ஏற்படும். பிற பிறவிக் குறைபாடுகளுக்கும் வாய்ப்பு உண்டு.
இத்தகைய கொடிய சிகா வைரஸ், வேகமாக பரவி வருவது குறித்து, ஆலோசனை நடத்திய உலக சுகாதார அமைப்பு, உலகளாவிய சிகா வைரஸ் நெருக்கடி நிலையையும் பிரகடனம் செய்துள்ளது.
அதேபோல், சிகா வைரஸ் அதிக பாதிப்புக்குள்ளான நாடுகள் தங்களது நாட்டுக் குடிமக்களை கருத்தரிக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளது.
இந்த நிலையில், முதன் முறையாக சிகா வைரஸால் பாதிக்கப்பட்டிருந்த 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கொலம்பியாவின் தேசிய சுகாதார நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்துக்குள் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணும், நவம்பர் மாதம் ஒரு ஆணும் இறந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குயில்லன்- பார்ரே சிண்ட்ரோம் நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 100 பேருக்கு சிகா வைரஸ் தாக்கியருப்பது தெரியவந்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் கொலம்பியாவில் சிகா வைரஸ் தாக்கியவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 500 ஐத் தாண்டிவிட்டதாக சுகாதாரத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.
சிகா வைரஸால் பாதிப்புக்குள்ளான நாடுகள் கருத்தடை மற்றும் கருக்கலைப்புக்கு அனுமதி அளிக்க வேண்டும் என ஐ.நா. கோரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஐ)



கிறிஸ்மஸ் தீவுக்கு சுற்றுலா சென்ற சுற்றுலாப்பயணி ஒருவரின் கமராவில்
நிறையில் அந்த நண்டு இருந்தது. ஆஸ்திரேலியாவுக்கு உரித்ததான கிறி
அந்தத் தீவுக்கு சுற்றலா பயணிகளின் வருகை அதிகம். இராட்சத அளவி
எனப்படுகின்றன. தேங்காய் நண்டுகள் கிறிஸ்மஸ் தீவில் பாதுகாக்கப்பட்ட
கும். இதை மீறி செயற்படுபவர்களுக்கு 4 ஆயிரம் அமெரிக்க டொலர் குற்
60 தொடக்கம் 70 சென்ரி மீற்றர் வரை வளரும் என்பது குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை
# கொரியா





பையின் பாதுகாப்பு சபை அவசரமாக டுகிறது. வடகொரியா வின் திட்டத்துக்கு திர்ப்பு தெரிவித்துவரும் தென்கொரியா, ப்பான், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கும் இந்த ரகசியக் கூட்டத்தில் வட கொரி யாவுக்கு எதிராக முக்கிய முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-ரி4)



வில் இராட்சத தேங்காய் நண்டு பிடிபட்டது. 3 அடி அகலத்தில் கிட்டத்தட்ட 4 அரைக்கிலோ கிறிஸ்மஸ் தீவில், மில்லியன் கணக்கில் நண்டுகள் வசிக்கின்றன. இதன் காரணமாக வில் காணப்படும் இவை. தென்னை மரத்தில் ஏறி வசிப்பதால் தேங்காய் நண்டுகள் ட்ட உயிரினங்களாகும். அவற்றை வேட்டையாடுவதோ, உண்பதோ சட்டப்படி குற்றமா குற்றப்பணமாக அறவிடப்படும். பார்ப்பதற்கு பயங்கரமாகத் தோற்றமளிக்கும் இவை க்கது.

(ஐ-ரி4)



## நிலநடுக்கத்தில் 18 பேர் சாவு



***இடிபாடுகளுக்குள் மக்கள் தவிப்பு***

தைபேய்,பெப்.8

தைவான் நாட்டின் தென்பகுதியில் நேற்றுமுன் தினம் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.

பூகம்பம், நிலநடுக்கம், பெருவெள்ளம் போன்ற இயற்கை சீற்றத்தால் அடிக்கடி பாதிக்கப்படும் தைவானில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானதாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் அறிவித்திருந்தது.

தைவானின் இரண்டாவது பெரிய நகரமான காவோசியுங் நகரில் இருந்து சுமார் 39 கிலோ மீற்றர் தொலைவில் பூமியின் அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில், ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் விளைவாக டைனான் நகரில் 16 தளங்களைக் கொண்ட ஒரு அடுக்குமாடி குடியிருப்பு உட்பட நான்கு கட்டடங்கள் சரிந்து விழுந்தன. அந்த இடிபாடுகளில் சிக்கிய பத்து மாதக் குழந்தை உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர்.

அருகாமையில் உள்ள இன்னொரு ஏழு மாடி கட்டடத்தில் சிக்கியிருந்த 340 பேர் உயிருடன் மீட்கப்பட்டதாகவும், அவர்களில் காயமடைந்த சுமார் 500 பேர் வைத்தியசாலைகளுக்கு சேர்க்கப்பட்டதாகவும் பேரிடர் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். தொடர்ந்து அங்கே இடிபாடுகளை அகற்றும் பணியிலும், மக்களை மீட்கும் பணியிலும் சுமார் 2 ஆயிரம் பேர் ஈடுபட்டு வருவதாக கூறியிருந்தனர்.

இடிபாடுகளில் சிக்கி இதுவரை 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், நூற்றுக்கும் அதிகமானவர்கள் காணாமற்போனதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவர்கள் உயிருடனோ, இறந்த நிலையிலோ கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் எனக் கருதப்படும் நிலையில் அப்பகுதிக்கு கூடுதலாக மீட்புப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 1999 ஆம் ஆண்டு தைவானை தாக்கிய 7.6 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தால் சுமார் 2 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## நைஜீரியாவை அச்சுறுத்தும் லாசா காய்ச்சல் 101 பேர் சாவு

லாகோஸ், பெப்.8

நைஜீரியா நாட்டை அச்சுறுத்தி வரும் லாசா காய்ச்சலால் 101 பேர் உயிரிழந்திருப்பதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையில் இந்த நோயால் 175 பேர் பாதிக்கப்பட்டதாகவும், 101 பேர் உயிரிழந்ததாகவும் தேசிய நோய்த்தடுப்பு மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அபுஜா உள்ளிட்ட 19 மாநிலங்களில் இந்த நோய்ப் பாதிப்பு என சந்தேகப்படும் படியான நோயாளிகள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் உறுதி அளித்த போதிலும், தற்போது வெளியான தகவல் மீண்டும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் 12 பேரும், 2012 இல் 112 பேரும் இறந்துள்ளனர். அருகில் உள்ள பெனின் நாட்டில் லாசா காய்ச்சலால் 9 பேர் உயிரிழந்திருப்பதாகவும், 20 பேருக்கு இந்த நோய்த் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாவு விளைவிக்கும் இந்தக் கொடிய வைரஸ்களான மார்பார்க், எபோலா போன்று லாசா காய்ச்சலும் மிக மோசமான நோயாகும். 1969 ஆம் ஆண்டு நைஜீரியாவின் லாசா நகரில் இந்த வைரஸ்காய்ச்சல் அடையாளம் காணப்பட்டதால் அதற்கு லாசா காய்ச்சல் என்று பெயரிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஸ்கிருத பண்டிதர்
கி.சதாசிவசர்மா மட்டுவில்

# பிதிர் வழிபாட்டுக்குரியதான "மகிமை பெறும் மஹோதயம்"

எமது முன்னோர்களாகிய பிதிர்களின் புண்ணிய காலங்களான அமாவாசை மஹோதயம், அர்த்தோதயம் என்பன பிதிர் வழிபாட்டுக்கு சிறப்பானவை. இந்த வரிசையில் இந்த வருடம் வரும் தை அமாவாசைத் தினம் மஹோதய புண்ணிய காலமாகின்றது. இந்தக் காலங்களில் செய்யப்படும் விரதம், தர்ப்பணம் என்பன பிதிர் வழிபாட்டுக்கும், அவர்களின் ஆசி பெற்று சந்ததிகள் நன்னிலை பெறுவதற்கும் உகந்ததாகும்.

பிதிர் தேவோ பவ என்பது வேத வாக்கியம். அதாவது பிதிர்களைத் தெய்வமாக நினை;வழிபடு என்பதாகும். அந்த வகையில் இந்த வருடம் இன்றைய தினம் நிகழும் அமாவாசை தினம் சுமார் நூறு வருடங்களுக்கு மேல் ஒருமுறையே நிகழக்கூடிய மஹோதய புண்ணிய காலமாக அமைகின்றது. ஏனெனில் தை மாத அமாவாசைத் திதி உதயத்தின்போதே திருவோண நட்சத்திரத்துடனும், வியதீபாதம் எனும் யோகத்துடனும், திங்கட்கிழமையில் (சோம வாரம்) கூடி வருதலால் மஹோதயம் எனும் சிறப்புடன் புண்ணிய காலமாகக் கூடுகின்றது. மேலும் வாரம், நட்சத்திரம், யோகம் என்னும் இந்த மூன்றும் அமாவாசைத் திதியுடன் ஞாயிற்றுக்கிழமையில் சேரும்போது அர்த்தோதய புண்ணிய காலமாக அமைகின்றது. இந்த வகைச்சிறப்புடன் உத்தராயண புண்ணிய காலமான தை அல்லது மாசி மாதத்தில் அமாவாசையுடன் சேரும்போது இந்தப் புண்ணிய காலங்கள் ஏற்படுகின்றன என சோதிட நூல்கள் கூறுகின்றன.

பொதுவாகவே தை அமாவாசையும், ஆடி அமாவாசையும் விசேட பிதிர் விரத காலங்களாக மற்றைய மாதங்களிலும் பார்க்கச் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. உத்தராயணத்தில் வரும் முதல் மாதமான தை அமாவாசையும், தக்ஷணாயனத்தில் வரும் முதல் மாதமான ஆடி அமாவாசையும் இந்து மக்கள் எல்லோராலும் விரதமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தை அமாவாசை தினத்திலேயே அன்னை அருள் பெற்ற அபிராமிப்பட்டர், அன்னை பராசக்தியை வழிபட்டு அபிராமி அந்தாதி பாடி அம்பிகையின் அருள் பெற்றதாகப் புராணங்கள் வாயிலாக அறிகிறோம்.

இத்துணைப் பெருமை பெற்ற தை அமாவாசை தினம் இந்த வருடம் எமது வாழ்நாளிலேயே கிடைத்திராத, பெறமுடியாத புண்ணிய காலமாக அமைகின்றது. ஏனெனில் இந்த மஹோதயம் நூற்றிநாற்பத்தினான்கு வருடத்துக்கு ஒருமுறையே நிகழ்வதாக சோதிட நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வருடம் வரும் இந்தப் புண்ணிய காலம் சோதிட நூலில் குறிப்பிட்டபடி திங்கட்கிழமையன்று சூரியோதயத்திலேயே அமாவாசைத் திதியின் முற்பகுதியும் திருவோண நட்சத்திரத்தின் நடுப்பகுதியும் வியாதீபாத யோகத்தின் பிற்பகுதியும் சேர்ந்திருப்பது மிகவும் விசேடமாகிறது. திருக்கணிதம், வாக்கியம் ஆகிய இரு பஞ்சாங்கங்களிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இந்துக்களாகிய நாமெல்லோரும் இந்தக் காலத்தில் புண்ணிய தீர்த்தங்களான நதி ஆறு, கடல் இவற்றில் அதிகாலையில் நீராடி இறைவழிபாடு செய்வதும், பிதிர் தர்ப்பணங்கள் செய்வதும் பிதிர்களின் ஆசி பெற்று எம் சந்ததிகள் வாழ்வாங்கு வாழ்வதற்கு ஏதுவாகும்.



இந்தியாவில் இராமேஸ்வரம், வேதாரண்யம் போன்ற புண்ணியஸ்தலங்களிலும், எமது நாட்டில் கீரிமலை, வில்லூன்றி, திருக்கேதீஸ்வரம் பாலாவி, திருக்கோணேஸ்வரம் கோணேசதீர்த்தம் ஆகியவற்றில் நீராடி வழிபாடு செய்ய முடியும். அத்துடன் கீரிமலை, மாவிட்டபுரம் போன்ற புண்ணிய ஆலயங்களின் மூர்த்திகள்(சுவாமிகள்) எழுந்தருளச் செய்து அதிகாலையில் சுவாமி கடலில் தீர்த்தமாடுவதும் பொருத்தமானதே. இதனால் அந்தத் தீர்த்தம் மேலும் புனிதமடைந்து அங்கு நீராடும் எம்மையும் புனிதமாக்குகிறது. எனவே இந்தப் புண்ணிய காலத்தைத் தவறவிடாது கடலில் நீராடி பிதிர் சாபம் நீங்கிப் பிதிர் ஆசி பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக!!




## மகரம்

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் மகரம் ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். மகரம் ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

**கலைஞர்கள்**

கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும். எதிர்பார்த்த பெயர் புகழைப் பெறமுடியும். வரவேண்டிய பாக்கி பணத்தொகைகள் கிடைக்கப் பெற்று பொருளாதார நிலையானது உயரும். சக கலைஞர்களை அனுசரித்து நடந்துகொள்வதன் மூலம் போட்டி பொறாமைகள் குறையும். நடனம், இசைபோன்ற துறைகளில் உள்ளவர்களும் நல்ல முன்னேற்றத்தைப் பெறுவார்கள்.

**விவசாயிகள்**

பயிர் விளைச்சல் எதிர்பார்த்தபடி இருக்கும். பட்டபாட்டுக்கான முழுப்பலனையும் தடையின்றி அடைய முடியும். புதிய யுக்திகளையும் கையாண்டு அபிவிருத்தியைப் பெருக்குவீர்கள். புதிய பூமி, மனை போன்றவற்றையும் வாங்கக்கூடிய யோகம் உண்டாகும். பங்காளிகளிடம் விட்டுக்கொடுத்து நடப்பது நல்லது.

**பெண்கள்**

உடல் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வது நல்லது. உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடந்துகொண்டால் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கமுடியும். பணவரவுகள் ஆகஸ்ட் மாதம் முதல் சிறப்பாக அமையும். திருமண சுப காரியங்கள் கைகூடும். சிலருக்கு சிறப்பான புத்திர பாக்கியமும் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். பணிபுரிபவர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைக்கும்.

**மாணவ- மாணவியர்**

கல்வியில் சிறப்பான முன்னேற்றங்களை அடையமுடியும். உடன் பழகும் நண்பர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிக்கும். அரசு வழியில் எதிர்பார்க்கும் உதவிகள் கிட்டும். விளையாட்டுத் துறைகளில் பாராட்டுதல்களையும் பரிசுகளையும் தட்டிச்செல்வீர்கள். கல்விக்காக சுற்றுலா செல்லும் வாய்ப்புக்கள் கிடைக்கும்.

**மாதப்பலன் (ஜனவரி)**

ஜென்ம ராசிக்கு 10இல் செவ்வாயும், 11இல் சுக்கிரனும் சனியும் சஞ்சாரம் செய்வது அற்புதமான அமைப்பு என்றாலும் 12இல் சூரியன் சஞ்சரிப்பதால் வீண் அலைச்சல்கள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலை இருக்கும். அரசு வழியில் ஆதரவுகள் கிட்டும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்பாராத பயணங்களும் அதன் மூலம் சாதகமான பலன்களும் அமையும். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும் கொடுக்கல்- வாங்கலில் சற்று கவனத்துடன் நடந்துகொள்வது உத்தமம். சிவபெருமானை வழிபடவும்.

**பெப்ரவரி**

ஜீவன ஸ்தானத்தில் செவ்வாயும் லாப ஸ்தானத்தில் சனியும் சஞ்சாரம் செய்வதால் தொழில், வியாபாரத்தில் லாபம் பெருகும். எதிர்பாராத முன்னேற்றங்களும் உண்டாகும். கொடுக்கல்- வாங்கலில் சரளமான நிலை இருக்கும். [illegible] விலகி குடும்பத்தில் [illegible] நடைபெறும். கணவன்- மனைவி பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தர்களுக்கு பணியில் திருப்திகரமான நிலை உண்டாகும். எதிர்பார்க்கும் இடமாற்றங்கள் கிடைக்கும். பிரதோச கால விரதம் மேற்கொள்ளவும்.

**மார்ச்**

லாப ஸ்தானத்தில் சனியும் செவ்வாயும் சஞ்சாரம் செய்வதும் மாத பிற்பாதியில் சூரியன் 3இல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் சாதகமான அமைப்பாகும். இதனால் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் கிடைக்கும். குடும்பத்திலுள்ளவர்களிடம் விட்டுக் கொடுத்து நடப்பதாலும், பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதாலும் அனைவரின் ஆதரவைப் பெறமுடியும். பணவரவுகளும் ஓரளவுக்கு சிறப்பாகவே இருக்கும். கொடுக்கல்- வாங் கலில் கவனத்துடன் நடந்துகொண்டால் மட்டுமே லாபத் தினைப் பெற முடியும். வியாபாரத்தில் லாபகரமான நிலை நிலவும்.

**ஏப்ரல்**

லாப ஸ்தானத்தில் சனியும் செவ்வாயும் சஞ்சாரம் செய்வதும் மாத முற்பாதியில் சூரியன் 3இல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் சாதகமான அமைப்பாகும். 8இல் சஞ்சரிக்கும் குரு வக்ரகதியிலிருப்பதால் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். கடந்த கால பிரச்சினைகள் விலகி முன்னேற்றமும், எடுக்கும் முயற்சிகளில் வெற்றியும் கிட்டும். தொழில், வியாபாரத்திலிருந்த போட்டிகள் விலகும்.

தேவையற்ற பயணங்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் பெரிய கெடுதிகள் இல்லை. உடல் ஆரோக்கியத்தில் சற்றே அக்கறை எடுத்துக்கொள்வது நல்லது. கணவன்- மனைவி விட்டுக்கொடுத்து நடந்துகொண்டால் நிம்மதி ஏற்படும். விநாயகரை வழிபடுவது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி உயர்தொழிற்கல்விக்கான ஒரு திறவுகோல்

**ஜே.யூட் வோல்டன்**
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி.*

துரிதமாக மாறிவரும் நவீன விஞ்ஞான முன்னேற்றங்களும் அதனோடிணைந்த தொழில்நுட்ப வளர்ச்சியும் தரமான நவீன தொழில்நுட்ப திறன்கள் வாய்க்கப் பெற்றவர்களின் கேள்வியை உலக தொழிற்சந்தையில் மட்டுமல்லாது உள்ளூர் மட்டத்திலும் அதிகரிக்கச் செய்துள்ளன. இலங்கையில் தற்போதுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களால் மட்டும் இந்தமனித வலுவினை வழங்க முடியாது என்றே கூறலாம். ஏனெனில் அவற்றின் பயிற்சிக் கொள்ளளவு (Training Capacity)அதாவது பயிற்சிக்காக உள்ளீர்ப்பு செய்யக்கூடிய மாணவர் எண்ணிக்கை மற்றும் பயிற்சி வசதிகள் (ஆய்வுகூடம், வேலைத்தளம்) அவற்றுக்கான கேள்விகளை விடக் குறைவாக இருப்பது ஒருபுறம் இருக்க இவ்வாறான பயிற்சிகளை வேண்டி நிற்கும் மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதும் பிறிதொரு சவாலாக மாறிவிட்டது.

தற்பொழுது, ஓர் ஆண்டின் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு அனுமதியாகின்ற மாணவர் எண்ணிக்கை சராசரியாக 350,000ஆக இருக்கின்ற அதேவேளை அதே ஆண்டில் பல்கலைக்கழக ஆனுமதியைப் பெறுகின்ற மணவர் எண்ணிக்கை வெறும் 25,000ஆக மட்டுமே உள்ளது. இருந்தபோதும் அரச மற்றும் தனியார் தொழிற்கல்வி பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கக்கூடிய மாணவர் எண்ணிக்கை அண்ணளவாக 150,000 ஆக இருப்பதுடன் ஏறத்தாழ 25,000மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் அடங்கலான ஏனைய மூன்றாம் நிலை உயர்கல்வி நிலையங்களில் தமது கல்வியைத் தொடர்கின்றனர். இவ் நிலைமைகளை ஆராயும் போது கிட்டத்தட்ட 200,000 மாணவர்களுக்கு மூன்றாம் நிலை கல்விச் சந்தர்ப்பங்கள் கிட்டுகின்றபோதும், நாட்டின் சராசரி வருடமொன்றில் பாடசாலைகளினின்றும் விலகுகின்ற மற்றும் கற்றலில் இடைவிலகுகின்ற ஏறாத்தாழ 150,000 மாணவர்கள் தொழிற்றிறன்கள் அற்றவர்களாக தமது ஜீவனோபாயத்தை ஆரம்பிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் திறன்கள் அற்ற தொழிலாளர்களாக உள்ளதுடன் பாரம்பரிய விவசாயம், மீன்பிடி மற்றும் இன்னோரன்ன பிற தொழில்களைத் தமது வருவாய் தரும் மூலங்களாக மேற்கொள்கின்றார்கள். இருந்த போதும் இவர்களில் கணிசமான தொகையினர் வியாபாரம், குடிசைக்கைத் தொழில் போன்ற சுய தொழில் கருமங்களில் தங்களை ஈடுபடுத்த சந்தர்ப்பங்கள் உண்டு என்பதும் மறுப்பதற்கில்லை. இவற்றை உற்று நோக்கும்போது குறிப்பிடத்தக்க எண்ணிக்கையான மாணவர்களுக்கு தொழில்நுட்பக்கல்வியுடன் கூடிய உயர் கல்வியைப் பெற சந்தர்ப்பங்கள் இல்லை என்று கூறலாம். இளைஞர்களின் மத்தியில் 17சதவீதமாக வேலையற்றோர் வீதம் உள்ளது.

> **நாட்டின் சராசரி வேலையற்றோர் சதவீதம் ஏறத்தாழ 4வீதமாக இருக்கின்ற அதேவேளை, இது படித்த இதற்கு இளைஞர்கள் மத்தியில் அதிகமாக இருப்பதும் அவர்தம் கற்கை தொழிலுலகுக்கு ஏற்ற தரத்தை அல்லது பொருத்தப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பதை இலகுவில் அனுமானிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.**

நாட்டின் சராசரி வேலையற்றோர் சதவீதம் ஏறத்தாழ 4வீதமாக இருக்கின்ற அதேவேளை இது படித்த இளைஞர்கள் மத்தியில் அதிகமாக இருப்பதும், அவர்தம் கற்கை தொழிலுலகுக்கு ஏற்ற தரத்தை அல்லது பொருத்தப்பாட்டை கொண்டிருக்கவில்லை என்பதை இலகுவில் அனுமானிக்கக்கூடியதாகவும் இருக்கின்றது.

இவ்வாறு கல்வியில் சம வாய்ப்பை அல்லது சம சந்தர்ப்பங்கள் கிட்டாமை என்பதை இல்லாதொழிக்கும் வகையில் நாட்டில் தொழில்நுட்பவியல் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்கும் பிறிதொரு தனித்துவமான மூன்றாம்நிலை கல்விச் சாலைகளாக பல்கலைக்கழக கல்லூரிகள் (University Colleges) விளங்குகின்றன.

இப்புதிய பல்கலைக்கழகக் கல்லூரிகள், திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி (Ministry of skills development and vocational training) அமைச்சின் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகத்தினது (University of Vocational Technology) கிளை நிறுவனங்களாக நாடளாவிய ரீதியில் 25 பல்கலைக் கழககல்லூரிகள் அமைவாக்கம் பெறவுள்ளன. இவற்றில், 20அரச பல்கலைக்கழக கல்லூரிகளின் அமைவாக்கத்தில், முதற்கட்டமாக ஐந்து கல்லூரிகள் யாழ்ப்பாணம், குளியாப்பிட்டி, இரத்மலானை, மாத்தறை மற்றும் அநுராதபுரத்தில் அமைவாக்கம் பெற்றுள்ளதுடன் அவற்றின் செயற்பாடுகள் 2015ஆம் ஆண்டு தை மாதத்திலிருந்து அரம்பிக்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் 8 பாடப் பரப்புகளுக்கான தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ)5 இக்குரிய டிப்ளோமா மற்றும் மட்டம் 6இற்குரிய உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் ஆங்கில மொழி மூலம் போதிக்கப்படுவதுடன் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் போன்ற இணைப்பாட விதானங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. தேசிய தொழிற்தகைமை மட்டம் (NVQ)4 அல்லது க.பொ.த.உயர்தரத்தில் சித்தியுள்ள மாணவர்கள் தமது தகைமைக்கு பொருத்தமான துறையில் தம்மை இணைத்துக்கொள்ளலாம். இது உயர்தரத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் துறையில் (Technology Stream) சித்தியடையும் மாணவர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய துறைசார் மாணவர்களுக்குமான வரப்பிரசாதமாகும்.

இந்தக் கற்கை நெறிகளானது ஆரம்பத்தில் 6 மாத கால குறைநிரப்பு அடிப்படை பாடப்பரப்புக்களையும் (Bridging Course) பின்னர் முறையான தேசிய தொழில் தராதர சட்டகம் (National Vocational Qualification Framework-NVQF) என்பதற்கு அமைய ஓராண்டு உள்ளகப் பயிற்சியையும் (In-house Training) பின்னர் 6 மாத காலத்துக்குக் குறையாத வேலைத்தள களப்பயிற்சிகளையும் (On-the-Job Training-OJT) ஈற்றில் மேலும் ஓராண்டு உள்ளகப் பயிற்சியையும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பல்கலைக்கழகக் கல்லூரியானது உயர்தர விரிவுரையாளர் குழாத்தைக் கொண்டிருப்பதுடன் நவீன வசதிகள் கொண்ட விரிவுரை மண்டபங்கள் மற்றும் தற்கால தொழில்நுட்பத்தில் உருவான தொழிற்சாலை இயந்திரங்களையும் கருவிகளையும் கொண்ட தொழில்நுட்பக் கூடங்களையும் கொண்டிருப்பதுடன் மாணவர் தம் கற்றலுக்குத் துணைசெய்யும் வேலைத்தளம், நூல்நிலையம், ஆங்கிலமொழி மற்றும் கணினிக் கூடங்களையும் வணிக அபிவிருத்தி அலகொன்றையும்(Business Development unit) தன்னகத்தே கொண்டுள்ளது. இங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடானது ஆசிரியர் மையமாகவோ அல்லது மாணவர் மையமாகவோ இன்றித் தொழில் மையமாக (Job-oriented) அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். இது எதிர்கால வேலை உலகுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் நோக்கில் தொழில் தளத்துக்கு வேண்டிய திறன்களை மாணவர் கோட்பாடுகளுடன் இணைந்த செயற்பாடுகளினூடாக அடையவும் அதனூடாக உடனடித் தொழில் வாய்ப்பைப் பெறவும் அவர்களுக்கு ஓர் உந்துசக்தியாக அமையும்.


இந்தப் பல்கலைக்கழக கல்லூரியானது பிரதம நிறைவேற்று அதிகாரி (Cheif Executive Officer-CEO) ஒருவரால் நிர்வகிக்கப்படுவதுடன் பணிப்பாளர் சபை (Board of Directors) ஒன்றினாலும் வழிநடத்தப்படுகின்றது. அத்தோடு இவற்றின் ஆளுகை அதிகாரமானது வாழ்க்கைத் தொழில் சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்திடம் இருப்பதுடன் எதிர்காலத்தில் இவை அதனோடிணைந்து NVQ மட்டம் 7 இற்குரிய பட்டப் பாடநெறிகளை போதிக்கவும் அவற்றுக்கான பட்டச் சான்றிதழை வழங்கவும் காத்திருக்கின்றன.

எனவே தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத் தொழிற் கல்வி மற்றும் பயிற்சி(Technical and Vocational Education and Training-TVET) துறையில் இந்தப் பல்கலைக்கழக கல்லூரிகளின் பங்களிப்பு தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களின் மத்தியில் ஒரு மேலான அந்தஸ்தையும், உயர்வான சமூகப் பார்வையையும் (Social Image) பெறவுள்ளன.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏளனம் செய்யாதே!



"டேய் உனக்கு அறிவிருக்கா....? எத்தனை தடவை சொல்லித் தந்தாலும் உனக்குப் புரியமாட்டேன் என்கிறது. புத்திகெட்டவனே'" என தன் தம்பியின் தலையில் குட்டினான் செல்வன்.

பெரியவன் திட்டுவதையும் சின்னவன் பேசாமல் பரிதாபமாய் உட்கார்ந்திருப்பதையும் கண்டு கொண்டே வந்த அம்மா, செல்வன் தன் தம்பியின் தலையில் குட்டுவதையும்பார்க்கிறாள்.

"பாரம்மா எத்தனை தரம் இந்தப் பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறேன். இவனுக்குப் புரியமாட்டேன் என்கிறது கொஞ்சம் கூட அறிவில்லை" என்று உடனே தாயிடம் முறையிடுகிறான்.

சரவணனை அம்மா பார்க்கும்போது அவன் பேசாமல் இருக்கிறான். சரவணன் பாடப்படிப்பில் கொஞ்சம் பின்தங்கி விடுகிறவன். ஒரு தடவைக்கு இரு தடவைசொல்லிப் புரியவைக்கவேண்டும்.

செல்வன் கெட்டிகாரன். ஆனாலும் தன் தம்பியை முட்டாள் என்று ஏளனமாக நினைப்பதும் பேசுவதும் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை.

"உனக்கு ஒரு கதை சொல்லட்டுமா...?" என்று செல்வனைப் பார்த்தடி கூறத் தொடங்கினார் அம்மா.

"ஓர் ஊரில் நடைபெறும் நிகழ்சியை முன்னிட்டு அதைத் தொடங்கி வைக்க மந்திரியை அழைத்திருந்தார்கள். மந்திரியும் நிகழ்ச்சிக்குப் போகும்போது ஓரிடத்தில்கார் பழுதாகி நின்று விடுகிறது.

சாரதி கீழிறங்கிப் பார்த்து கார் பழுதாகிவிட்டது, கொஞ்சநேரத்தில் சரிசெய்து விடுகிறேன்" என்றார். கார் பழுது பார்க்கும்வரை களைப்பாறலாம் என்றெண்ணி தூரத்தில் தெரிந்த குடிசையைநோக்கிச் செல்கிறார் மந்திரி. அங்கே குயவனொருவன் சக்கரத்தைச் சுற்றிக் கொண்டே மண்ணைப் பிசைந்து கலயம் செய்து கொண்டிருப்பதைக் கண்டார். மந்திரிக்கு ஆச்சரியமாயிருந்தது. சக்கரம் சுற்றச் சுற்ற அதற்கு ஈடாக மண்ணைப் பிசைந்து உருளையில் இட.. கொஞ்ச நேரத்தில் அது கலயமாக உருவாகிக் கொண்டிருந்தது.

அதை அழகான வடிவமைப்பில் குடமாக உருமாற்றிக்கொண்டிருந்தான் குயவன். மந்திரிக்கும் கலயம் ஒன்று செய்ய வேண்டுமென்ற ஆசை வந்தது. "எப்படிச் செய்வது" என்று குயவனிடம் கேட்டபடி அவரும் செய்ய முயன்றார். அவரால் முடியவில்லை.

சக்கரத்தைச் சுற்றவும் மண்ணைப் பிசைந்து கணக்காய் உருளையில் போடவும் தெரியாததால் மண், மண்ணாகவே சுற்றிச் சுற்றி வந்தது. பானையாக வடிவம் பெறவில்லை. குயவன் சிரிக்கிறான்.

மந்திரிக்கு ஆச்சரியம். நாட்டு விவகாரங்களில் எத்தனை திறமையாக செயற்படும் தனக்கு ஒரு பானை செய்யத் தெரியவில்லையே என்று நினைக்கிறார்.

மந்திரி குயவனைப் பாராட்டி விட்டுச் செல்கிறார். மந்திரிக்கு இருக்கும் படிப்பும் அறிவும் குயவனுக்கு இல்லை. குயவனுக்கு இருக்கும் திறமை மந்திரிக்கு இல்லை. ஆனாலும் இருவரும் அவர்களது தொழிலில் திறமை சாலிகளே.

"நீ படிப்பில் கெட்டிக்காரன்தான். ஆனாலும் சரவணன் விளையாட்டுத்துறையில் திறமைசாலியாய் இருக்கிறானே. ஓட்டப்பந்தயங்களில் முதலாவதாக வந்து எத்தனை பரிசுகள் வாங்கி வந்திருக்கிறான் பார்த்தாயா.. அவன் வேகத்துக்கு உன்னால் ஓட முடியாது என்பதனால் அவன் உன்னை மட்டம் தட்டிப்பேசுகிறானா.. ஏளனம் செய்கிறானா... இல்லையே. தான் ஓடு வதைப் பற்றியும் விளையாட்டைப் பற்றியும் உன்னிடம் எத்தனை பொறுமையாகக் கூறுகிறான். நீ அவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும்போது மட்டும் ஏளனம் செய்கிறாயே... இது நல்லதல்ல அவன் உன் தம்பி பொறுமையாக சொல்லிக்கொடு" என்று அறிவுரை கூறுகிறார் அம்மா.

செல்வன் அம்மா சொன்னதை நினைத்துப் பார்க்கிறான். தன் தவறை உணர்ந்து தன்தம்பியை அணைத்துக்கொள்கிறான். அதற்குப் பிறகுதன் தம்பிக்குப் புரியாத பாடங்களை அன்போடும் பொறுமையோடும் சொல்லிக்கொடுக்கிறான். இதைப் பார்த்த அம்மா சந்தோஷப்படுகிறார்.

## விடுகதைகளும் விடைகளும்

1.உயிரில்லாதவன் தினமும் ஓயாமல் ஓடுகிறான் - அவன் யார்?
– கடிகாரம்

2.கடலில் பிறந்தவன், அவன் இல்லாத வீடே இல்லை - அவன் யார்?
- உப்பு

3. மண்மீது குடையாவான், மழைக்கு துணையாவான் - அவன் யார்?
- மரம்

4. தேவைப்படும்போது பையை நிரப்பலாம், ஆனால் தேவைக்கு மேலே பையை நிரப்ப முடியாது - அது என்ன?
- வயிறு

5.இரவிலே எழும் தீபம், பகலில் பார்க்க முடியாது - அது என்ன?
- நிலவு

## வெண்ணிலா



வட்ட வடிவ வெண்ணிலா!
வானில் வரும் அது உலா!
கண்ணில் நிறைந்த வெண்ணிலா
கதைகள் சொல்லும் கனிநிலா!

உயர உயரச் செல்லுமே!
உடன் செல்லும் உள்ளமே!
ஏக்கம் நெஞ்சில் எழுந்ததே!
எட்டிப் பிடிக்க ஆவலே!

நிலவைப் பிடிக்க முடியுமா?
நெஞ்சம் மகிழ்ச்சி கொள்ளுமா?
ஏங்கித் தவித்தான் மனிதனே!
எடுத்தான் அவனும் முயற்சியே

மண்ணில் நடந்த மனிதன்
விண்ணில் நடந்து சென்றான்!
வானில் தவழ்ந்த நிலவில்
வாழ்ந்து பார்த்து மகிழ்ந்தான்!

நிலவுக்குச் செல்லும் வாகனம்!
விரைவில் வருமே சத்தியம்!
கட்டணம் செலுத்திச் செல்லலாம்!
கட்டணம் செலுத்திச் செல்லலாம்!
களிப்பாய் நிலவில் சுற்றலாம்!

## வரலாற்றில் இன்றைய தினம்

1238 - ரஷ்யாவின் விளாமிடிர் நகர் மொங்கோலியரால் எரியூட்டப்பட்டது.

1587 - தமது ஒன்றுவிட்ட சகோதரியான முதலாம் எலிசபத் மகாராணியை கொல்லச் சதி செய்ததாகச் சந்தேகப்பட்டு ஸ்கொட்லாந்து அரசி மேரிக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1837 - றிச்சார்ட் ஜோன்சன் அமெரிக்காவின் முதல் உதவி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1865 - அமெரிக்காவின் டெலவெயர் வாக்காளர்கள் அடிமைத் தனத்தை நீக்கும் 13 ஆவது அரசமைப்பு சீர் திருத்தத்துக்கு எதிராக வாக்களித்தனர்.

1879 - ஹாரிஸ் பிரபு தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி சிட்னியில் போட்டியொன்றின்போது தாக்கப்பட்டது.

1922 - அமெரிக்க ஜனாதிபதி வோறன்ஜியினால் வெள்ளை மாளிகையில் முதலாவது வானொலிப்பெட்டி அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

1924 - அமெரிக்காவின் நெவாடாவில் விஷவாயு அறைச்சாவுத் தண்டனை இடம்பெற்றது.

1942 - இரண்டாம் உலக மகாயுத்தம்; சிங்கப்பூரினுள் ஜப்பான் படை புகுந்தது.

1948 - கொரியன் மக்கள் படை உருவாக்கப்பட்டமை தொடர்பாக வடகொரியாவில் அறிவிக்கப்பட்டது.

1949 - தேசத் துரோக குற்றச்சாட்டில் கர்டினால் மைண்ட்ஷென்ரிக்கு ஹங்கேரி தண்டனை வழங்கியது.

1950 - கிழக்கு ஜேர்மனியின் இரகசியப் பொலிஸ் பிரிவு ஸ்ரஸி ஸ்தாபிக்கப்பட்டது.

1952 - இரண்டாம் எலிசபெத் இங்கிலாந்தின் அரசியாக அதிகார பூர்வமாக அறிவிக்கபட்டார்.

1955 - பாகிஸ்தான் சிந்து மாகாண அரசு 'ஜஹிர்காரி' முறைமையை இரத்துச் செய்து ஒரு மில்லியன் ஏக்கர் காணியைக் கையகப்படுத்தி நிலமற்றோருக்கு வழங்கியது.

1963- ஈராக் பிரதமர் பிரிகேடியர் அப்ட் அல்கரீம் குவாஸிம் இனது ஆட்சி பீடம் தூக்கியெறியப்பட்டது.

1995 - பொ.ஐ. முன்னணி அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

1992 - 8ஆயிரம் தமிழர்களைக் கொன்றதாகக் குற்றம் சாட்டி உலக நீதிமன்றில் இந்தியாவுக்கு எதிராக வழக்குத்தொடர புலிகள் ஏற்பாடு.

1992 - பாரிஸ் மாநாட்டில் இலங்கைக்கு கேட்டதை விட அதிகளவு நிதி கிடைத்தது. மேலும் போரை முடிவுக்குக் கொண்டுவரவும் வற்புறுத்தப்பட்டது.



## வர்ணம் தீட்டுவோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி.விஜயகிருஷ்ணா

எமது வாழ்க்கையில் அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகின்றது என்று எமக்குத் தெரிவதில்லை. இன்று ஒரு மாதிரி நாளை ஒரு மாதிரி. ஏன் அடுத்த நிமிடமே ஒரு மாதிரி. வெளியிருந்து வரும் காரணிகள் தவிர எமது மூளையே எம்மைச் சில சமயங்களில் ஏமாற்றி விடுவதும் உண்டு. சரியாகச் செய்துவிட வேண்டும் என்று ஒரு விடயத்தைச் செய்யும் போது எம்மை அறியாமலேயே பிழை ஏற்பட்டு எமது மதிப்புக்கு பங்கம் வந்துவிடுகின்றது. பேசுகின்ற போது கூட ஒன்றை நினைத்து ஒன் றைப் பேசும் நிலமைகூட ஏற்படுவது உண்டு. இங்கு எமது மூளை எம்மை ஏமாற்றி விடுகின்றது. பிறர் சுட்டிக்காட்டும் போது கூனிக்குறுகி நின்று விடுகின்றோம். இதைச் சந்திக்காத மனிதர்கள் எவருமில்லை என்று சொல்லிவிடலாம். சில சமயங்களில், சில விடயங்களில் வீட்டு வேலைக்காரி கூட அறிவாளியாய்த் தொழிற்படுவாள். என்னால் முடியும். என்னால்தான் முடியும் என்று யாரும் கர்வம் கொள்ளல் மடத்தனம். உனக்குள்ளும் மடமை ஒழிந்திருக்கிறது என்று ஒரு சமயம் உணர்ந்து கொள்வாய். அது எப்படி, எங்கிருந்து, எந்த வகையில் வெளிப்படும் என்று யாருக்கும் புரியாது. நாம் என்று நாம் நினைப்பது கூட எமக்குச் சொந்தமில்லை என்பதே உண்மை. வெளிக்காரணிகளை, எமது என்று கையாளும் போது கூட நாம் தவறிவிடுகின்றோமே. சிலவற்றில் தவறு ஏற்படும் போது திருத்த முடியாது பிறர் உதவிகளை நாடுகின்றோம். எல்லாம் தெரிந்த மனிதன் என்று உலகில் யாருமில்லை. தெரிந்ததுகூட தெளிவுறும் போது அவன் உலகில் இருப்பதில்லை. இன்று எமக்கே சொந்தமானது. நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாய் இருக்கின்றது. உதாரணமாகக் குடியிருக்கும் வீடு. சொந்தப்பெயர் ஆகியவற்றைக் கூட சில சந்தர்ப்பங்களில் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. உனக்கென்று எதுவுண்டு மானிடனே?

> எமது மூளை எம்மை ஏமாற்றி விடுகின்றது. பிறர் சுட்டிக்காட்டும் போது கூனிக்குறுகி நின்று விடுகின்றோம். சந்திக்காத மனிதர்கள் எவருமில்லை என்று சொல்லிவிடலாம்.

இதை உணர்ந் தும் ஆசையில் உழன்று மாய்கின்றாயே!

நான் என்று சொல்வது உடலா? அதற்கு மேலே என்று விக்கிரமன் பாணியில் சொல்லும் உயிரா? அதற்குமேலே இரண்டும் கலந்த உணர்வா? அந்த நானே என்னைப் புரிந்து கொள்ள முடியாதபோது நான் எனக்குச் சொந்தமாவதில்லையே! காலம் காலமாய் அளவாய், அவதானமாய், கண்ணும் கருத்துமாய் உடல் உறுப்புக்களுக்குப் பங்கம் வராத வகையில் பார்த்துப் பார்த்து எமது உடலுறுப்புக்களுக்கு உணவு பரிமாறுகின்றோம் அல்லவா! எங்கிருந்தோ வரும் நோய் எம்மை ஏமாற்றிவிடுகின்றதே! அவதானமாய்த் தானே இருந்தேன்? எப்படி இந்தநோய் வந்தது என்று திகைத்து நிற்கின்றோம் அல்லவா? காரணம்.... கேள்விக்குறி. நினைக்காத ஏதோ வாழ்க் கையில் நடந்து வாழ்க்கையையே திசை திருப்பி விடுகின்றது. எம்மை அறியாமல் எமக்குள்ளே ஏற்படுகின்ற கோபம் யாருக்குச் சொந்தமானது எமக்குத்தானே. அதை நாம் விரும்பி ஏற்றோமா? துணிவென்று பாடம் சொல்லும் நாமே இறப்பை எண்ணித் துவண்டு விடுகின்றோமே. எமக்குள் ஏற்படும் இந்த உணர்வு துணிவென்று நிமிர்ந்து நிற்கும் எம்மை ஏமாற்றி விடுகின்றதே. காலம் கற்றுத் தரும் பாடம் கல்லூரிப் பாடத்தை விட சாலச்சிறந்தது. வாழ்க்கை கற்றுத் தரும் பாடத்தின் போதுதான் முன்னோர் எழுதிவைத்த அநுபவக்குறிப்புக்கள் மனிதனின் மனதில் உறைக்கின்றது. இதனால் தான் முதியோர் கூறும் மூதுரை எமக்குத் தேவை. முற்று முழுதாக வாழ்வே புரியாத புதிர் தான்.

# பாடசாலைகளுக்குப் படிப்பினை

பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்டு ஓடிய மாணவி மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் பாட சாலைகள் மட்டத்தில் கவலையைத் தோற்றுவித்துள்ளது. காய்ச்சலாலும் சளியினாலும் பீடிக்கப்பட்டிருந்த அந்த மாணவி விளையாட்டு நிகழ்வில் பங்குகொண்டதனால் காய்ச்சல் தொற்று அதிகரித்து இதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

அவர் பாடசாலையில் மயங்கிய நிலையில் மந்திகை வைத்திய சாலையில் சேர்க்கப்படும்போது தொற்று அதிகரித்த நிலையிலிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்ட போதும் அது பயனளிக்கவில்லை. உயிரிழந்துவிட்டார்.

இதுபோன்று விளையாட்டு நிகழ்வுகளின்போது உடலில் தாக்கம் ஏற்பட்டு அல்லது ஏற்கனவே இருந்த தாக்கம் அதிகரித்து உயிரிழக்கும் சம்பவங்கள் நாடளாவிய ரீதியில் முன்னரும் இடம்பெற்றுள்ளன. அதனால் 5 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். அந்த உயிரிழப்புக்கள் இனிமேல் ஏற்படக்கூடாது என்பதற்காகவே விளையாட்டு நிகழ்வுகளில் பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் பங்கு பற்றுவதற்கு முன்னரான மருத்துவ அறிக்கைகள் பெறவேண்டும் என்றும் விளையாட்டில் ஈடுபடுவதற்கு முன்னரான மருத்து பரிசோதனை அறிக்கை பெறவேண்டும் என்ற கட்டுப்பாடும் அமுல்படுத்தப்பட்டது.

ஆனால் அந்தக் கட்டுப்பாடு வடக்கில் அதிகளவான பாடசாலைகளில் பின்பற்றப்படவில்லை என்பதே உண்மை. மாணவர் நலனில் அக்கறை கொண்ட பாடசாலைகள் மட்டும் அந்த மருத்துவ அறிக்கைகளைப் பெறுவதில் அக்கறை கொண்டிருந்தன. அதற்கேற்ப அவர்கள் வைத்தியசாலைகளிலும் மருத்துவர்களுடன் தொடர்புகொண்டு உரிய முறையில் செயற்பட்டனர். கடந்த வருடம் ஒக்ரோபர் நவம்பர் மாதங்களில் இது பற்றிய அறிவிப்பு சகல பாடசாலைகளுக்கும் வலயக் கல்வித் திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அதிகமான பாடசாலைகள் அதனைப் பின்பற்றவில்லை. சில அறிவித்தல்கள் பாடசாலை நிர்வாகங்களால் எப்படிக் கணக்கில் எடுக்கப்படாது விடப்படுகின்றனவோ அப்படியானவற்றில் ஒன்றாகவே இந்த அறிக்கையும் தவறவிடப்பட்டிருக்கலாம்.

ஆனால் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போது தான், சம்பந்தப்பட்டவர்கள் விழித்துக் கொள்கின்றனர். குறித்த மருத்துவ பரிசோதனைகள் செய்வது தொடர்பில் சுகாதாரத் திணைக்களமும் இயன்ற பணிகளை முன்னெடுத்திருந்தது. சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் உள்ள குற்றச்சாட்டு என்னவென்றால் மருத்துவ அறிக்கைகள் பெறவேண்டும் என்ற அறிவித்தலைப் பாடசாலை நிர்வாகங்கள் உரிய முறையில் செயற்படுத்தத் தவறிவிட்டனர் என்பதே. பல பாடசாலைகளின் நிர்வாகங்களும் அவ்வாறு கவனவீனமாகவோ அல்லது அக்கறையற்றோ இருந்துள்ளன என்பதே உண்மை.

இங்கு அதற்குரிய மருத்துவ அறிக்கைகளைப் பெறுவதில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது என்பது ஒரு விடயமாக இருந்தாலும், அநேக வைத்தியசாலைகளில் இதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் விளையாட்டுப் போட்டிகள் நெருங்கி வரும் நிலையில்தான் அநேகமான பாடசாலைகள் மருத்துவர்களுடன் தொடர்புகொண்டுள்ளன என்பது உண்மை. சில பாடசாலைகள் இன்று வரை மருத்துவ அறிக்கைக்கு என்று சென்றதாகக்கூட தகவலில்லை. இதிலிருந்து மாகாணத் திணைக்கள அறிவித்தல்கள் எந்தளவு நிலையிலுள்ளது என்பது புரிகின்றது.

தவிரவும் குறித்த மாணவி ஏற்கனவே காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்துள்ளார் என்பதும் சளியுடன் உள்ளார் என்பதும் வெளித்தோற்றத்தைக் கொண்டு அவருடன் கதைப்பதனைக் கொண்டே உணர்ந்து கொள்ள முடியும். அப்படியிருந் தும் எதற்காக அந்த மாணவி விளையாட்டில் ஈடுபடுத்தப்பட்டார் என்பது விசாரிக்கப்பட வேண்டியதே. அந்த மாணவி முன்னர் அணி நடைப் பயிற்சியிலும் ஈடுபட்டிருந்தார் என்று கூறப்படுகிறது. அதன் பின்னரே அவர் ஓட்டப்போட்டியில் கலந்து கொண்டிருந்தார் என்றும் அதன் இறுதியிலேயே அவர் மயங்கிச் சரிந்தார் என்றும் கூறப்படுகிறது. இந்த இழப்பைத் தவிர்த்திருக்க முடியும். அவர் முன்னரே நோய்வாய்ப்பட்டவர் என்றால் அவர் அந்தப் போட்டியில் பங்குபற்றுவதனைத் தவிர்த்திருக்கலாம். மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டிருந்தால் மருத்துவ அறிக்கை பெறப்பட்டிந்தால் அந்த மாணவி பற்றிய விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் ஏற்கனவே நோய் வாய்ப்பட்டவராக இருந்தும்கூட பாடசாலையில் விளையாட்டுப் போட்டியில் பங்கு கொண்டதனால் தொற்று அதிகரித்து அநியாயமாக ஒரு உயிர் இழக்கப்பட்டுள்ளது என்பது வேதனையானதே. இன்னொரு வகையில் அவர் பங்குபற்றியிருக்கா விட்டால் பல காலம் வாழ்ந்திருக்கவும் கூடும்.




எனவே அந்தச் சம்பவத்தால் அந்த மாணவி சொல்லிவிட்டுப் போகும் செய்தி என்ன என்பதனை ஒவ்வொரு நிர்வாகங்களும் உணர்ந்து கொண்டிருக்கும். உணர்ந்து கொள்ள வேண்டும். இது தனியே பாடசாலை நிர்வாகங்கள் மாத்திரமல்ல தனிப் [illegible] விளையாட்டு அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட பலருக்கும் அனுபவத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது என்பதனை உணர்ந்து செயற்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்கிரி ராஜா படப்பிடிப்பு முடிவில்



"தமிழுக்கு எண் 1ஐ அழுத்தவும்" படத்தை இயக்கிய ராம்பிரகாஷ் ராயப்பா இயக்கி வரும் புதிய படம் "போக்கிரி ராஜா". ஜீவா, சிபி சத்யராஜ், ஹன்சிகா ஆகியோர் நடிக்கும் இந்தப் படத்தின் படப்பிடிப்பு வேலைகள் முடிவடைந்து தற்போது போஸ்ட் புரடெக்ஷன் பணிகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. டி.இமான் இசையமைப்பில் உருவாகியிருக்கும் "போக்கிரி ராஜா"வின் பாடல்களை அடுத்த வாரத்தில் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், இப்படம் எதிர்வரும் 26ஆம் திகதி உலகமெங்கும் வெளியாகவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பிடிஎஸ் பிலிம்ஸ் இன்டர்நஷனல் தயாரித்திருக்கும் இப்படத்தின் தமிழக வெளியீட்டு உரிமையை "காஸ்மோ வில்லேஜ் ரிலீஸ்" நிறுவனம் கைப்பற்றியுள்ளது.



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 4 | | | | 6 | | |
| 2 | 8 | | | | 6 | | 7 | |
| | | | | 1 | | 2 | | 4 |
| 5 | | | 3 | | 9 | | | |
| 8 | | 7 | | | | 3 | | 5 |
| | | | 8 | | 5 | | | 6 |
| 4 | | 8 | | 2 | | | | |
| | 5 | | 9 | | | | 6 | 3 |
| | | 9 | | | | 1 | 8 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 | 1 | 2 |
| 7 | 2 | 3 | 6 | 5 | 1 | 8 | 9 | 4 |
| 1 | 8 | 4 | 2 | 3 | 9 | 7 | 6 | 5 |
| 4 | 9 | 5 | 3 | 6 | 8 | 1 | 2 | 7 |
| 2 | 1 | 8 | 9 | 7 | 5 | 4 | 3 | 6 |
| 3 | 6 | 7 | 4 | 1 | 2 | 9 | 5 | 8 |
| 5 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 | 4 | 1 |
| 8 | 4 | 2 | 1 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 6 | 7 | 1 | 5 | 4 | 3 | 2 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இன்றைய காதலர்கள் எப்படி இருக்கிறார்கள்?

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாதபோது சேர்ந்து இருக்கிறார்கள்...

ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட பின்பு பிரிந்து விடுகிறார்கள்!




பாசம் என்றது நாம் யாருகிட்ட எதிர்பார்க்கிறமோ அவங்க கிட்ட இருந்து கண்டிப்பாக கிடைக்காது!!!



ஆனா யாருகிட்ட இருந்து அது கிடைக்குதோ, அவங்க கிட்ட இருந்த நாம் அதை எதிர்பாத்திருக்கவே மாட்டோம்!!!

இரண்டே எழுத்தில் எனக்கு தெரிந்த ஒரு கவிதை



"சோறு"

நமக்கு சோறு தான் முக்கியம்

படித்ததில் பிடித்தது

காட்டில் ஒரு சிங்கம்
ஒரு ஆட்டை அழைத்தது.
"என் வாய் நாறுகிறதா என்று
பார்த்துச்சொல்," என்று
கேட்டது.
ஆடு முகர்ந்து பார்த்துவிட்டு, "ஆமாம், நாறுகிறது." என்று சொல்லிற்று.
உடனே சிங்கம், "முட்டாளே, உனக்கு எவ்வளவு திமிர்," என்று கூறி அதன் மீது பாய்ந்து குதறியது.
அடுத்து சிங்கம் ஒரு ஓநாயை அழைத்து.
அதனுடைய கருத்தைக் கேட்டது.
ஓநாய்முகர்ந்து பார்த்துவிட்டு,
"கொஞ்சம் கூட நாறவில்லை," என்றது.
சிங்கம், "மூடனே, பொய்யா சொல்கிறாய்?" என்று கூறி அடித்துக் கொன்றது. பின்னர் ஒரு நரியை அழைத்து அதே கேள்வியைக் கேட்டது.
நரி சொன்னது,
"நாலு நாளா கடுமையான ஜலதோசம். அதனால் எனக்கு ஒரு வாசனையும் தெரியவில்லை." சிங்கம் நரியை விட்டுவிட்டது.
பொய்யான சிங்கத்திடம் உண்மையை சொல்லாமல், பொய் சொன்ன நரி தப்பித்துக் கொண்டது
புத்திசாலிகள் ஆபத்துக் காலத்தில் வாயைத் திறக்க மாட்டார்கள்.

**கவிஞன் ராக்கி™**

தாய் தந்தையின் அருமை
நாம் வளரும் போது
தெரியாது.
நம் பிள்ளையை
வளர்க்கும் போது தான்
தெரியும்....

**ரோஷனா**

யாரையும் முந்த வேண்டும் என்று எண்ணாதே... பொறுமை கொள்... அந்த பொறுமை [illegible]
உயரத்தை உனக்கு பரிசாய் கொடுக்கும்....

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** மதிநுட்பமுடன் பேசி வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும். இலாபம் உயரும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவார்கள்.

**இடபம்:** முக்கியமான பணியை, அடுத்தவரிடம் ஒப்படைக்கக்கூடாது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**மிதுனம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழிலில் மிதமான வருமானம் கிடைக்கும். தாயின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை அளிக்கும். உறவினர்களால் உதவி கிடைக்கும்.

**கடகம்:** நற்செயலுக்கான நன்மை தேடி வரும். தொழிலில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். வருமானம் உயரும். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்க அனுகூலம் ஏற்படும்.

**சிங்கம்:** அரசு சார்ந்த உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழிலில் விற்பனை அதிகரிக்க, புதிய மாற்றம் செய்வீர்கள். கூடுதல் இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணி புரிந்து பாராட்டு பெறுவர்.

**கன்னி:** நண்பருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் குளறுபடியைச் சந்திக்கலாம். இலாபம் சுமார். பெண்களுக்கு குடும்பத் தேவைக்கான செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் குணத்துடன் நடந்து கொள்வர்.

**துலாம்:** சூழ்நிலை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரம் தாமத கதியில் இயங்கும். பணி விடயத்தில் பாதுகாப்பு அவசியம். சீரான ஓய்வு உடல் நலம் பெற உதவும்.

**விருச்சிகம்:** தியாக மனதுடன் செயற்படுவீர்கள். தொழில் வளர்ச்சியால், தாராள பணவசதி கிடைக்கும். ஆரோக்கியம் பலம் பெறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.


**தனுசு:** சிலரது அதிருப்திக்கு ஆளாகலாம் கவனம். கூடுதல் உழைப்பால், தொழிலில் வளர்ச்சி பெறும். பெண்களுக்கு குடும்பச் செலவு அதிகரிக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

**மகரம்:** திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ள, உறவினர்களின் அழைப்பு வரும்.

**கும்பம்:** பணியை அவசரகதியில் நிறைவேற்றும் சூழல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் சிக்கனத்தைக் கடைபிடிப்பர். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**மீனம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஏற்படும். தொழில், வியாபார வளர்ச்சியால், வருமானம் உயரும். நிலுவைப் பணம் கிடைக்கும் பெண்களுக்கு நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழைப்பழ பாயாசம்

**தேவையான பொருள்கள்:**

அரிசி : 100 கிராம்
சீனி : 200 கிராம்
தேங்காய் : பாதி
ஏலக்காய் : 5
முந்திரி : சிறிதளவு
மஞ்சள் வாழைப்பழம் : 2 (மிக சிறிய துண்டாக நறுக்கியது)

செய்முறை:
அரிசியை நன்றாகச் சுத்தம் செய்து ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். ஊறிய அரிசியையும் தேங்காயையும் பசுந்தாக அரைத்துக் கொள்ளவும்.
அரைத்த அரிசி, தேங்காய் கலவை அடுப்பில் வைத்து கிளற வும். சுவாலையை மிக சிறியதாக எரிய விடவும். மா பிரியாமல் சேர்த்து கொதித்து அரிசி கலவை நன்றாக வேக வேண்டும். எல்லாம் சேர்ந்து கொதித்த பின் வாழைப்பழத்தை போட்டு 2 நிமிடம் கிளறி இறக்கவும். நெய் யில் வறுத்த முந்திரியையும், ஏலக்காய் தூளையும் போட்டு கிளறி இறக்கவும்



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 20 | 60 | 30 | 30 |
| கத்தரி | 120 | 120 | 80 | 120 | 80 | 120 | 120 | 50 |
| கரட் | 250 | 180 | 320 | 180 | 220 | 200 | 150 | 300 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 35 |
| பயிற்றை | 160 | 90 | 140 | 100 | 200 | 120 | 150 | 150 |
| பாகல் | 100 | 100 | 80 | 100 | 100 | 160 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 60 | 80 | 60 | 60 | 120 | 55 | 50 |
| பெ.வெங்காயம் | 70 | 60 | 80 | 70 | 70 | 80 | 50 | 60 |
| சி.வெங்காயம் | 70 | 120 | 80 | 120 | 70 | 120 | 65 | 70 |
| பூசணி | 50 | 50 | 100 | 60 | 80 | 80 | 60 | 80 |
| தக்காளி | 50 | 70 | 60 | 60 | 60 | 100 | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 40 | 40 |
| கீரை | 30 | 20 | 40 | 10 | 30 | 40 | 10 | 35 |
| பொன்னாங்காணி | 40 | – | 30 | 40 | 20 | 20 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 250 | 300 | 250 | 220 | 300 | 220 | 250 |
| புடோல் | 70 | 90 | 60 | 70 | 70 | 120 | 40 | 60 |
| கோவா | 80 | 100 | 80 | 100 | 80 | 120 | 80 | 80 |
| வெண்டி | 150 | 120 | 160 | 80 | 140 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 100 | 90 | 120 | 100 | 120 | 140 | 60 | 120 |
| லீக்ஸ் | 80 | 150 | 120 | 100 | 80 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40-50 | 40 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 80 | 60 | 70 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 60 | 60 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 240 | 280 | 220 | 200 | 180 | 300 |
| இராசவள்ளி | 150 | 120 | 180 | 120 | 160 | 150 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 800 | – | 800 | 1000 | 500 | 800 | 400 | 550 |





## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 650 | 650 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 500 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 500 | 500 | 500 | 600 | 500 | 600 | 450 |
| சுறா | 550 | 600 | 600 | 750 | 650 | 650 | – |
| சீலா | 300 | 400 | 400 | 500 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 400 | 400 | 400 | 450 | 400 | 450 |
| முரல் | 250 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 400 | 350 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | – | 250 | 400 | – | 400 |
| திரளி | 250 | 300 | 200 | 200 | 300 | 300 | 350 |
| நகரை | 200 | 300 | – | 300 | 300 | 300 | 350 |
| சூடை | 70 | 200 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 200 | 300 | 150 | 250 | 300 | 300 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 250 | 200 | – |
| மதனம் | 150 | 250 | 180 | 300 | 250 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 500 | 300 | – |
| வாளை | 100 | 150 | 200 | 300 | 300 | 400 | 200 |

## மின்சார செலவைக் குறைக்க



வீட்டில் மின்சாரச் செலவைக் குறைக்க சில முக்கியக் குறிப்புகளை இங்கு பார்க்கலாம்.


வீட்டில் குண்டு பல்புகளுக்கு பதிலாக குழாய் பல்புகளை வாங்கிப் பொருத்தவும்.

எந்த மின் சாதனத்தையும் அதன் அதிகபட்சத்திறனுக்குப் பயன்படுத்தவும்.

சலவை இயந்திரத்தில் உலரவைப் பானைத் தேவையென்றால் மட்டுமே பயன்படுத்தவும். சூரிய வெளிச்சம் இலவசமாகக் கிடைக் கும் போது உலரவைப்பானின் தேவை நமக்கிருக்காது.

ஒரு சில துணிகளுக்கு இஸ்திரி போடுவதை விட, நிறையத் துணிகளுக்கு ஒட்டுமொத்தமாக இஸ்திரி போடுவது நல்லது.

வீட்டின் நீர்த்தொட்டியில் எவ்வளவு நேரம் நீர் ஏற்றினால் தண்ணீர் நிரம்பும் என்பதை அறிந்து கொண்டு அந்த நேரத்துக்குள் நீர் ஏற்றத்தை அணைத்து விடுவதும் நல்லது.




## எயார் பிறரையர்

எயார் பிறரையர் அறிமுகமாகியுள்ளது. இந்த இலத்திரனியல் சாதனம் மூலம் எண்ணெய் இன்றி உணவுப்பொருள்களைச் சமைக்க முடியும். வேகமாகவும் அதே நேரத்தில் ஆரோக்கியமான உணவுகளையும் தயாரிக்க முடியும். இதன் விலை 33,000 இலிருந்து 35,000 ரூபா ஆகும்.

## நாளை

தை-26
செவ்வாய்க்கிழமை 09.02.2016
திதி: பிரதமை மு.இ.07.48
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப.05.14
ராகுகாலம்: 03.35-05.05 வரை
சுபநேரம்: 11.05-12.35 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கு நட்பான மூன்று சான்றிதழ்களைப் பெற்ற இலங்கையின் ஒரே நிறுவனமாக ஜேஏரி (JAT) தெரிவு

கட்டடங்கள் பட்டைய கல்வியகத்தின் (CIOB) பெருமைக்குரிய மூன்று சூழலுக்கு நட்பான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்ட இலங்கையின் ஒரே நிறுவனமாக ஜேஏரி (JAT) ஹோல்டிங்ஸ் தெரிவு செய்யப்பட்டிருந்தது. நிறுவனத்தினால் பின்பற்றப்படும் புத்தாக்கமான கட்டட மற்றும் நிர்மாண மூலப்பொருள்களுக்கு கௌரவிப்பை வழங்கும் வகையில் இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் மூலமாக பின்பற்றப்படும் புவிக்கு முக்கியத்துவம் (Earth First) கொள்கையின் பிரகாரமான ஒழுக்கநெறியுடன் கூடிய செயற்பாடுகள் இந்த சான்றிதழ்களின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் நிலைபேறான செயற்பாடுகளில் வாடிக்கையாளர்களையும் பங்கேற்கச் செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளன.

CIOB சூழலுக்கு நட்புறவான விருது என்பது, சிங்கப்பூரின் கட்டடங்கள் மற்றும் நிர்மாண அதிகார சபை, நெதர்லாந்தின் கட்டடங்கள் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் ஆய்வுகள் மற்றும் புத்தாக்க நடவடிக்கைகளுக்கான சம்மேளனம், சிங்கப்பூரின் கிறீன் பில்டிங் சம்மேளனம் மற்றும் இலங்கையின் மத்திய சூழல் அதிகார சபை ஆகியவற்றின் பிரதிநிதித்துவத்துடன் வழங்கப்படுகின்றது.

இலங்கையின் நிர்மாணத்துறையை சூழலுக்கு நட்புறவான கட்டடங்களை நிர்மாணிப்பதை நோக்கி வழிநடத்திச் செல்வது இதன் நோக்கமாக அமைந்துள்ளது.

இந்த முறைகளைப் பின்பற்றி வருகின்றமையை கௌரவித்து, தயாரிப்புகள் பெயின்ட் மற்றும் மேற்பூச்சுகள் பிரிவில் இரு தங்க விருதுகளை பேர்மோகிளேஸ் எக்ஸ்ரீரியர் எமுல்சன் மற்றும் பேர்மோகினேஸ் இன்ரீரியர் எமுல்சன் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. வெள்ளி விருது பேர்மோகிளேஸ் வாட்டர் பேஸ்ட் எனாமல் தெரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் மூலம் இந்த விருதுகளைப் பெற்ற இலங்கையின் ஒரே நிறுவனம் எனும் பெருமையை ஜேஏரி (JAT) பெற்றுக் கொண்டது.

நாட்டில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களை விநியோகிப்பதுடன், புத்தாக்கம் மற்றும் நவீன தொழில்நுட்பங்களுக்கமைய பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய ஆய்வு மற்றும் அபிவிருத்திக் கூடத்தையும் கொண்டுள்ளது. புத்தாக்கமான நவீன தொழில்நுட்பத்தை உருவாக்குவது தொடர்பில் தனது தொடர்ச்சியான மேற்பார்வை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை வெளிப்படுத்தும் வகையில், ஜேஏரி (JAT) தேசத்தின் சூழல் பாதுகாப்பான செயற்பாடுகளுக்கும் தனது பங்களிப்பை வழங்கி வருகிறது.

ஜேஏரி (JAT) ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தெரிவுகளில், வீடுகளுக்கான அலங்காரப் பூச்சு வகைகள், தொழிற்துறைக்கான இமல்சன் வகைகள், வெளிப்புறச் சுவர்களுக்கான நிறப்பூச்சு வகைகள், பராமரிப்புப்பூச்சுகள், புற்றி (Putty) வகைகள் மற்றும் பிளாஸ்டர் வகைகள், மினரல் ஃபைபர் அல்லது ஶ்ரீல் சீலிங் வகைகள், பலகைத் தளங்கள் மற்றும் நிலங்கள், அலுவலக இருக்கைகள் மற்றும் மேசைகள், தச்சு வேலைச் செயற்பாடுகள், ஒட்டும் பசைகள் மற்றும் பெயின்ட் தூரிகைகள் போன்றவை அடங்கியுள்ளன. 1993 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது முதல், தொடர்ச்சியான நவீன, புத்தாக்கமான மற்றும் புரட்சிகரமான தீர்வுகளை முடிவுறுத்தல் துறையில் ஜேஏரி (JAT) வழங்கி வந்துள்ளது.

உலகப்புகழ் பெற்ற வர்த்தக நாமங்களான இத்தாலியின் சேயர்லாக் மரவேலை முடிவுறுத்தல்கள், பிரித்தானியாவிலிருந்து பேர்மோகிளேஸ் அலங்கார இமல்சன் மற்றும் வெதர் கோட் பெயின்ட் வகைகள் மற்றும் அமெரிக்காவிலிருந்து ஹேர்மன் மில்லர் தெரிவுகளையும் இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது. இலங்கையில் காணப்படும் சிறந்த 10 பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக ஜேஏரி (JAT) ஹோல்டிங்ஸ் திகழ்கிறது.

# மொபைல் வங்கிச் சேவை ஊடாக கொடுப்பனவு செய்வோருக்கு கொமர்ஷல் வங்கியிடமிருந்து பணப் பரிசுகள்

கொமர்ஷல் வங்கியின் மொபைல் வங்கிச் சேவையைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளைச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு எதிர்வரும் மூன்று மாதங்களில் ரூபா 1.5 மில்லியன் பெறுமதியான பணப்பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

குறைந்தபட்சம் ரூபா 2,500 பெறுமதியான மூன்று கொடுப்பனவுகளை மொபைல் வங்கிச் சேவை மூலம் செலுத்தும் வாடிக்கையாளர்கள் 300 பேருக்கு தலா ரூ.5,000 பெறுமதியான வெகுமதிகள் வழங்கப்படவுள்ளன. நீர், மின்சாரம், தொலைபேசி என்பனவற்றுக்கான கொடுப்பனவுகளை ஜனவரி 15 ஆம் திகதிக்கும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொமர்ஷல் வங்கி மொபைல் மூலம் செலுத்துவோர் பரிசுகளுக்கு உரித்துடையவராவர்.

வணிகம்

பெப்ரவரி 15, மார்ச் 15, ஏப்ரல் 15க்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சீட்டிழுப்பின் பிரகாரம் மாதத்துக்கு 100 பேர் வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

கைபேசி பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு கொமர்ஷல்வங்கி தமது சேவைகளை யூ.எஸ்.எஸ்.டி. (USSD) தொழில்நுட்பம் மூலம் வழங்க முன்வந்துள்ளது. எடிசலாட், டயலொக், மொபிடல் கைபேசி பாவனை யாளர்களுக்கு பல்வேறு வசதிகளையும் தொழில்நுட்பரீதியான செயற்பாடுகளையும் வங்கி வழங்கு கின்றது.

கணக்கிலுள்ள மீதிகளைக் கண்டறிதல், கடனட்டை மீதி பற்றி விசாரணைகள், சேவைக்கட்டணங்களின் கொடுப்பனவுகள், பணமாற்றல்கள், நாணய மாற்று வீதங்கள், PIN மாற்றங்கள், கைபேசி மீள்நிரப்பல்கள், சிறு வியாபார அறிக்கைகளுக்கான வேண்டுதல்கள் என்பன உள்ளிட்ட வங்கிச் சேவைகள் கொமர்ஷல் வங்கியினால் வழங்கப்படுகின்றன.

மேற்படி சேவைகள் அன்ஸ்ரக்ரேர்ட் சப்ளிமென்ரறி சேர்விஸ் டேற்றா (USSD) தளத்திலிருந்து வழங்கப்படுவதால், இவற்றை எந்தவொரு கைபேசியின் மூலமும் இணையத்தளத்தின் தேவை யின்றியே பெற்றுக் கொள்ள முடியும். மொபைல் வங்கிச் சேவை தொடர்பான மேலும் விவரங்களுக்கு 8823 ஐ டயல் செய்யலாம்.

தொடர்ச்சியாக ஐந்தாவது வருடமாக உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ள ஒரேயொரு வங்கியான கொமர்ஷல் வங்கி 247 கிளைகளைக் கொண்ட வலையமைப்பையும் 622 ஏ.ரி.எம்களைக் கொண்ட வலையமைப்பையும் இலங்கையில் இயக்கி வருகிறது.

2014ஆம் ஆண்டில் இலங்கையில் அதிபெறுமதியுள்ள தனியார் துறை நிறுவனமாகத் தரப்படுத்தப்பட்ட இந்தவங்கி பல வருடங்களாக பல்வேறு சர்வதேச வெளியீடுகளில் இலங்கையின் அதிசிறந்த வங்கிக்கான விருதுகளையும் வென்றெடுத்துள்ளது. இலங்கையின் தலைசிறந்த பத்து நிறுவனங்களில் ஒன்றாக 2013,14ஆம் ஆண்டுகளில் இலங்கை வர்த்தகசம்மேளனத்தினால் தரப்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கொமர்ஷல் வங்கியின் கடல்கடந்த செயற்பாடுகளில் 18 கிளைகளைக் கொண்ட பங்களாதேஷ், யங்கூனில் பிரதிநிதித்துவ அலுவலகத்தைக் கொண்ட மியன்மார் ஆகியனவும் அடங்குகின்றன. 2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மாலைதீவுக் குடியரசில் சகல அம்சங்களையும் கொண்ட வகை – 1 கிளையை அமைப்பதற்கான அங்கீகாரத்தை வங்கி பெற்றுள்ளது.

# நுட்பம்

## புதிய அம்சங்களுடன் வெளியாகும் ஐபோன் 7



அப்பிள் நிறுவனம் அடுத்த ஆண்டு அறிமுகம் செய்யவுள்ள ஐபோன் 7 பிளஸ் தொடுதிரை கைபேசியில் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தக் கைபேசியின் கமரா இரு வில்லைகளைக் கொண்டதாக (டபிள் லென்ஸ்) வடிவமைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கென சீனா, ஜப்பான் மற்றும் தயாய்லான் நிறுவனங்களின் இரட்டை வில்லைக் கமராக்களைப் பெற்று, அப்பிள் நிறுவனம் பரிசோதனைகளை நடத்தி வருகின்றது என்றும் தெரியவருகின்றது.

தற்போது ஐபோன் மற்றும் ஐபாட்டில் பயன்படுத்தப்படும் கமராக்களில் 60 வீதமானவை தாய்வானைச் சேர்ந்த லார்கன் ரெக்னோலஜி நிறுவனத்தாலேயே வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இந்தக் கைபேசியில் வேகம் கூடிய – அப்பிள் ஏ10 வகை புரஸசர்கள் இணைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## பயனாளருக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கும் வட்ஸ் அப்ஸ்

வட்ஸ் அப்ஸ் குரூப்பில் இணைத்துக் கொள்ளும் உறுப்பினர் எண்ணிக்கையை தற்போது 100 இலிருந்து 256 ஆக மாற்றப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் தற்போது 100 கோடிக்கும் அதிகமானவர்கள் வட்ஸ் அப்ஸ் செயலியைப் பயன்படுத்தி வருகின்றனர்.

சில நாள்களுக்கு முன்னர் வட்ஸ் அப்ஸ் சேவையை ஆண்டு சந்தா இல்லாது இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அந்த நிறுவனம் அறிவித்திருந்தது.

இந்தநிலையில் தனது பயனாளர்களுக்கு அந்த நிறுவனம் மற்றொரு இன்ப அதிர்ச்சியை வழங் கியுள்ளது. வட்ஸ் அப்ஸ் குரூப்பில் இணைத்துக் கொள்ளும் பயனாளர்களின் எண்ணிக்கை யையும் அதிகரித்துள்ளது. இந்த வசதி தற்போது சோதனை அடிப்படையில் உள்ளதால் அனைத்துப் பயனாளிகளும் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. விரைவில் இந்த வசதியை அனைவரும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்த

மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவரையும் காணாமற்போனோரின் உறவுகளையும் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது, அவர்களது கருத்துக்களைக் கேட்டறிந்தார். இதன் போது மீள்குடியேற்றச் சங்கத்தினிடம், சொந்த இடங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக ஹுசேன் தெரிவித்தார்.

அதன் பின்னர் காணாமற்போனோரின் உறவுகளிடம் அவர், பொறுமையாக இருங்கள். சகல விடயங்களையும் நாம் செய்வோம். இந்த விவகாரங்கள் தொடர்பில் விசாரிக்கின்றோம். விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன், வடக்கு மாகாண ஆளுநருடனும், வடமாகாண சபையின் முதலமைச்சருடனும் நடைபெற்ற சந்திப்புக்கள் ஆக்கபூர்வமானதாக இருந்தன. இந்தச் சந்திப்புக்களில் முக்கியமாக, மாகாண நிர்வாகம் எதிர்நோக்கியுள்ள சவால்கள் பற்றி ஆராயப்பட்டது.

ஐ.நா. தீர்மானத்தின் அடையப்பட்டுள்ள பெறுபேறுகள், காணாமற்போயிருப்பவர்கள், தங்கி வாழ்பவர்கள், தடுத்து வைக்கப்பட்டவர்களின் விடுதலை என்பன தொடர்பில் அறிவதற்காக மக்கள் கொண்டுள்ள ஆர்வம், அக்கறை பற்றியும் இந்தச் சந்திப்புக்களில் பேசப்பட்டது.

கொழும்பில் அரச உயரதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களின் தொடர்ச்சியாகவே இந்தக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் நேற்று (நேற்று முன்தினம்) தெரிவித்தவாறு, என்னுடைய பயணத்தின் போது இடம்பெறுகின்ற கலந்துரையாடல்கள் தொடர்பாக ஊடகங்களுக்குத் தொடர்ந்து வெளியிடுவேன். இன்று (நேற்று) இங்கு நடைபெற்ற கலந்துரையாடல்களில் நான் திருப்பதியடைந்திருக்கின்றேன் – என்றார்.

இறுதியாக வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் அமைந்துள்ள படிப்பகத்தில் மக்கள் சந்திப்பு நடத்தினார். இந்தச் சந்திப்பில், பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திக்க வேண்டும் என்பதற்காகவே இங்கு வந்தேன். மிகத் திருப்தியாக இருந்தது.

நீங்கள், என்னைப் போன்று இங்கு முன்னர் வந்தவர்களிடம் உங்களின் கதைகளைச் சொல்லிச் சொல்லியே சலித்துப் போயிருப்பீர்கள். ஆனாலும் உங்களிடம் கேட்டு, அதனை அரசிற்கு அழுத்தம் கொடுப்பது எங்களின் கடமை. நான் அடுத்த தடவை உங்களை, உங்களது சொந்த மண்ணில் சந்திப்பேன் – என்றார்.(த-வ-5-21-101-106-ரி2)

## பாதிக்கப்பட்ட

வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

**பொதுமன்னிப்பு இல்லை**

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்க வேண்டும் என்பது தொடர்பில் நாம் கருத்துக்களை முன்வைத்தோம். இதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன், சர்வதேச சமூகம் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிப்பதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. சிரியா விவகாரத்தில் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிப்புக்கு எதிராக தான் கருத்துத் தெரிவித்ததாக ஹுசேன் இதன் போது எங்களிடம் சுட்டிக்காட்டினார்.

அப்படியாயின் அவர்களது வழக்குகளை விசாரணைக்கு எடுத்துத் துரிதமாக விடுவிக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொண்டோம். அதற்கு அவர், இது தொடர்பில் தான் அரசுக்கு தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

**முன்னேற்றம் ஆராய்வு**

கடந்த வருடம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தின் முன்னேற்ற மீளாய்வு தொடர்பில் ஆராய்வதற்காகவே இங்கு வருகை தந்தாக, ஹுசேன் குறிப்பிட்டதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்திக்க வேண்டும் என்பதில் தான் ஆவலாக இருந்ததாகவும் அவர் இதன் போது தெரிவித்ததாக முதலமைச்சர் குறிப்பிட்டார். நாம் எமது மக்களின் பிரச்சினைகள் சகலவற்றையும் எடுத்துக் கூறினோம்.

வடக்கும் – தெற்கும் இணைந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நலன் கிடைக்கும் வகையில் செயற்பட வேண்டும் என்பதையும் ஆணையாளர் இதன் போது வலியுறுத்தினார்.

**பட்டியல் கையளிப்பு**

காணாமற் போனோர் தொடர்பில் எம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்ட 4 ஆயிரம் பெயர் விவரங்கள் அடங்கிய புத்தகத்தை ஆணையாளரிடம் நாம் கையளித்தோம் – என்றார்.

கடந்த வருடம் வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பான தீர்மானத்தின் பிரதி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அனுப்பியிருந்தீர்கள். இது தொடர்பில் ஏதாவது பேசப்பட்டதா என்று முதலமைச்சரிடம் கேட்ட போது, அது தொடர்பில் எதுவும் கதைக்கவில்லை என்றார்.

ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் போது, சர்வதேச நீதிபதிகளுக்கு இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தது தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய்யாளரிடம் ஏதாவது சுட்டிக் காட்டினீர்களா என்று கேட்டதற்கு, நாங்கள் வெளிப்படையாக பேசவில்லை. ஆனால் இந்த விடயத்தை குறிப்பிட்டிருக்கின்றோம். அதற்கு ஆணையாளர் எந்தப் பதிலும் தரவில்லை – என்றார்.

இதேவேளை, இலங்கை அரசின் அழைப்பை ஏற்றே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருகை தருவதாகவும் ஜெனிவாத் தீர்மானம் தொடர்பில் ஆராயமாட்டார் எனவும் வெளிவிவகார அமைச்சு கடந்த வாரம் தெரிவித்திருந்த நிலையில் ஹுசேன், இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-வ-5,21,101,106)

## ஐ.நா. தீர்மானம்

கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவா தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சினால், மேற்குலக நாடுகள், மற்றும் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக்வே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்ட கலந்தாய்வு செயல்முறைகளின் வரை முறைகள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளன. இணையத் தள செயல்முறைகள் எல்லாமொழிகளிலும் இடம்பெறவுள்ளன. அத்துடன், நேர்முக கலந்துரையாடல் செயன்முறை. குறிப்பாக சிறுவர்கள், இராணுவம், அங்கவீனமுற்ற போராளிகள், கணவனை இழந்தவர்கள், முன்னாள் போராளிகள் ஆகியவர்களை மையப்படுத்தி இடம்பெறவுள்ளது.

இதில் இணையத்தள செயல்முறைகள் ஐ.நா சிறப்பு அறிக்கையாளரின் வருகைக்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய, கலந்தாய்வு செயல்முறை செயற்றிட்டம், அடுத்த மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படும்.

இதற்காக மனோரி முத்தெட்டுவேகமவை தலைவராகக் கொண்ட 11 பேர் கொண்ட குழு அரசினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில், குறித்த செயலணிக்கு செயலாளராக கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து நியமிக்கப்பட்டதுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்னசிங்கம், உறுப்பினராக இடம்பெற்றுள்ளார். இவர்களுடன் காமினி வியாங்கொட, பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, விசாகா தர்மதாச, தர்மசிறி பண்டாரநாயக்க, கலாநிதி பர்ஸானா ஹனீபா, , மிராக் ரகீம், பேராசிரியர் தயா சோமசுந்தரம், கமீலா சமரசிங்க ஆகியோரும் குறித்த செயலணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.


இந்தச் செயலணி, நல்லிணக்கம் தொடர்பான வழிப்படுத்தும் குழுவுக்கு அறிக்கை அளிக்கும். பிரதமரின் செயற்குழு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை வடிவமைப்பது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடும்.

வழிப்படுத்தும் குழு தற்போது, கையில் உள்ள தெரிவுகள் குறித்து நிபுணர்களுடன் கலந்துரையாடி வருவதாக அரசு குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. கலந்தாய்வு செயலணிக்கு, செயலகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி அளித்துள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிவமயம்

(புலோலி)



வடமராட்சி, புலோலி தெற்கு, பல்லப்பையைச் சேர்ந்த சின்னத்துரை சிவமயம் 05.02.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கோணாத்தைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவசோதியின் ஆருயிர்க் கணவரும், சிவப்பிரியா(கனடா), சிவசுதன் (ஐக்கிய அமெரிக்கா), சிவசொரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமாரியின் (கனடா) அன்பு மாமனாரும், பவ்யா,காவியா ஆகியோரின் பாசமிகு பேரனும், இராசையா மற்றும் தெய்வநாயகி ஆகியோரின் சகோதரரும், பேராசிரியன், கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் பொன்மலர், பூங்கோதை, மங்கையர்க்கரசி, சிவநேசன், சிவமலர் ஆகியோரின் மைத்துனரும், விக்கினேஸ்வரமூர்த்தி மற்றும் காலஞ்சென்ற அம்பிகைபாகன் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2016) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பல்லப்பை,
புலோலி தெற்கு,
புலோலி.

(சி/29042)
(11,17,18)

தகவல்:
மனைவி மற்றும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினசாமி இரத்தினகுமார்

வேலணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசாமி இரத்தினகுமார் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு இரத்தினசாமி – அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும், இயந்திர தேவியின் கண வரும் பத்மசிறி, பிறேமா, தவரூபன், உதயன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பி.ப.4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேலணை மேற்கு தாளையம்பதி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்.

T.P.
077 - 1606599

### திருமதி பராசக்தி பகவத்சிங்கம்

(புதுவீதி - காரைநகர்)



தோற்றம் 09.11.1950 மறைவு 06.02.2016

சத்திரந்தை, களபூமி, காரை நகரைப் பிறப்பிடமாகவும் புது வீதி, காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி பகவத்சிங்கம் 06.02.2016 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், பகவத்சிங்கத்தின் (கோண் டாவில் அரச களஞ்சிய முன்னாள் பொறுப்பாளர்) பாசமிகு மனைவியும், தங்கேஸ்வரி (கனடா), உஷா (கனடா), புஸ்பகலா (லண்டன்), விக்னேஸ்வரி (லண்டன்), தனஞ்செயன் (மின்இணைப்பாளர் - அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கேதீஸ்வரன் (கனடா), பிரகலாதீஸ்வரன் (கனடா), ரமேஸ்குமார் (லண்டன்), விமலேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியங்கா, அஜந்தன், ஜெயந்தன், கஜனி, மாதினி, சாயினி, கேசவி, சஞ்ஜித், மதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கனகரத்தினம், மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், துரைசிங்கம், பராசக்தி, காலஞ்சென்ற சிவசக்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புதுவீதி, காரைநகர் (68753)(11,17,18) குடும்பத்தினர்.

077 914 6881, 021 490 2346

### அம்பலவாணர் மருதலிங்கம் (கிளி)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் மல்லாவி திருநகரை வதிவிடமாகவும், தற்காலிக வதிவிடமான தமிழ்நாடு சென்னையில் வாழ்ந்தவருமான அம்பலவாணர் மருதலிங்கம் (கிளி) 05.02.2016 வெள்ளிக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - கற்பகம் தம்பதிகளின் அன்பு மகனும், துரையப்பா - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும்,நந்தபாலன், சத்தியமூர்த்தி, காண்டீபன், சகஜா, கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2016 புதன் கிழமை சென்னையில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(83647)(11,18)

தகவல்: சகோதரர்கள்.

T.P: 077 937 7556, 077 089 8704,
0091 909 237 3265, 0091 9500 010 546

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்



## ஜேசுதாசன் மேரிஸ்ரெலா

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை சிவன் கோவிலடியை பிறப்பிடமாகவும் இல : 6/2. 1ம் வீதி, செல்வாநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் மேரிஸ்ரெலா 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை யேசுதாசன் (பேபி) அவர்களின் அன்பு மனைவியும் ஜெசிந்தா, சந்திரா, சீலன், ஜீவா, விஜயா, காந்தன், உதயன், குயிலா, ஆகியோரின் அன்பு தாயாரும் ஆவார்.


அன்னாரது பூதவுடல் இன்று (08.02.2016) திங்கட்கிழமை 316, 10ஆம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம், யாழ்ப்பாணம் இல்லத்தி லிருந்து மு.ப. 10.00 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு அன்னாரது செல்வாநகர், கிளிநொச்சி இல்லத்தில் மதியம் 2.00 மணியளவில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணியளவில் ஜெயந்திநகர் அந்தோனியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆனந்தநகர் சேமக்காலைக்கு நல்லடக் கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

அபி மோட்டோர்ஸ்(சுரேந்தன் கராஜ்) 077 844 9222
வஜிதா மோட்டோர்ஸ் (வசந்தன் கராஜ்) 077 125 6119

## வல்லிபுரம் செல்லத்துரை



நுணாவிலைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு மற்றும் 1 ஆம் கட்டை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை கடந்த 06.02.2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சீதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் இராசரத்தினம் - பூரணம் தம்பதியினரின் அன்பு மருமகனும் யோகேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும் மோகன் (கனடா), சசிதரன் (கனடா), பிரியதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் டிலானி (கனடா), நந்தசுசிலா (கனடா), துஷ்யந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விகாஷ், ஜோபிதா, ஹருனிக்கா, சியானிக்கா, டிலக்ஷன், நிதுஜா, ஜனுஷா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம் பிள்ளை, சின்னம்மா, சுப்பையா மற்றும் நாகமுத்து, குமாரசுவாமி ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1 ஆம் கட்டை பருத்தித்துறையில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (09.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனை விழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1 ஆம் கட்டை ஒழுங்கை,
புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(65919)

## சிறைக்குள்


இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தனது தந்தையான மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து விட்டு, சிறைக்கூண்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது, யோசித ராஜபக்சவின் சட்டைப்பையில் இருந்த கைத்தொலைபேசி கீழே விழுந்துள்ளது.

எனினும், சிறைச்சாலை அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் ஸ்ரீதரன்



பிறப்பு 13.10.1960 இறப்பு 06.02.2016

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஸ்ரீதரன் 06.02.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், சித்ராதேவியின் அன்புக் கணவரும், நிரோஷன், மாதுரி ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஜெயதேவி, இந்திராதேவி, காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் ரதிதேவி, சுபாஷினி, சாந்தாதேவி, ஜெயந்தி, பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மருதலிங்கம் - சாரதாதேவி தம்பதிய ரின் பாசமிகு மருமகனும், மலர்வண்ணன், ஜெயராமன், காவேரி, கோகிலா, ஜெயமோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.02.2016) திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பிற்பகல் 4 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத் தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(68750)(11,17,18)

தகவல்: மனைவி, மக்கள்.

077 732 3185, (0094) 011 254 4462



தோற்றம்: 24.02.1933 மறைவு: 05.02.2016

## திருமதி பகவதி சொக்கநாதன்

(யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய ஓய்வுபெற்ற ஆசிரியை)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி சொக்கநாதன் (05.02.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஓய்வு பெற்ற அதிபர் சொக்கநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சசிதரன் (நோர்வே), சுதாகரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும், பூரணி, சுஜிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், கஸ்விதன், வத்சலன், சுருதிகா, பரணிகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், பஞ்சரத்தினம், சந்திரராஜா, சொர்ணரத்தினம் மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாமதேவன், துரைராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது அச்சுவேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி.
021 790 2610

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவம் தொடர்பாக தாம் அறியவில்லை என்று, சிறைச்சாலைகள் திணைக்கள மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து தகவல்கள் கிடைத்தால், பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால், வாக்குமூலங்களை அளிக்க இரண்டு அதிகாரிகள் தயாராக இருப்பதாக, சிறைச்சாலையில் உள்ள புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## கைது

யலில் வைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து ராஜ பக்ச குடும்பத்தில், அடுத்து கைது செய்யப்படும் நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவும் இருக்கின்றனர்.

குறித்த இருவரும் உள்நாட்டு விமானப் பயணங்களுக்கு 150 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக செலவிட்டதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினரால், பொதுச்சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில், பசில் ராஜபக்ச மற்றும் நாமல் ராஜபக்ச ஆகியோர் அடுத்ததாகக் கைது செய்யப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ)

# மரண அறிவித்தல்கள்

## சபாபதிப்பிள்ளை பாலச்சந்திரன்



வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இணுவில் வீதி, மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை பாலச்சந்திரன் நேற்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை- கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் இராசலெட்சுமி தம்பதியரின் பாசமிகு மருமகனும் கலாதேவியின் அன்புக் கணவரும் அஜந்தன், யாழினி, துஷியந்தன், சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரேகாவின் அன்பு மாமனாரும் நீலாதேவி, கமலாதேவி, கலாதேவி, சுபத்திராதேவி, உதயாதேவி காலஞ்சென்ற செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தனேந்திரன் காலஞ்சென்ற அம்பிகராசா மற்றும் யோகநாதன், இராஜேஸ்வரன், பிரேம்குமார், காலஞ்சென்றவர்களான சாந்தகுமாரன் , தர்மராசா மற்றும் ஸ்ரீதரன், வரதராசா, ஆனந்தராசா, யோகராணி, விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருநாவுக்கரசு, நகுலேஸ்வரி தம்பதியின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(68757) (12.17.18)

077 044 0024, 077 449 4241

## திருமதி வள்ளிநாயகி நடராசா



யாழ்ப்பாணம், மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், காளிகோயிலடி, வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிநாயகி நடராசா கடந்த (05.02.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆச்சாரியார் வேலுப்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஆச்சாரியார் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் ரவீந்திரன் (பிரான்ஸ்), சுரேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம்,நடராசா, பாலகிருஷ்ணன் மற்றும் அப்புத்துரை, சின்னராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ராஜிதா (பிரான்ஸ்), விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் அன்ன லட்சுமி, இந்திராணி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனி யும் தாருஜன் (பிரான்ஸ்), அபினயா (பிரான்ஸ்), யதுசன் (பிரான்ஸ்), சாருகேசன், துளக்சிகா, லக்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி,வட்டுக்கோட்டை,
நி.மு பிராயடி, மயிலிட்டி வடக்கு,
காங்கேசன் துறை. (68548)

தகவல் - மகன்
ந.சுரேந்திரன் (சுரேஸ்)
T.P: 077 5017 103

## எங்கள்

**முதல்வருடன் முதற்சந்திப்பு**

இலங்கைக்கு நான்கு நாள் பயணமாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன் நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வருகை தந்திருந்தார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு அரைநாள் பயணமாக வருகை தந்தார். பலாலி விமான நிலையத்துக்கு விசேட விமானத்தில் வந்திறங்கிய ஹுசேன், அங்கிருந்து உலங்கு வானூர்தி மூலம் யாழ்.நகரை வந்தடைந்தார்.

முதலில் வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்துக்குப் பயணம் மேற்கொண்டார். அங்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான த.குருகுலராஜா, பொ.ஐங்கரநேசன், பா.டெனீஸ்வரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு இடம்பெற்ற அதே நேரத்தில், முதலமைச்சரின் அலுவலகத்தின் உள்ளே, காணாமற் போனோரின் உறவுகள், மீள்குடியேற்ற சங்கப் பிரதிநிதிகள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் செயலாளருடன் சந்திப்பு நடத்தினர்.

**சொந்த நிலம் வேண்டும்**

முதலமைச்சருடனான சந்திப்பை முடித்துக் கொண்டு, அவர்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம்,

வலி.வடக்கில் மீளக்குடியமர வேண்டிய மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் மனுவைக் கையளித்தோம். அதில் சகல விடயங்களையும் உள்ளடக்கியுள்ளோம்.

1983 ஆம் ஆண்டு கடல் பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு மக்கள் இடம்பெயரச் செய்யப்பட்டனர். இதன் பின்னர் இன்றுவரை வளம் கொழிக்கும் எங்கள் மண்ணும், 12 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையும் எங்களிடம் திரும்பக் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் இன்று இராணுவத்தினர் இருக்கும் பிரதேசம் யாவும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒளிப்படங்களையும் நாங்கள் அவர்களிடம் கையளித்துள்ளோம்.

மேலும், காணாமற் போனோரின் உறவுகள், தங்களின் உறவுகள் கண் முன்பாகவே கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டு பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டனர் என்று குறிப்பிட்டனர்.

அத்துடன் இராணுவத்தினரிடம் நேரில் கையளிக்கப்பட்ட எங்களின் உறவுகள் எங்கே என்பது இன்றுவரையில் தெரியவில்லை. அவர்களைக் கண்டுபிடித்து தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர் -என்றுகுணபாலசிங்கம்குறிப்பிட்டார்.

**மீள்குடியமர்வு வேண்டும்**

இந்தச் சந்திப்பை முடித்துக் கொண்டு வடக்கு மாகாண ஆளுநர் பளிகக்காரவையும், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனையும், வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் ஹுசேன் சந்தித்தார்.

இதன் பின்னர், நல்லூர் ஆலயத்துக்கு வருகை தந்தார். அங்கு முஸ்லிம் மக்கள் தங்களின் மீள்குடியமர்வு தொடர்பான கோரிக்கையை ஆணையாளரிடம் முன்வைத்தனர்.

அதனையும் பெற்றுக் கொண்ட அவர், நல்லூர் ஆலய வழிபாட்டை முடித்துக் கொண்டு கே.கே.எஸ். வீதி வழியாக, சுன்னாகத்திலுள்ள சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்துக்குச் சென்றார்.

**நிவாரணம் வேண்டாம்**

**எமது நிலத்தைத் தாருங்கள்**

நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை அவர் பார்வையிட்டார். அங்கிருந்த குடிசை வீடுகளின் ஊடாக அவர் பயணம் மேற்கொண்டு, அந்தப் பகுதியை சுற்றி வந்தார். இதன் போது அங்கிருந்த ஓர் வீட்டினுள் சென்று தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார். அங்கிருந்த மக்கள் எங்களுக்கு நிவாரணமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்எங்களைஎங்களின்சொந்த நிலத்தில் இருப்பதற்கு விடுங்கள் என்று கெஞ்சிக் கேட்டனர்.

இதேவேளை நலன்புரி நிலைய வீட்டில் இருந்தவர்களிடம், எத்தனை வருடமாக இடம்பெயர்ந்து இங்கு வந்து இருக்கிறீர்கள்?, முகாமிலை இருப்பதற்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதா?, உங்களுடைய சொந்த இடம் எது.? இதற்கு முதல் எங்களைப் போன்று வேறு யாராவது உங்களை வந்து பார்த்தார்களா? என்பதான கேள்விகளை அவர்களிடம் கேட்டு பதில்களையும் பெற்றுக் கொண்டார்.

இதன் பின்னர் அந்தக் குடும்பத்தினரிடம், இந்த வருடத்துக்குள் நீங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதற்கான சாத்தியம் ஏற்படும். அடுத்த வருடம் நாங்கள் இங்கு வரும்போது நீங்கள் உங்கள் சொந்த இடங்களில் இருப்பீர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**குழப்பம்**

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சபாபதிப் பிள்ளை நலன்புரி நிலையத்துக்குச் செல்வார் எனத் தெரிவித்து, அங்கேயே பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. திடீரென, ஆணையாளர் வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் கோணப்புலம் நலன்புரி நிலையத்துக்கே அவர் செல்வார் எனத் தெரிவித்து, பாதுகாப்பு முழுவதும் அங்கு மாற் றப்பட்டது. பின்னர் மீளவும் சபாபதிப் பிள்ளை நலன்புரி நிலையத்துக்கு மாற்றப்பட்டது.

இதேபோன்று, ஆளுநர் அலுவலகச் சந்திப்பின் பின்னர் நல்லூர்பின் வீதியிலுள்ள ஐ.நா. உலக உணவுத் திட்ட அலுவலகத்தில் சந்திப்பு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைய வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரும், வாகனத் தொடரணி வரும் போது அலுவலகத்துக்கு திரும்புவதற்கான சமிக்ஞையை காட்டிய போதும் அங்கிருந்த உயர் பொலிஸ் அதிகாரிகள், வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரை விலத்துமாறும் வாகனம் நேரே நல்லூர் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்றும் பணித்தனர்.

திடீர் மாற்றங்கள் குறித்து சாதாரண பொலிஸாருக்கு தெரிவிக்கப்படாமையினால் மேற்படி குழப்பம் ஏற்பட்டது.

**பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது**

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஹுசேன், பயணம் செய்த வீதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. கே.கே. எஸ். வீதியில் சபாபதிப்பிள்ளை முகாமிலிருந்து யாழ்.நகர் வரையில் வீதியின் இருமருங்கிலும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அத்துடன் சந்திப்புக்கள் இடம்பெற்ற இடங்களில் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

(கு-வ-5-21-101-106-ரி2)

## மரண அறிவித்தல்

திருமதி

### முத்தாபரணம் (குஞ்சு) பாலசிங்கம்



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பாலாவோடை இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்தாபரணம் (குஞ்சு) பாலசிங்கம்(06.02.2016) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், பாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), மதியாபரணம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் புவனே ஸ்வரி, இராசமலர் (லண்டன்), சிவபாதசுந்தரம் (ஓய்வு பெற்ற மின்சார அத்தியட்சகர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கீதாவின் (லண்டன்) பெரியம்மாவும், கிருபாகரனின் (லண்டன்) மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02. 2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்: கணவர்
பாலசிங்கம்

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் ஜெகநாதன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் ஜெகநாதன் (ஓய்வு பெற்ற களஞ்சிய காப்பாளர் - காணி அபிவிருத்தித் திணைக்களம்) அவர்கள் நேற்று (07.02.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வழக்கம்பரையைச் சேர்ந்த நாகரத்தினம் (அம்மம்மா ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை, பிரதான உறுப்பினர் மானிப்பாய் சத்தியசாயி நிலையம்) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நாகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், குகதாசன் (லண்டன்) அவர்களின் அன்புச்சகோதரனும், பத்மாவதி (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனரும் சத்தியபாமா (பாமா - லண்டன்), சிவகுமார் (ரஞ்சன் - லண்டன்), சுந்தரகுமார் (கரன்), ஜெயக்குமார் (குகன் - லண்டன்), விஜயலக்ஷ்மி (விஜயா - லண்டன்), ஜெனலக்ஷ்மி (ஜெனா - லண்டன்), ஜெனக்குமார் (லவன் - லண்டன்) அவர்களின் அன்புத்தந்தையும் ரதி (லண்டன்), ரவி (லண்டன்), ஷீலா (லண்டன்) அவர்களின் அன்பு சிறிய தந்தையும் காலஞ்சென்ற வேதரத்தினம் - கெங்காதரம் (இருபாலை) காலஞ்சென்ற தங்கரத்தினம் - இராமசிவம் மற்றும் முத்துக்குமாரசாமி (அப்பர் - வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்) - திலகவதி, காலஞ்சென்ற சிவஸ்ரீ சுந்தரராஜ குருக்கள் (வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்) மற்றும் விஜயலக்ஷ்மி, இராசரத்தினம் (இராசாத்தி) - ஜெயரட்ணம் (கனடா), காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் (துரை) மற்றும் லோகநாயகி (சந்திரா) - தெய்வக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் இரட்ணசபாபதி (லண்டன்), சிவகௌரி (ஜீவா - லண்டன்), மலரினி, கௌஷல்யா (கொழும்பு), சிவேந்திரன் (லண்டன்), கணேஸ்வரன் (கணேஷ் - லண்டன்), சாரதா (லண்டன்) அவர்களின் அன்பு மாமனும் ஷாயினி - மயூரன், ஷிவானி - பிரணவன், பிரேமசாயி, வீஷ்பன், கிருஷன், சாயிமா, விபூஷன், அஷ்வின், பிரவீன், சொனாலி, சிவேஷன், ஜனுஷன், கபர்தினி, லக்ஷன், ஆதிகீர்தனன், சௌமியா, மேதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஷகானா, மீனாக்ஷி, லக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (10.02.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை [illegible] உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible] ஒழுங்கை,
மானிப்பாய்.

தொடர்புக்கு: 021 492 1308


தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூசிலாந்து - ஆஸி. இறுதி ஆட்டம் இன்று

நியூசிலாந்து–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் முதலாவதில் நியூசிலாந்தும் இரண்டாவதில் ஆஸ்திரேலியாவும் வெற்றிபெற்று 1:1 என்று சமநிலையில் உள்ளன. இதனால் இன்று வெற்றிபெறும் அணிக்கே கிண்ணம் தீர்மானமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும். (ம)




# இங்கிலாந்து சகலதுறை அசத்தல் தென்னாபிரிக்கா மீண்டும் தோல்வி

இங்கிலாந்து–தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்ற இங்கிலாந்து தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக அம்லா மற்றும் டி கொக். இரண்டாவது பந்துப்பரிமாற்றத்திலேயே இலக்குச் சரிவு ஆரம்பமானது. நான்கு ஓட்டங்களுடன் வீழ்ந்தார் அம்லா. கொக் - பிளாசிஸ் இணை 11 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 50 ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. அதே பந்துப்பரிமாற்றத்தில் இலக்குச்சரிவும் இருக்கத்தான் செய்தது. 22 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் கொக். 4 ஓட்டங்களால் அரைச்சதத்தை தவற விட்டார் பிளாசிஸ். வில்லியர்ஸ் - டுமினி இணை மத்தியவரிசையில் ஆறுதல் தந்தது. ஆனால் வில்லியர்ஸின் விளாசல்கள் நேற்றுமுன்தினம் இடம் பெற்றிருக்கவில்லை. 70 என்ற சராசரியிலேயே விளையாடிக் கொண்டிருந்தார். 41ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே தென்னாபிரிக்கா 200 ஓட்டங்களை எட்டியது. அரைச்சதம் கடந்து 73 ஓட்டங்களுடன் வில்லியர்ஸ் ஆட்டமிழக்க டுமியின் இன்னிங்ஸும் நிறைவுக்கு வந்தது. பின்வரிசை வீரர்கள் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்ய முடிவில் தென்னாபிரிக்கா 262-7. பந்து வீச்சில் இங்கிலாந்து சார்பாக ரொப்லி 4 இலக்குகளையும், ஸ்ரொக்ஸ் 2 இலக்குகளையும், ரசிட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



எட்டக்கூடிய இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்துக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. அப்பொட்டின் பந்தில் போல்ட் ஆனார் றோய். கேல்ஸ் - ரூட் இணைய மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் 100 ஓட்டங்களை எட்டியது இங்கிலாந்து. ரூட்டையும் வெளியேற்றினார் அப்பொட். 99 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கேல்ஸ். மோர்கன், ஸ்ரோக்ஸ் இருவரும் பெரிதாக இல்லை. தென்னாபிரிக்காவின் பக்கமும் காற்று சிறிதாக வீசியது. இருப்பினும் பட்லர் - மொயின் அலி இணை 5 இலக்குகளால் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தது. ஆட்ட நாயகனாக கேல்ஸ் தெரிவானார். (ம)

# இந்தியா - இலங்கை முதல் ரி-20 நாளை

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் புனேயில் நாளை நடைபெறவுள்ளது.

இந்திய அணியின் தலைவராக டோனியும், இலங்கையின் தலைவராக சந்திமலும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆசியாக் கிண்ணத் தொடர், ரி-20 உலகக் கிண்ணத் தொடர் என்பன அடுத்தடுத்து நடைபெறவுள்ளதால் இந்தத் தொடரில் கோக்லிக்கு ஓய்வுகொடுக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக மலிங்க, மத்தியூஸ் இருவரும் இலங்கை அணியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. (ம)

# ஒன்பதாவது ஐ.பி.எல். தொடரில் எந்த அணியில் யார்?

நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் அடுத்த சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில் வீரர்களின் ஏலம் நேற்றும், நேற்றுமுன்தினமும் நடைபெற்றது. ஏலம் முடிவடைந்ததும் ஒவ்வொரு அணியிலும் எந்தெந்த வீரர்கள் இடம்பெற்றுள்ளனர் என்ற முழு விவரமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ரோயல் சலஞ்சேர்ஸ் பெங்களூர்**
விராட் கோக்லி, கிறிஸ் கெயில், வற்சன், வில்லியர்ஸ், மிச்செல் ஸ்ராக், டேவிட் வீஸ், எஸ்.அரவிந்த், கேன் ரிச்சட்சன், பின்னி, வருண் ஆரோன், கேதர் யாதவ், மந்தீப் சிங், ஆடம் மில்னி, சர்பராஸ் கான், சாமுவேல் பத்ரீ, ஹெட், ஹர்செல் பட்டேல், பிரவீண் துபே, நெகிம், விக்ரம்ஜித் மலிக், சாஹல், இக்பால் அப்துல்லா, கர்னேவர், விகாஸ் டோகாஸ், சச்சின் பேபி.

**ரைசிங் புனே சூப்பர் ஜெயின்ட்ஸ்**
டோனி, ரகானே, அஸ்வின், சிமித், மிச்செல்மார்ஷ், எம்.அஸ்வின், பிளாசிஸ், இசாந்த் சர்மா, கெவின் பீற்றர்சன், இர்பான் பதான், திசர பெரேரா, பாட்டியா, அசோக் டிண்டா, போலண்ட், ஸம்ப்பா, பீட்டர் ஹேண்ட்ஸ்கோம்ப், ஆர்.பி.சிங், ஈஸ்வர் பாண்டே, அன்கிட் சர்மா, அங்குஸ் பெயின்ஸ், ஜஸ்கரன் சிங், பாபா அபராஜித், தீபக் சாஹர்.

**குஜராத் லயன்ஸ்**
ரெய்னா, பிஞ்ச், ரவீந்திர ஜடேயா, பிரெண்டன் மக்கலம், பல்க்நெர், டிவைன் பிராவோ, பிரவீன் குமார், டிவைன் சிமித், டேல் ஸ்ரெயின், தினேஸ் கார்த்திக், தவால் குல்கர்னி, ஏகலவ்யா திவேதி, ஆண்ட்ரூ டை, இசான் கிசன், சதாப் ஜகதி, பிரவீண் தாம்பே, ஜெய்தேவ் சா, பிரதீப் சங்வான், அக்சதீப் நாத், பராஸ் தோக்ரா, உமங் சர்மா, அமித் மிஸ்ரா, சிவில் கவுசிக், சரப்ஜித் லட்டா.

**சன் ரைசர்ஸ் ஹைதரபாத்**
சிகர் தவான், யுவராஜ் சிங், நெஹ்ரா, டேவிட் வோர்னர், புவனேஷ் குமார், தீபக் கூடா, போல்ட், கரண் சர்மா, இயான் மோர்கன், முஸ்தபிசுர் ரஹ்மான், பரீந்தர் சரண், ஆதித்யா தாரே, மோய்சஸ் ஹெண்ட்ரிக்ஸ், கே.எல்.ராகுல், பர்வேஸ் ரசூல், கேன் வில்லியம்சன், பென் கட்டிங், நமன் ஓஜா, விஜய் சங்கர், அபிமன்யு மிதுன், ஆதித் ரெட்டி, டி.சுமன், பிபுல்சர்மா, ரிக்கிபுயி, சித்தார்த்கவுல்.

**மும்பை இந்தியன்ஸ்**
லசித் மலிங்க, பொலார்ட், ஹர்பஜன் சிங், கோரி அண்டர்சன், அம்பதி ராயுடு, ஜோஸ் பட்லர், நாது சிங், வினய் குமார், சவுத்தி, பாண்டியா, பார்த்திவ் பட்டேல், காமத், ஜஸ்பிரித் பும்ரா, ரோஹித் சர்மா, லெண்டில் சிம்மன்ஸ், சந்த், மக்கெல்நாதன், மெர்சண்ட் டி லாங்கே, சரேயஸ் கோபால், சித்தேலாத், அக்சய் வகாரே, ராணா, பாண்டியா, ஜே.சுசித், ஜிதேஸ் சர்மா, தீபக் புனியா.

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்**
கம்பீர், சுனில் நரைன், ரொபின் உத்தப்பா, சாவ்லா, யூசுப் பதான், மோர்னி மோர்கல், சகிப் அல் ஹசன், உமேஸ் யாதவ், மனிஸ் பாண்டே, ஜெய்தேவ் உனட்கட், அன்கிட் ராஜ்புத், கிறிஸ் லைன், ஜோன் கேஸ்டிங்ஸ், ஜேசன் கோல்டர், சூரியகுமார் யாதவ், ஆந்த்ரே ரசல், பிராட் ஹாக், குல்தீப் யாதவ், கொலின் முன்ரோ, ஆர்.சதீஸ், செல்டன் ஜாக்சன், மனன் சர்மா.

**கிங்ஸ் லெவன் பஞ்சாப்**
மில்லர், மிட்செல் ஜோன்சன், மோஹித் சர்மா, க்ளென் மக்ஸ்வெல், மனன் வோரா, முரளி விஜய், ரிசி தவான், விருத்திமான் சகா, சோன்மார்ஷ், கைல் அபொட், குர்கீரத் சிங் மான், சந்தீப் சர்மா, கே.சி.கரியப்பா, அக்சர் படேல், மார்கஸ் ஸ்டாய்னிஸ், நிகில் நாயக், பெஹார்டீன், அனுரீத் சிங், சரத்துல் தாக்கூர், பிரதீப் சாஹு, சவப்னில் சிங், அர்மான் ஜாபர்.

**டெல்லி டேர் டெவில்ஸ்**
பவன் நெகி, கிறிஸ் மோரிஸ், நேதன் கூல்ட்டர் நைல், மொகமது சமி, கார்லோஸ் பிரீத் வைட், சஞ்சு சாம்சன், கருண் நாயர், சகீர் கான், அமித் மிஸ்ரா, குவிண்டன் டி காக், ஸ்ரேயஸ் ஐயர், ஜே.பி.டுமினி, ரிசப் பண்ட், மயங்க் அகர்வால், இம்ரான் தாகிர், சாபாஸ் நதீம், சவுரவ் திவாரி, ஜோயெல் பாரிஸ், ஆல்பி மோர்கெல், சாம் பைலிங்ஸ், ஜெயந்த் யாதவ், பவன் சுயால், சாமா மிலிந்த், பிரத்யூஸ் சிங், மாஹிபால் லோர்மர், அகில் ஹெர்வாட்கர், கலீல் அகமது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 8

**றோயல்வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம் பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மன்னார் கில்லறி அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

**குணபாலசிங்கம் ஞாபகார்த்த தொடர்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் 40 வயதுக்குமேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு பாரதி அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**



வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட் கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'சி' அணியை எதிர்த்து பீனிக்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)



# சென்றலைட்ஸ் சொக்ஸ், கே.கே.எஸ். அணிகள் சம்பியனாகின ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடரில்

யாழ்ப்பாணம், பெப். 8

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்திய இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியும் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். அணியும் சம்பியனாகின.

யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந் தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பெண்கள் பிரிவில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து பமிலியன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் கே.கே.எஸ். அணி 58:42 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. தாக்குதல் பாணியுடைய வீரங்கனையாக கே.கே.எஸ். அணியின் பொபிற்றாவும் சிறந்த தடுப் பாட்ட வீராங்கனையாக பமிலியன்ஸ் அணி யின் எக்சிபாவும் தெரிவானார்கள்.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி மோதிக்கொண்டது. சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 88:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. தாக்குதல் பாணியுடைய வீரனாக சென்றலைட்ஸ் சொக்ஸ் அணியின் கிசாந்தனும் சிறந்த தடுப்பாட்டவீரனாக சுயனும் தெரிவானார்கள். இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மருத் துவர் கோபிசங்கரும், சிறப்பு விருந்தினராக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் பூபாலசிங்கமும் கலந்து கொண்டனர். (ம-23)



# மேரிஸை வீழ்த்தியது இரணை மாதா நகர் மேரிஸ்

பூநகரி கால்பந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்திவந்த கால்பந்தாட்டத் தொடரில் இரணைமாதாநகர் சென்.மேரிஸ் அணி சம்பியனாகியுள்ளது. முழங்காவில் விநாயகர் மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரணைமாதாநகர் சென்.மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி, பெப். 8

**நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.**

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் இடம் பெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் திருமதி ச.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் கலந்துகொள்ளவுள்ளார்.

**மணியகாரன் தோட்டப் பாடசாலை**

கரணவாய் மணியகாரன் தோட்டப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் அதிபர் ம.ஞானசம்பந்தனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

**வியாவில் சைவ வித்தியாலயம்**

வியாவில் சைவ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் நாளை பிற்பகல் 2.30 மணியளவில் வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் சு.சுந்தரலிங்கத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் க.சிவநேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

**கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்**

கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளன. வித்தியாலயத்தின் அதிபர் தி.சிவநாதனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

**பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம்**

பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை வித்தியாலயத்தின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. வித்தியாலயத்தின் அதிபர் ரி.பேரின்பம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினரும் விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனல்ட் கலந்துகொள்ளவுள்ளார். (ம-9-108-23-135)

# சென்.அன்ரனிஸ் யூத் அசத்தல்

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கபடி தொடரின் இறுதியாட்டத்தில் இரு பிரிவிலும் சென்.அன்ரனிஸ் யூத் அணிகள் சம்பியனாகின.

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதி ஆட்டங்களில் பெண்கள் பிரிவில் சென்.அன்ரனிஸ் யூத் அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் அணி மோதியது. இதில் சென்.அன்ரனிஸ் யூத் அணி 30:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. ஆண்கள் பிரிவில் சென். அன்ரனிஸ் யூத் அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் சென்.அன்ரனிஸ் யூத் அணி 39:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)



கிளிநொச்சி மாவட்ட சாரணர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று வரை நடைபெற்றது. (ம-21)

# தும்பளை நாவலரை வீழ்த்தியது பருத்தித்துறை யூத்

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தை 25 ஓட்டங்களால் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பருத்தித்துறை யூத் விளையாட்டுக் கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை யூத் விளையாட்டுக் கழகம் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழக[illegible] நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பருத்தித்துறை யூத் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சின்றோஸ் 20 ஓட்டங்களையும லோயி 13 ஓட்டங்களையும், பிரதீபன் 13 ஓட்டங்களையும் பெற்றனர். 54 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நாவலர் விளையாட்டுக் கழகம் 5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 28 ஓட்டங்களை மட்டுமே பெற்று 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக அசோக் 22 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் யூத் அணி சார்பில் சொனி 2 இலக்குகளையும், லோஜி மற்றும் சுதர்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ரி-20 ஆட்டத்தில் காயத்தால் டில்சான் விலகல்



முதலாவது ரி-20 ஆட்டத்திலிருந்து டில்சான் விலகியுள்ளார்.

காயம் காரணமாகவே டில்சான் விலகியுள்ளதாக அறியவருகிறது. டில்சானின் இடத்துக்கு இலக்குக் காப்பாளரான டிக்வாலா அழைக்கப்பட்டுள்ளார். தொடரில் இருந்து முழுமையாக விலகாமையால் காயம் சிறிதளவிலேயே ஏற்பட்டுள்ளதாகவும் இரண்டாவது, மூன்றாவது ரி-20 ஆட்டங்களில் டில்சான கலந்து கொள்வார் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள (ம)

# அரையிறுதிக்கு முன்னேறியது இலங்கை 19 வயதினருக்கான உலகக்கிண்ணத்தில்



நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டம் ஒன்றில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இலங்கை அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 49.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ரெயிலர் 42 ஓட்டங்களையும், கிரீன் 26 ஓட்டங்களையும், கர்ரன் 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக சில்வா 3 இலக்குகளையும், பெர்னான்டோ 2 இலக்குகளையும், நிமேஸ், என்.சில்வா, அசெலென்கா, மென்டிஸ், அசான் ஐவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய இலங்கைக்கு ஆரம்பம் கச்சிதமாக அமைய அந்த அணி 35.4 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக பெர்னான்டோ 95 ஓட்டங்களையும், அசெலென்கா 34 ஓட்டங்களையும், பண்டார 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக மக்மூட், கிரானி, லோறன்ஸ் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினார்கள். ஆட்டநாயகனாக பெர்னான்டோ தெரிவானார். (ம)

## மன்செஸ்டரை வீழ்த்தியது லெய்செஸ்டர்



இங்கிலாந்து பிரீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் சிற்றி அணியை வீழ்த்தியது லெய்செஸ்டர் சிற்றி அணி.

ஆட்டம் ஆரம்பித்து மூன்றாவது நிமிடத்திலேயே லெய்செஸ்டர் சிற்றி அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. அந்த அணியின் றொபேட் ஹூத் இக்கோலைப் பதிவுசெய்திருந்தார். மேலதிகக் கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் லெய்செஸ்டரின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடிவுக்கு வந்தது. 48ஆவது நிமிடத்தில் ரியாத் மஹ் ரேஸ் மேலும் ஓர் கோலைப் பதிவுசெய்ய லெய்செஸ்டரின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியானது. மன்செஸ்ரின் ஆட்டத்தில் வேகம் இருக்க வில்லை. 87ஆவது நிமிடத்தில் சேஜியோ அக்ரோ பிறிதொரு கோலை விளாச முடிவில் 3:0 என மன்செஸ்டரை வீழ்த்தியது லெய்செஸ்டர். (ம)


யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல உணவகம் ஒன்றிற்கு தங்கி நின்று பணிபுரியக்கூடிய வேலையாள்கள் தேவை

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- தேநீர், பழச்சாறு தயாரிப்பவர் (ஆண்/பெண்)
- சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
- காசாளர் (பெண்கள்)
- களஞ்சிய உதவியாளர்
- உணவக மேற்பார்வையாளர் (ஆண்/பெண் முன்னனுபவம் தேவை)

பாதுகாப்பான வசதியான தங்குமிடம் மற்றும் சுத்தமான உணவு இலவசம்

தொடர்புகொள்ளவும் : 0777911219

# மீள்வருகையின் பின்னர் தரப்படுத்தலை மீட்டெடுக்க முடியும் என்கிறார் பெடரர்



முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்து ஒரு மாதம் ஓய் விலுள்ள (இந்த மாதம் முழு வதும்) நட்சத்திர ரென்னிஸ் வீரரான பெடரர் ஓய்வின் பின்னரான மீள் வருகையின் பொழுது தனது தரப்படுத்தலை மீட்டெடுக்க முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ரென்னிஸ் உலகில் பெரும் ஆதிக்கம் செலுத்திவந்த தரப் படுத்தலில் மூன்றாம் நிலை வீரரான பெடரர் சமீப காலமாக தடுமாறி வந்தார். இதற்கு முழங்காலில் அவருக்கு நீண்ட நாள்களாக இருந்த உபாதையும் ஓர் காரணமாகச் சொல்லப்பட்டது. இதனால் குறித்த உபாதைக்கு அறுவைச் சிகிச்சை செய்துள்ள பெடரர் இந்த மாதம் முழுவதும் ஓய்வில் இருக்கும் படி பணிக்கப்பட்டுள்ளார். பெடரர் ஓய்வில் இருக்கும் பொழுது அவருக்கு அடுத்தடுத்த நிலைகளில் இருக்கும் வீரர்களான வாவ்ரிங்கா, நடால் இருவரும் தரப்படுத்தல் பட்டியலில் அவரை முந்திச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் பெரிதும் உள்ளன. இதனால் பெடரர் 5ஆவது இடத்துக்கு தள்ளப் படவுள்ளார். இந்நிலையில் ஓய்வின் பின்னர் மீள்வருகை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் பொழுது பெடரர் தடுப்படுத் தலைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்- நான் ஓய்வில் இருக்கும் இக்காலங்களில் எனக்கு அடுத்தடுத்த இடத்திலுள்ள வீரர்களால் தரப்படுத்தலில் பின்தள்ளப் படுவேன் என்பதை நன்கு அறிவேன். தரப்படுத்தலை விட உடற்தகுதி மிக முக்கியம். கடந்த வருடம் டிசெம்பர் மாதம் முழுவதும் ஓய்வில் இருந்தேன். அந்தக் காலத்தில் சத்திர சிகிச்சையை செய்திருந்தால் தரப்படுத் தலையும் தக்கவைத்திருக்கலாம். முடிந்தது முடிந்ததே. மீள் வருகையின் பொழுது இன்னும் அதிக பலத்துடன் வருவேன். தரப்படுத்தலை மீட்டெடுப்பேன் என்றார். (ம)

கணிக்கற்கை நெறிகள்

2015 O/L ,A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!
உங்களுக்காகவே விஷேட பிரிவுகள் ஆரம்பம். உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வரும் வரையுள்ள பொன்னான காலத்தை IIS இல் இணைந்து பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| Microsoft Office | Computerized Accounting |
| Multimedia | Eng. Drawing & AutoCAD |
| Web Designing | Visual Programming (C# /.NET) |
| DeskTop Publishing | Android Apps |
| Hardware Technology | Ethical Hacking |
| Java Programming | Networking |

மேலதிக விபரங்களுக்கு
071 777 4555

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 200 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4555

மாணவரின் உள்ளத்திலிருந்து

விவேக்வினுசாந், யாழ்ப்பாணம்



யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவனாகிய நான், 2015ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையில் கணிதப் பிரிவில் 2AB சித்தியுடன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகியுள்ளேன். பரீட்சையின் பின்னரான காலப்பகுதியில் IIS இல் AutoCAD கற்கைநெறியினை கற்றமை எனது பல்கலைக்கழக கற்கைநெறியின் ஆரம்பத்திற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இத்தகைய பயன்தரு கற்கைநெறிகளை வழங்கும் IIS நிறுவனமானது என் போன்ற மாணவர்களின் வளர்ச்சிப் பாதையின் ... அமைகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.